# GOSPEL SERMONNETTES

*J.C. Choate*

*Published by*

**WORLD LITERATURE PUBLICATIONS**
**WINONA/SINGAPORE/NEW DELHI**

உலக இலக்கியப் பதிப்பகம்,
ஜே. கோட்டை – 624 206. கொடைரோடு(P.O.)
திண்டுக்கல் மாவட்டம்.

© by J.C. Choate Publications

Printed in India, Sri Lanka, Singapore
Philippines, Ghana,
and South Africa

*Author :* **J.C. Choate**
Second Printing in U.S.A., 1993,
5000 copies

Translated in Tamil By
S.S. RAJAN

Printed :
Novelty Printers,
Madurai.

## DEDICATION

To

Bro. Sunny David and family and members of the church in New Delhi

சமர்ப்பணம்

சகோ. சன்னி டேவிட்

மற்றும்

அவருடைய குடும்பம்

தில்லி கிறிஸ்துவின் சபையார்

# அறிமுகம்

கடந்த 20 ஆண்டுகளாக நான் நிறைய கைப்பிரதிகள் எழுதியிருக்கிறேன். நான் இருந்த இடத்தையும், அப்போதைய தேவையையும் பொறுத்து இப்பிரதிகள் வித்தியாசப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் காணப்படும் கட்டுரைகள் முதலில் இங்கே ஆசியாவில் கைப்பிரதிகளாக வெளிவந்துள்ளன.

பாகிஸ்தான், கராச்சிக்கு நான் 1962ம் ஆண்டு வந்த போது, அங்குள்ள பணிகளுக்காக கைப்பிரதிகள் எழுதத் தொடங்கினேன். பின்னர் ஸ்ரீலங்கா கொழும்பு நகருக்குச் சென்ற பின் கராச்சியில் ஏற்கனவே வெளியிட்ட கைப்பிரதிகளை மீண்டும் மறு பதிப்பாக அச்சிட்டதோடு, அங்கு என்னை எதிர் கொண்ட குறிப்பிட்ட தேவைகளுக்காக நிறைய புது கைப்பிரதிகளை எழுதினேன். இறுதியாக தில்லிக்கு வந்த பின்னர் கராச்சியிலும், கொழும்பிலும் பயன்படுத்திய பிரதிகளை மீண்டும் அச்சிட்டு வெளியிட்டதோடு, பல கைப்பிரதிகளை புதியதாகவும் எழுதினேன். அதுமட்டுமல்ல, இந்த கைப்பிரதிகள் இந்தியாவின் பிற பகுதிகளிலும் ஆசியாவின் எல்லா நாடுகளிலும் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

புத்தக வடிவில் இப்போது இவற்றை வெளியிடும் என் நோக்கம் : இவையனைத்தையும் அதிக நிரந்தரமான ஒரு முறையில் கொண்டு வரவேண்டும்; அதின் மூலமாக வாசகருக்கு பலதரப்பட்ட கட்டுரைகளை அளிக்க வேண்டும்; அவர்கள் சத்தியத்தை ஆழமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்; மேலும் தேவனுடைய வார்த்தை கற்பிக்கிறதை அப்படியே அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

இந்த கைப்பிரதிகள் ஆயிரக்கணக்கில் மீண்டும், மீண்டுமாக, அச்சிடப்பட்டு, விநியோகிக்கப்பட்டுள்ளன. அவை எங்கெல்லாம் போய்ச் சேர்ந்தனவோ அங்கு எல்லாம் நல்லவைகளையே அவை செய்ய வேண்டும் என்பதும், கர்த்தரின் நாமம் அவற்றின்மூலம் புகழும் மகிமையும் அடைய வேண்டும் என்பதே என் ஜெப விண்ணப்பம். இந்த புத்தக வெளியீட்டிற்காகவும் நான் ஊக்கமாக ஜெபிக்கிறேன்.

— ஜே.சி. சோட்

# பொருளடக்கம்


1. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நீ ஏன் நம்ப வேண்டும் 1
2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனா 6
3. தேவனுடைய குமாரன் 10
4. விக்கிரக ஆராதனை என்ற பாவம் 16
5. கிறிஸ்துவின் இரத்தம் 21
6. கிறிஸ்து ஏன் மரித்தார்? 26
7. கிறிஸ்துவின் சபையை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 30
8. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினரா? 34
9. தேவனுடைய வார்த்தையோடு தர்க்கம் செய்யாதே! 39
10. கிறிஸ்துவின் சபை இந்தியாவில் எத்தனை ஆண்டுகள் இருக்கும்? 43
11. வேதாகமத்தைப் பற்றி நான்கு கேள்விகள் 48
12. உங்கள் நகரத்தில் அல்லது கிராமத்தில் கிறிஸ்துவின் சபையை நீங்கள் தொடங்குவது எப்படி? 52
13. கிறிஸ்துவின் நாமம் 56
14. நீ ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியும் 60

15. கிறிஸ்தவம் உனக்கு என்ன செய்யக் கூடும்? 65

16. இரட்சிக்கப்பட ஒருவன் என்ன
செய்ய வேண்டும்? 70

17. இரட்சிப்பின் திட்டம் 76

18. யார் இந்த இயேசுகிறிஸ்து? 80

19. புதிய பிறப்பு 85

20. இன்று தேவன் நம்மோடு நேரில் பேசுகிறாரா? 90

21. ஞானஸ்நானத்தின் நோக்கம் 95

22. "பெந்தெகொஸ்தேக்காரர்" என்றால் யார்? 101

23. "தொடக்கத்திலிருந்து" 106

24. ஒருவர் மீண்டும் திருமுழுக்குப்
பெறவேண்டுமா? 110

25. விசுவாசத்தினால் இரட்சிப்பு 114

26. புதிய ஏற்பாட்டு ஒற்றுமை 120

27. பாவங்கள் மன்னிக்கப்படுதல் 126

28. எந்தச் சட்டம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது? 129

29. பரிசுத்த ஆவியானவரின் அளவுகள் 134

30. அந்நிய மொழி 139

31. மதப்பெயர்களும், பட்டங்களும் 145

32. சுதந்திர போதகர்களும், சபைகளும் 150

33. கிறிஸ்துவின் இரண்டாவது வருகை 155

# 1. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நீ ஏன் நம்ப வேண்டும்?

உலக முழுவதிலுமுள்ள மக்களில் கோடிக்கணக்கானவர்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று நம்புகின்றனர். கேள்வி கேட்காமல், வேதாகமத்தை உண்மையென அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மற்றவர்கள் வேதாகமம் கூறுவதை பரிசோதிக்காததாலும், அதன் கனிகளை ருசித்துப் பார்க்காததாலும் அதை சந்கேக் கண்களுடன் பார்க்கின்றனர். இன்னும் சிலரோ வேதாகமத்தை முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். ஏனெனில் இவ்வுலகில் அவர்கள் பிறந்து, வளர்க்கப்பட்டது வேறு ஏதோ ஒன்றை ஏற்றுக் கொள்ளுவதற்காக, கடைசி இரு பிரிவுகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் இருக்க நேர்ந்தால், இக்கட்டுரை உங்களுக்காக எழுதப்படுகிறது. வேதாகமம் தேவனுடைய வசனம் என நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டுமென்பதற்கான சில காரணங்களை சுருக்கமாக உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

1. வேதாகமம் தேவனுடைய வசனம் என உரிமை கொண்டாடுகிறது. அது கர்த்தருடைய வசனம் என அழைக்கப்படுகிறது. எரேமியா 14 : 1 தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட படியே பேசினார்கள் என பேதுரு கூறினார். (2 பேதுரு 1:20, 21) பழைய ஏற்பாட்டை தேவனுடைய வசனம் எனக் கூறி, அதிலிருந்து கிறிஸ்து அடிக்கடி மேற்கோள் காட்டினார். (யோ 10:35) இறுதியாக, தேவனால் ஏவப்பட்டு நமக்கு இவை யாவும் அருளப்பட்டன என பவுல் நமக்குக் கூறுகிறார். (2 தீமோ 3 : 16, 17)

2. உண்மையான விஞ்ஞானத்தோடு வேதாகமம் ஒத்துப் போகிறது. உலகம் உருண்டை என்றும், சமுத்திரத்தில் பாதைகள் இருந்தன என்றும், இன்னும் நூற்றுக்கணக்கான இதர உண்மைகளையும் மனிதன் கண்டுபிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, வேதாகமம் அவற்றை கூறியிருந்தது. (ஏசாயா 40 : 22, சங். 8). இக்காரியங்களையெல்லாம் அவ்வளவு காலத்திற்கு முன்பாகவே வேதாகம எழுத்தர்கள் எவ்வாறு அறிந்திருந்தனர்? தேவன் அவர்களுக்கு அதை வெளிப்படுத்தியிருந்தார்.

3. தொல்பொருள் ஆராய்ச்சியின் பல கண்டுபிடிப்புகள் வேதாகம உண்மைகளை உறுதி செய்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காரியங்களை இவ்விதக் கண்டுபிடிப்புகள், வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன. ஆனாலும் அவை அனைத்தும் வேதாகமம் கூறும் உண்மைகளை முற்றிலுமாக ஒத்தே அமைந்துள்ளன. ஜலப்பிரளயத்தைப் போன்ற சில வேதாகமக் கதைகளை சந்தேகப்பட்ட மக்கள் இருந்தனர். ஆனால் 1872ம் ஆண்டு ஜியார்ஜ் சுமித் கண்டுபிடித்த பாபிலோனிய கல்வெட்டுகள் ஜலப் பிரளயத்தைப் பற்றியும் கூறுகின்றன. மற்றும் பல உதாரணங்களைக் காட்ட முடியும்.

4. வேதாகமம் புவி இயலும் ஒத்துப் போகின்றன. இக்காலத்திலுள்ள மலைகள், நதிகள், நகரங்கள் போன்றவைகளை இன்றுள்ள பெயர்களிலேயே வேதாகமம் குறிப்பிடுவதைக் காணலாம். உண்மையிலே இல்லாத பல இடங்களின் கற்பனை பெயர்களை வேதாகமம் பட்டியலிட்டுக் கூறவில்லை என்பதை இது தெளிவாக்குகிறது.

5. வேதாகமும் உலக சரித்திரமும் ஒன்றொடொன்று ஒத்துப் போகின்றன. உதாரணமாக உலகத்தில் பல சரித்திர நிகழ்ச்சிகளில் நடைபெற்றதாக விளக்கப்பட்டுள்ள காரியங்களை ஏற்கனவே வேதாகமம் கூறியிருக்கிறது. வேதாகமம் வெறும் கட்டுக் கதைகள் அடங்கிய புத்தகமாக இருப்பின் இது எவ்வாறு சாத்தியமாகும்?

6. வேதகாமம் மனிதனால் மட்டுமே எழுதப்பட்டிருக்க முடியாது; ஏனெனில் அதில் காணப்படும் பல காரியங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாக இருக்கின்றன. மனிதன் மட்டுமே அதை எழுதி இருந்தால், இந்நாள் வரை வேறு ஒரு மனிதனும் கூட ஏன் அதற்கு ஈடான ஒரு புத்தகத்தை எழுதக் கூடாமற் போயிற்று? மனிதன் அதை எழுதி இருந்தானானால், இன்று அதைவிடச் சிறந்த வேறு ஒரு புத்தகத்தை மனிதன் எழுதியிருப்பான்.

7. வேதாகமம் ஒரே காரியத்தைப் பேசும் ஒரு வியப்பான புத்தகம். 1600 ஆண்டுகளாக 40 வித்தியாசமான, பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு பல இடங்களில் வசித்து வந்தவர்களால் வேதாகமம் எழுதப்பட்டிருந்த போதிலும், அவை அனைத்தும் ஒரே பூரணமான புத்தகமாக அமைந்துள்ளது. அதை எழுதும் பணியில் முழுவதுமாக தேவனுடைய வழிகாட்டுதல் இல்லாத பட்சத்தில் அது எவ்வாறு சாத்தியமாகும்?

8. வேதாகமம் பல தீர்க்கதரிசனங்களை தன்னுள் அடக்கியுள்ளதோடு மட்டுமன்றி, அவை எவ்வாறு நிறைவேறின என்பதையும் வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, கர்த்தருடைய ஆவி எப்போது ஊற்றப்படும் என்ற காலத்தைப் பற்றி யோவேல் 2:28, 29 வசனங்களில் எழுத்தர் குறிப்பிடுகிறார். பின்னர் அப்போஸ்தலர் நடபடி 2ம் அதிகாரத்தில், யோவேல்

தீர்க்கதரிசியால் அன்று கூறப்பட்டது, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என பேதுரு கூறுகிறார். கிறிஸ்துவைப் பற்றிய பல தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. அவை அனைத்தும் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியிருக்கின்றன. (ஏசாயா 53:5; லூக்கா 22:63, 64 வசனங்களைப் படியுங்கள்)

9. காலத்தின் சகல சோதனைகளையும் வென்று, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நிலைநாட்டியுள்ளது. அதற்குப்பல எதிரிகள் இருந்து வந்தனர். ஆனால் அனைவரும் தோற்றுப் போயினர். பல நூற்றாண்டுகளாக அது பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பழங்கால மூலப்பிரதிகளுடன் இன்றைய மொழியாக்கங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அவை சீராக இருப்பது விளங்கும்.

10. மனிதனுடைய பெரிய கேள்விகளுக்கு வேதாகமம் விடை அளிக்கிறது. மனிதன் எங்கிருந்து வந்தான்? வாழ்வில் அவனுடைய இலட்சியம் என்ன? அவன் எங்கே போகிறான்? இவை அனைத்திற்கும் விடை அளிக்கும் ஒரே புத்தகம் வேதாகமம் மட்டுமே. மனிதர்கள் தேவனிடத்திலிருந்து வந்தனர். (ஆதியாகமம் 1:26, 27). அவனைப் படைத்தவரை மகிமைப்படுத்துவதே அவனுடைய இலட்சியம் (1 பேதுரு 4:11); அவன் நித்தியத்தை ஏதாவது ஒரு இடத்தில் நிச்சயமாக அனுபவிப்பான் (மத்தேயு 25:46).

11. உலகம் முழுவதிலும் உள்ள எந்த ஒரு புத்தகமும் மனிதனிடம் செய்ய முடியாத மிகப்பெரிய, மிகச் சிறந்த தாக்கத்தை வேதாகமம் செய்துள்ளது. உலகத்தில் கெட்டவர்கள் இருந்த போதிலும், வேதாகமத்தின் தாக்கத்தால் மட்டுமே தான் உலகத்தில் நல்லவர்கள் பலர் இருக்கின்றனர்.

வேதாகமம் ஒருபோதும் அழியாது. யோவான் 12:48ம் வசனத்தில் கிறிஸ்து அவ்வாறு கூறுகிறார்.

எனவே, உண்மையிலேயே வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. தேவனிடமிருந்து அது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவே சத்தியம், பூமியிலிருந்து பரலோகத்திற்குச் செல்ல அது வழிகாட்டி. அதை விசுவாசித்து, அதன் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, அதின் வாக்குத்தத்தங்களால் ஆசீர்வதிக்கப்படுவீர், நிச்சயமாக, இப்போது நீங்களும் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்புவீர்கள்.

# 2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனா?

இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்காவிட்டால், இதோ உங்களுக்காகவே இச்செய்தி எழுதப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனை விட அல்லது ஒரு தீர்க்கதரிசியை விட இயேசு மேலானவராக இருந்தார் என்று காட்டும் பல சாட்சிகளும், நிகழ்ச்சிகளும் இருக்கின்றன. மாறாக, அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக பல காரணங்கள் உள்ளன. அவையாவன.

1. ஆதியிலே தேவனோடு இயேசு இருந்தார். ஆதியாகமம் 1:26 வசனத்தில் நாம் படிக்கிறோம். "பின்பு தேவன், நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக .... என்றார்" யோவான் 1:1 கூறுகிறது : "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது". தொடர்ந்து கூறும் வசனங்களில் இவரே கிறிஸ்து என்று காட்டுகிறார்.

2. தீர்க்கதரிசனமாக இயேசு முன்னறிவிக்கப்பட்டிருந்தார். கிறிஸ்துவைப் பற்றிய விவரங்களையும் அவர் வருகையின் அவசியத்தைப் பற்றியும் ஏசாயா 53ம் அதிகாரத்தில் தீர்க்கன் கூறுகிறார். பின்னர் அப். 8:32, 35ல் எத்தியோப்பிய மந்திரி ஏசாயா 53ம் அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருப்பதை பிலிப்பு கண்டு, அதே சுவிசேஷத்தில் தொடங்கி இயேசுவைப் பற்றி அவனுக்கு பிலிப்பு போதித்தான். ஏசாயா இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசனமாக உரைத்தார் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. இது போன்ற பல தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன.

3. ஒரு கன்னியிடத்திலிருந்து இயேசு பிறந்தார். உலக பூர்வமான தந்தை அவருக்கு கிடையாது என இதற்குப் பொருள் மாறாக, தேவனே அவருடைய தந்தையாக இருந்தார். தமது பிதாவை பரலோகத்தில் விட்டு விட்டு, தாழ்மையாக தனக்குத் தானே மனித உருவெடுத்து, ஒரு கன்னி மூலமாக அற்புதமாக பிறந்தார். இதுவும் அவரைப் பற்றிய ஒரு தீர்க்க தரிசனத்தின் நிறைவேறுதலாகும். (மத் 1:18-25, ஏசாயா 7:14).

4. இயேசு ஒரு பூரண மனிதராக இருந்தார். அவர் ஒருவரே இவ்வுலகில் பூரணமான வாழ்க்கை அல்லது பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தவராக காணப்பட்டார். கிறிஸ்துவின் அடிச்சுவட்டை நாம் பின்பற்ற வேண்டும் என்று பேதுரு அறிவிக்கிறார். "அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவும் இல்லை. (1 பேதுரு 2:22) அவருடைய பாவமற்ற வாழ்வின் காரணமாக பாவிகளுக்காக அவர் மரிக்கவும் இப்படியாக உலகத்திற்கு நம்பிக்கையை கொண்டு வரவும் முடிந்தது. (1 யோவான் 3:5).

5. தீர்க்க தரிசனங்களை நிறைவேற்ற இயேசு வந்தார். "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்". (மத் 5:17) என்றார்.

6. இயேசு அநேக அற்புதங்களைச் செய்தார். நோயாளிகளை சுகப்படுத்தினார். செவிடர்களைக் கேட்கச் செய்தார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். சகலவித வியாதிகளையும் சுகப்படுத்தினார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு அற்புதமாக உணவளித்தார். தண்ணீரின் மேல் நடந்தார். " ....... அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோ 2:23) என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது.

7. இயேசு தேவனுடைய குமாரன் என்று அவருடைய சீடர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டார். "சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்". (மத் 16:16) இது போன்ற எண்ணற்ற ஒப்புதல்களைக் காட்ட முடியும்.

8. இயேசு தேவனுடைய குமாரன் என பிசாசுகளால் அறிக்கை செய்யப்பட்டார். "பிசாசுகளும் நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்" (லூக்கா 4:41).

9. தம்மை தேவனுடைய குமாரன் என இயேசுவே சொன்னதாக பிறர் கூறுகின்றர் : "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணம் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" (யோவான் 10:36)

10. இயேசு தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டார். தேவனுடைய குமாரன் என அவர் மகிமைப்படத்தக்கதாக, லாசருவை மரித்தோரிலிருந்து அவர் உயிரோடு எழுப்பினார் (யோ. 11:4).

11. தேவனால் தம்முடைய குமாரன் என இயேசு அங்கீகரிக்கப்பட்டார், "... இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்..." (மத் 17:5)

12. மரித்தோரிலிருந்து இயேசு உயிரோடு எழுந்தார். ".... பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:5).

13. விசுவாசிப்பவர்களுக்கு இயேசு ஜீவனை அளிக்கக் கூடியவராக இருக்கிறார் : “இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது” (யோவான் 20:31).

14. இயேசு மீண்டும் வருகிறார். “..... நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்”. (யோவான் 14:3)

15. இயேசுவை தேவனுடைய குமாரன் என்று உலக சரித்திரமும் ஒப்புக்கொள்ளுகிறது.

16. இயேசு இன்று ஜீவிக்கிறார், அவர் நித்தியத்திற்கும் ஜீவிப்பார்.

வேதாகமத்திலும், அதற்கு வெளியிலும் எண்ணற்ற சாட்சியங்களும் நிரூபணங்களும் உள்ள போதிலும் இடமின்மையால் அவை அனைத்தையும் இங்கு வெளியிட இயலவில்லை என்றபோதிலும் இங்கு குறிப்பிட்டவைகளை நீங்கள் படித்து தீர்மானம் செய்யுங்கள்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆம் என்றால், அவரை அறிக்கை செய்து (மத்தேயு 10:32) அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படியுங்கள், அவர் வழியாக நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறுங்கள். (அப். 2:38; மாற்கு 16:16; கொலோ. 1:27).

# 3. தேவனுடைய குமாரன்

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருக்கிறார் என வேதாகமம் தெளிவாகக் கற்பிக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள இயலாது என சிலர் கருதுகின்றனர். இது எவ்வாறு சாத்தியமாகும் என அவர்கள் கேட்கின்றனர். எனவே இதை மறுக்கவும் செய்கின்றனர். அவர்களுடைய பிரச்சனை என்னவென்றால், இக்காரியத்தை மனித மட்டத்தில் புரிந்துகொள்ள முயற்சிப்பதுதான் "தேவனுக்கு ஒரு குமாரன் எப்படி இருக்க முடியும்?" என அவர்கள் கேட்கின்றனர். "தேவனுக்கு ஒரு குமாரன் இருப்பின் அவருக்கு ஒரு மனைவியும் இருக்க வேண்டுமே?" என வினவுகின்றனர். ஆகவே இதை அபத்தம் என அவர்கள் நினைத்து விட்டு விடுகின்றனர். ஆனால் நாம் இக்காரியத்தை மீண்டும் திறந்து, உண்மைகள் என்னவென்று பார்க்கலாம்.

வித்தியாசமான கருத்துக்களில் ஒருவர் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படலாம் என வேதாகமம் கூறுவதைக் கவனத்தில் கொண்டு நாம் இதை தொடங்கலாம்.

1. தேவன் மனிதனை உண்டாகக்கியிருக்கிறபடியால், மாம்ச பிரகாரமாகப் பேசும்போது, எல்லாருமே தேவனுடைய குமாரர்கள் என வகைப்படுத்த இயலும். ஆதியாகமம் 6:2ம் வசனத்தில் இது காணப்படுகிறது. மனிதன் தேவனுடைய படைப்பு (அப். 17:28). எனவே, ஒருவன் நல்லவனாக இருந்தாலும் அல்லது கெட்டவனாக இருந்தாலும், தேவனை தொழுதுகொள்ளுகிறவனோ அல்லது தொழுது கொள்ளாதவனோ எப்படியிருந்த போதிலும், ஆத்தும சரீரத்துடன் அவன் தேவனுடைய படைப்பாக இருக்கிறான். இந்த மாம்ச உலகில் அவனை தேவனுடைய குமாரன் அல்லது பிள்ளை என

வகைப்படுத்தலாம் என்றாலும் பாவத்தின் காரணமாக, அவனை உண்டாக்கினவரிடமிருந்து பிரிந்து போன நிலையில் இப்போது அவன் இருக்கிறபடியால் மீட்கப்பட அல்லது திருப்பிக் கொண்டுவரப்படவேண்டியவனாக இருக்கிறான் (எபே. 2:16 கொலோ 1:14).

2. இஸ்ரவேல் நாட்டை தனது குமாரன் எனத்தேவன் குறிப்பிட்டார். அது உண்மையே. ஏனெனில் மாம்சப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய விதத்திலும் அவர்கள் அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக இருந்தனர். "இப்பொழுது நீர் பார்வோனோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன் எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன். அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்." (யாத் 4:22, 23)

3. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம், ஆவிக்குரிய விதத்தில் ஒருவன் தேவனுடைய குமாரனாகிறான். "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14). பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறு பிள்ளையாயிருக்கும் காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை. தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கின்றான். அப்படியே நாமும் சிறு பிள்ளையாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம் நாம்

புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முமடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராய் இருக்கிறபடியால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால், இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய் நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயிருக்கிறாய். (கலா 4:1-7)

குமாரர்களாக இருப்பதால், அது நம்மை தேவனுடைய பிள்ளைகளாக்குகிறது. கவனியுங்கள் "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள். ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தெரிந்துக் கொண்டீர்கள்". (கலாத்தியர் 3:26, 27) "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி...." (எபே 5:1) "இதனாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவன் அல்ல" (1 யோவான் 3:10). "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம்" (1 யோவான் 5:2).

4. இறுதியாக கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதாக ஒரு சிறப்புக் கருத்தில், ஒரு தனிப்பட்ட முறையில், ஒரு தந்தை மகன் உறவில் பேசப்படுகிறார். தொடக்கமாக கிறிஸ்துவை தமது குமாரனாக தேவன் ஏற்றுக்கொண்டார். "அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாக்கி இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (மத்தேயு 3:17). மீண்டும், தேவன் கூறினார் "... இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவி கொடுங்கள் ...." (மத். 17 : 5) ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என கிறிஸ்துவை பேதுரு அறிக்கை செய்தார். (மத். 16:16) உலகத்தின் பாவங்களுக்காக மரிக்க, தமது சொந்த குமாரனை தேவன் அனுப்பினார் (யோவான் 3:16, 17 : ரோமர் 8 : 3). கிறிஸ்து தேவனுடைய குமாரன் எனப் போதிக்கப்பட்டார் (அப் 9:20). இப்படிப்பட்ட இன்னும் பல அறிவிப்புகளைச் சொல்லிக் கொண்டே போக முடியும். ஆனால், இவை போதுமானது.

அப்படியானால், கிறிஸ்து எப்படி தேவனுடைய குமாரனாக இருந்தார்? ஆதியில் அவர் தேவனோடு இருந்தார் என்பது ஒரு காரியம் "ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலேதேவனோடிருந்தார்". (யோவான் 1:1, 2). படைப்பில் அவர் பங்கேற்றார் ".... நமது சாயலாக மனிதனை உண்டாக்குவோமாக..." (ஆதி 1:26) என தேவன் கூறினார். எபிரேய எழுத்தர் கூறுகிறார்; "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்". (எபி. 1:2) "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1:3) என யோவான் கூறுகிறார்.

பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என்ற தேவத்துவத்தின் ஒரு பாகமாக கிறிஸ்து இருந்தார் (மத் 28:20). கிறிஸ்துவைப்பற்றி பேசும்போது, பவுல் எழுதுகிறார். "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும், சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்". (கொலோ 2:9, 10) ரோமர் 1:20 ஐயும் படியுங்கள்.

தேவன் ஆவியாக இருப்பதால், கிறிஸ்துவும் தேவனோடு ஆவியாக வாசம் செய்தார். பின்னர் இறுதியாக, குறிக்கப்பட்ட நேரத்தில், வாக்குத்தத்தம் பண்ணினபடியே, நமது பிதாவை விட்டு இவ்வுலகத்திற்கு வந்தார். மனித சாயலை தரித்துக்கொண்டு இவ்வுலகில் கன்னிமரியாளிடத்தில் பிறக்கவும், தமது பணியை நிறைவேற்றவும், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கவும், அடக்கம் செய்யப்பட்டு, பின் உயிர்த்தெழுந்து பரலோகத்தில் உள்ள தமது பிதாவினிடத்தில் திரும்பிச் சென்று இந்நாள் வரை வீற்றிருக்கவும் செய்கிறார். (மத் 1:21; யோவான் 3:1 17; கலா 4:1; யோவான் 4:9; 1 யோவான் 4:14; கொரி 15 : 1-4; அப் 2).

கிறிஸ்து ஆதியிலே தேவனோடு இருந்தபோதிலும், நித்திய வாழ்வுடையவராக இருப்பினும், அவர் கர்த்தராக இருந்தாலும், தேவனுடைய சிறப்புத் தன்மையைப் பெற்றிருந்தாலும், அவர் பிதாவாகிய தேவன் அல்ல. ஒரே பிதா ஒரே கிறிஸ்து, ஒரே ஆவியானவர் இருக்கின்றனர். (எபே. 4:1-6) அவர்கள் ஒன்றாக இருப்பினும் மூவராக இருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்டவர். அவரவருக்கு ஒரு வேலை உண்டு, அவர்கள் தேவத்துவத்தில் ஒரு அங்கமாயிருக்கின்றனர்.

தேவனுக்கு ஒரு குமாரன் இருக்க முடியாது என்று கூறுவது, தேவனுக்கு வரம்பு நியமித்தலாகும். அதை நாம் செய்யக்கூடாது. நாம் முற்றிலுமாக அதை புரிய முடியாமலிருக்கலாம். ஆனால், நாம் தேவனை முழுவதுமாகப் புரிந்து கொள்ள இயலாது. தேவனும் அவருடைய குமாரனும் தெய்வங்கள் நாமோ மனிதர்கள். விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளுவதை, நாம் அறிந்துகொள்ள முடியாது. இக்காரியங்களைப் பற்றி நீங்களும் நானும் எதையாவது அனுமானிக்கக்கூடாது. சகல காரியங்களும் தேவனையே சுட்டிக் காட்டுகின்றன. அவருடைய வார்த்தையை நமக்கு அவர் தந்திருக்கிறார். அந்த வார்த்தையின் வழியாக அவருடைய குமாரனை நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் தேவனுடைய குமாரன் எனக் குறிப்பிட்டுக் காட்டும் பல சாட்சியங்கள் உண்மைகள், நிரூபணங்கள் உள்ளன. எனவே, அவர் கூறினார். "…. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்…" (யோவான் 14:1) உண்மையிலே நம்மால் முடியும். நாம் செய்ய வேண்டும், இல்லையேல் நமது பாவங்களில் மரித்துப்போவோம். (யோவான் 8:24)

# 4. விக்கிரக ஆராதனை என்ற பாவம்

ஒரு 'தேவன்' அல்லது ஒரு 'தேவதை'யின் சாயலாக மரத்திலோ, கல்லிலோ, அல்லது உலோகத்திலோ செய்யப்படுவது விக்கிரகம் எனப்படும். அது மனித உருவமாகவோ, இயற்கையின் ஒரு பொருளாகவோ அல்லது ஒருவன் வழிபடும் காலத்திற்கும் முறைக்கும் ஏற்ப எப்படியும் இருக்கலாம். விக்கிரக ஆராதனை ஆதிகாலத்தில் எப்படி நிறைவுற்று இருந்ததோ, அதற்கு எவ்விதத்திலும் குறைவற்று இந்த நவீன காலத்திலும் இருந்து வருகிறது. அது பலவகைகளாக இருப்பினும் விக்கிரக ஆராதனையே, ஒரே ஜீவனுள்ள உண்மை தேவனை அல்லாமல் பிற எதையும் வணங்குவது பாவம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தை யாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத். 20:4-5) என விக்கிரகங்களைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. "ஆகையால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி: திரும்புங்கள், உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்! உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்" (எசேக்கியேல் 14:6).

புதிய ஏற்பாட்டு எழுத்தர்கள் தொடர்ந்து எழுதும் போது, "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும் விக்கிரங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்", என்றும், (அப். 15:19, 20), "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக, ஆமென்" (1 யோ. 5:21) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரகங்களின் அபத்தத்தைப் பற்றியும் அவற்றை தொழுவது பற்றியும் தேவனால் ஏவப்பட்ட எழுத்தர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்: "அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறது. தங்கள் கைகளின் கிரியையையும், தங்கள் விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்ளுகிறார்கள். சிறியவனும் குனிகிறான், பெரியவனும் பணிகிறான், ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர்" (ஏசாயா 2:8,9) "விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்; அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே? அவர்கள் எல்லாரும் கூடி வந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள். கொல்லன் இரும்பை குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி, தன் புய பலத்தினால் அதைப் பண்படுத்துகிறான்; பட்டினியாயிருந்து

பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப் போகிறான். தச்சன் நூல் பிடித்து, மட்டப் பலகையினால் மரத்துக்குக் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி கவராசத்தினால் அதை வகுத்து மனித சாயலாக் மனித ரூபத்தின்படி உருவமாக்குகிறான்; அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு மருத மரத்தையாவது ஒரு கர்வாலி மரததையாவது, தெரிந்து கொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும் மனிதனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர் காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து: ஆ ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி; நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின் மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை. அம்மாத்திரம் அறிவும் சொரனையும் இல்லை. அவன் சாம்பலை மேய்கிறான்; வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தியது; அவன் தன்

ஆத்துமாவைத் தப்புவிக்காமலும்: தன் வலது கையிலே அபத்தம் அல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறான்" (ஏசாயா 44:9-20).

முற்றிலும் முட்டாள்த்தனமாக இக்காரியத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் தாவீது: "எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல உமது கிருபையின நிமித்தமும், உமது சத்தியத்தின் நிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும் அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரங்கள் வெள்ளியும் பொன்னும், மனிதருடைய கைவேலையுமாயிருக்கிறது.

அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது; அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலலே இருக்கிறார்கள்". (சங்கீதம் 115:1-8)

மீண்டுமாக, நாம் புதிய ஏற்பாட்டின் பதிவேடுகளில் காண்கிறோம் : "அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருககையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து" (அப். 17:16), "அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று : அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக்

கவனித்துப் பார்த்த போது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்". (அப். 17:22, 23). அவன் வணங்குகிற தேவன் சகலவற்றையும் படைத்தவர் என்றும், கைகளால் செய்த ஆலயங்களில் அவர் வாசம் செய்வதில்லை யென்றும், ஆகாரமோ, பானமோ எதுவும் அவருக்கு தேவையில்லை என்றும் பவுல் காட்டுகிறார். மற்றொரு சந்தர்ப்பத்தில் அவர் கூறும் போது, "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்," (1 கொரி. 8:4-6) என்கிறார்.

எனவே, விக்கிரக ஆராதனையை வேதாகமம் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், எல்லா விக்கிரக ஆராதனைக்காரர்கள், பொய்யர்கள் இன்னும் இதுபோன்றவர்கள் அனைவரும் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றும் கூறுகிறது. (வெளி. 21:8). மறுபக்கத்திலோ வேதாகமமும், இயற்கையும், அறிவும், பொது அறிவும் ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்பதைத் தான் நமக்குச் சொல்லுகின்றன (எபே. 4:6). அவர் ஆவியாக இருக்கிறார் (யோவான் 4:24). அவரை மட்டுமே நாம் தொழுது கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் (2 தெச. 1:9-10).

# 5. கிறிஸ்துவின் இரத்தம்

தேவனுடன் மனிதனுக்குள்ள உறவில் இரத்தம் எப்போதுமே ஒரு பங்கைப்பெற்று வந்துள்ளது. பழைய ஏற்பாடு காலத்தில் செலுத்திய மிருகபலிகள் இதை உண்மை எனக் காட்டுகின்றன. ஆனால் எபிரேய எழுத்தர் அறிவிப்பது போல, இந்தப்பலிகள் பாவத்தை நிரந்தரமாக எடுத்துப்போட முடியவில்லை; "அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கெடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" (எபி. 10:4). எனவே மிருகத்தின் இரத்தம் பாவத்தைப் போக்க இயலாதிருந்தால், மனிதன் இரட்சிப்படைவது எப்படி? கிறிஸ்துவின் இரத்தம் ஒரே ஒருமுறை சிந்தப்பட்டு, அதோடு தொடர்புகொள்ளவரும் பாவியின் சகல பாவங்களையும் முற்றிலுமாகச் கழுவிப்போடுவதாக புதிய ஏற்பாட்டில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, இங்கேதான் நமது உண்மையான பாடம் தொடங்குகிறது.

மனிதன் பாவியாக இருப்பதால் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள இயலாது என்பதாக பவுல் சொல்லுகிறார், "நாம் பாவிகளாய இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8) நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என 1 கொரிந்தியர் 15:3ம் வசனத்தில் அவர் கூறினார். அது சிலுவை மரணமாக இருந்தது (பிலிப் 2:8) இந்த மரணத்தின் மூலம் நமது பாவங்கள் மன்னிக்கப்படத்தக்கதாக, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அந்த இரத்தத்தோடு நாம் எவ்வாறு தொடர்புகொள்கிறோம் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. விசுவாசத்தின் வழியாக என்று பல மதங்களிலுமுள்ள மக்கள் கூறக்கூடும். நல்லது, விசுவாசத்திற்கு அவசியம் ஒரு

பங்கு உண்டு. ஆனாலும் விசுவாசம் மட்டுமே போதுமானதல்ல. சுவிஷேசத்தைப் படிக்கும்போது அவருக்கு நாம் கீழ்படிய வேண்டும் என்புதையும் கவனிக்கிறோம். (எபி. 5:8,9) வசனத்தின்படி நடக்கிறவர்களாக இருங்கள். (யாக் 1 : 22) அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்படியுங்கள் (யோவான் 14:15). எனவே நாம் அவருக்குக் கீழ்படியும்போது, அவருடைய இரத்தத்தோடு தொடர்பு கொள்கிறோம் என்பதை அனுமானிக்கிறோம். இப்போது நாம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார்? நாம் சில வசனங்களைக் கவனிப்போம். உதாரணமாக, அவர் கூறினார். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16).

"இப்போது அவர் எதைச் சொல்லுகிறார்? நமது கீழ்படிதலால், நாம் கிறிஸ்துவின் மரணத்தை அடைகிறோம். அல்லது அவருடைய மரணத்தின் பலன்களை நாம் பற்றிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறாம் என்பதை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதாவது, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தையும் பெற்றுக்கொள்கிறோம். அது நம்மைக் கழுவி பரிசுத்தமாக்குகிறது. அவருடைய இரத்தத்தின் வழியாக நமக்கு மன்னிப்புக் கிடைக்கிறது என எபேசியர் 1 : 7ல் கூறுகிறார். நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதாக கிறிஸ்து கூறினார். அப். 2 : 28 ஆம் வசனத்திலும் மாற்கு 16 : 16ம் கற்றுத்தறுவது போல, பாவங்கள் மன்னிக்கப்படுவதையும் இரட்சிப்பு அடைவதையும் மீண்டும் இந்த வசனங்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. எனவே, இந்தக் கட்டளைகளுக்கு கீழ்படியும் போது கிறிஸ்துவின் இரத்தத்தை நாம் அடைந்து கழுவப்படுகிறோம். இதைத்தவிர வேறு எந்த வழியும் இல்லை.

***கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி வேறு சில காரியங்களை நாம் கவனிப்போம் :***

1. கிறிஸ்துவின் இரத்தத்தால் புதிய ஏற்பாடு முத்திரையிடப்பட்டது. (மத்தேயு 26 : 28)
2. யூதருக்கும் புறஜாதியாருக்கும் குறுக்கே நின்ற சுவரை கிறிஸ்துவின் இரத்தம் தகர்த்தது. (எபே. 2 : 13, 14)
3. அவருடைய இரத்தத்தால் நாம் நீதிமான்களாக்கப் பட்டோம். (ரோமர் 5 : 9)
4. அவருடைய இரத்தத்தின் வழியாக மீட்பு உள்ளது. (கொலோ. 1 : 14)
5. அவருடைய இரத்தத்தால் சபை கிரையம் கொள்ளப்பட்டது. (அப். 20 : 28)
6. அவருடைய சிலுவை இரத்தத்தின் மூலம் சமாதானம் வருகிறது. (1 கொலோ 1 : 20)
7. கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தால் பாவிகள் மீட்கப்படுகின்றனர். (பேதுரு. 1 : 18, 19).
8. சகல பாவங்களிலிருந்தும் கிறிஸ்துவின் இரத்தம் கழுவிப்போடுகிறது. (1 யோவான் 1 : 7)
9. அவருடைய சொந்த இரத்தத்தால், நமது பாவங்களிலிருந்து நாம் கழுவப்படுகிறோம். (வெளி. 1 : 5)
10. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே அங்கிகள் தோய்த்து வெளுக்கப்பட்டிருக்கின்றனர். (வெளி. 7 : 14)
11. கர்த்தரின் பந்தியில் பங்கு பெறும் போது, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூறுகிறோம். ( மத். 26 : 26-28).

விசுவாசித்து திருமுழுக்குப் பெறும்போது ஒருவன் இரட்சிக்கப்படக்கூடும் எனக் கிறிஸ்து கூறியபடியால், இந்தக் கீழ்படிதலின் மூலம் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பெறுகிறான்.

எனவே அவன் பாவங்கள் நீங்கக் கழுவப்படுகிறான் என்று நாம் முடிவு செய்கிறோம். மீண்டுமாக, பாவிகளின் ஒரு கூட்டத்தில் பேசும்போது, பேதுரு சொன்னார், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2 : 38). பாவங்கள் மன்னிக்கப்பட ஒருவன் மனந்திரும்பியபின் திருமுழுக்குப்பெற வேண்டியது அவசியமென்றால், கிறிஸ்து தம்மைத்தாமே ஒரு முழுமையான பலியாக ஒப்புக்கொடுத்தபடியால், மனிதனின் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி தமது இரத்தத்தை சிந்தியபடியால் இக்கட்டளைகளுக்குக் கீழ்படிவதின் மூலம் ஒருவன் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்ளுகிறான். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்ற முடிவுக்கு நாம் மீண்டும் வருகிறோம். அடுத்து சவுலின் மனத்திரும் புதலைப்பற்றி, அந்தப்போதகர் வந்து கூறினார். "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன்பாவங்கள் போகக்கழுவப்பட...." (அப் 22 : 16). ஆனால், பாவங்களை திருமுழுக்கு எவ்வாறு கழுவுகிறது? தண்ணீருக்கு இங்கு முக்கியத்துவம் கிடையாது. ஆனால் கீழ்படிதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இப்படியாக ஒருவர் கர்த்தருக்குக் கீழ்படியும் போது கிறிஸ்துவின் இரத்தம் அவனுடைய பாவங்களைக் கழுவுகிறது. அது எளிதானது.

ரோமர் 6ம் அதிகாரம் 3-6 வசனங்களுக்கு நாம் திருப்பும் போது, பவுல் விளக்குகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும்

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப்பாவத்திற்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனிதன் அவரோடே கூடச்சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்".

கிறிஸ்துவின் இரத்தம் உங்களுக்கு எந்தவகையில் சம்பந்தமுள்ளது? அதோடு தொடர்பு கொள்ள நீங்கள் கர்த்தருக்குக் கீழ்படிந்திருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் இன்னும் உங்கள் பாவத்திலேதான் வாழ்கின்றீர்கள். ஆனால் கர்த்தரின் கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்தால், அதோடு தொடர்புகொள்வதின் விளைவாக இரட்சிக்கப்படுவீர்கள். பின்னர் கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரையங்கொள்ளப்பட்ட சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். பின்னர் ஒரு கிறிஸ்தவனாக, வாரம்தோறும் கர்த்தரின் பந்தியில் பங்குபெற்று அவருடைய இரத்தத்தை நீங்கள் நினைவுகூர்ந்தால், அவர் ஒளியில் இருப்பதுபோல நீங்களும் வெளிச்சத்தில் நடப்பீர்கள்; பின் இயேசுகிறிஸ்துவின் இரத்தம், சகல பாவங்களிலிருந்தும் உங்களைக் கழுவி, நித்திய ஜீவன் என்ற உங்களின் இறுதிப்பரிசுக்காக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும். உண்மையிலேயே இரத்தத்தில் வல்லமை உள்ளது.

# 6. கிறிஸ்து ஏன் மரித்தார்?

கிறிஸ்து மரித்தார், வேதாகமமும் உலக சரித்திரமும் ஒப்புக்கொண்டுள்ள ஒரு உண்மை இது. இதை மனதில் வைத்துக்கொண்டு சில காரியங்களை நாம் காண்போம் :

1. கிறிஸ்துவின் மரணமானது எல்லாருக்கும் ஏற்படுகின்றதைப் போன்ற சாதாரண ஒரு மரணம் அல்ல. பலர் வாழ்ந்து, மடிந்து போயிருக்கின்றனர். சகல மனிதர்களும் மரிக்க வேண்டும். (எபி. 9:27) என பரிசுத்த எழுத்தர் கூறுகின்றார். அப்படியானால், கிறிஸ்துவின் மரணத்தில் உள்ள சிறப்பு அம்சம் தான் என்ன? பலர் வாழ்ந்து மரித்தது போல அவர் வாழ்ந்த மரிக்கவில்லையா? ஆம்; ஆனால் அவருடைய வாழ்க்கை வித்தியாசமாக இருந்தது; அவர் மரிக்க வேண்டிய காரணமும் வித்தியாசமாக இருந்தது. அவர் பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை விடுவித்து, காப்பாற்ற அவர் மரித்தார். (2 கொரிந்தியர் 5:21)

2. கிறிஸ்துவின் மரணம் தீர்க்கத்தரிசனமாக முன் உரைக்கப்பட்டிருந்தது. ஏசாயா தீர்க்கத்தரிசி கூறினார்: “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்;

கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:4-6).

3. தமது சொந்த மரணத்தைப் பற்றி கிறிஸ்துவே கூறினார்: "இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்". (யோவான் 2:19). தமது சரீரமாகிய ஆலயத்தைப் பற்றியும், அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் பேசிக்கொண்டிருந்தார் என்பதை இங்கு பார்க்கிறோம்.

4. மரிப்பதற்காக கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டார்: "தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16).

5. மரணவேளை வரை கிறிஸ்து கீழ்ப்படிந்திருந்தார். அவர் மரிக்க வேண்டுமென்பது அவருடைய பிதாவின் விருப்பமாக இருந்தது: "அவர் மனித ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப் 2:8).

6. கிறிஸ்து பாவமற்று மரித்தார். கிறிஸ்துவைப் பற்றிக்கூறும் போது, "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை"என்று சொல்லப்பட்டுள்ளது (1 யோவான் 3:5).

7. பாவிகளுக்காக கிறிஸ்து மரித்தார். " நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற

கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது". (1 யோவான் 4:10).

8. நாம் ஜீவனோடிருப்பதற்காக கிறிஸ்து மரித்தார். "தம்முடைய ஒரே பேரான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது." (1 யோவான் 4:9)

9. கிறிஸ்து சிலுவையில் மரித்தார். மிகவும் அதிகபட்ச கொடூரமான மரணமாக அது இருந்தது. தொடர்ந்து அவர் அனுபவித்த சரீர வேதனைகளுக்கெல்லாம் மேலாக, ஒரு கொலைக்குற்றவாளியை விட அவர் உயர்ந்தவரல்ல எனக் காட்டும் வகையில் இரு திருடர்களுக்கு மத்தியில அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தது தான் அவரை மிகவும் வேதனைப்படுத்துவதாக இருந்தது. (மத்தேயு 27ம் அதிகாரம்). "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12:2).

10. நியாயப்பிரமாணத்தை அகற்றிப்போட கிறிஸ்து மரித்தார்: "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து;" (கொலோ 2:14)

11. ஒரு புதிய சட்டத்தை அல்லது ஏற்பாட்டை தர கிறிஸ்து மரித்தார்: (மத்தேயு 26:28). "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபத்திருக்கிறது" (எபிரேயர் 8:13).

12. சபைக்காக கிறிஸ்து மரித்தார். "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து," ...... (எபேசியர் 5:25)

13. நாம் நம்பிக்கை அடையும் பொருட்டு கிறிஸ்து மரித்தார். "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராக இருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" (யோவான் 3:3).

14. கிறிஸ்து மரித்தார். ஆனால் அவர் அடக்கம் செய்யப்பட்ட பின்னர், அவர் உயிர்த்து, பின் பரலோகத்தில் இருக்கிற அவருடைய பிதாவினிடத்திற்குச் சென்றார். (மத் 28:6; அப் 1:10). எனவே, சகல மனிதர்களுக்கும் ஒரு உயிர்ப்பு உண்டு என்பதை கிறிஸ்து உறுதிப்படுத்தினார் (1 கொரி 15). உண்மையாகவே, கிறிஸ்துவில் வெற்றி உள்ளது (1 யோவான் 5:4,5).

இவை கிறிஸ்து ஏன் மரித்தார் என்பதற்கான சில காரணங்களாகும். நீங்கள் பார்க்க முடிவதைப்போல, மரிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் அவர் மரிக்கவில்லை. ஆனால் ஒரு காரணத்திற்காக அவர் மரித்தார். உனக்காகவும், எனக்காகவும் அவர் மரித்தார். மனுக்குலம் முழுவதிற்குமாக அவர் மரித்தார். நாம் வீழ்ந்து போகாமல், இரட்சிக்கப்படத்தக்கதாக அவர் மரித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நித்தியத்திற்கும் இரட்சிப்டைய அவர் மரித்தார்.

நீ வாழ்வதற்காக தம்மையே அர்ப்பணித்து உன் பேரிலுள்ள அவருடைய அன்பை கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய அன்புக்கு ஈடுசெய்ய, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய பொறுப்பு உன்னுடையது என்று கிறிஸ்து கூறினார்: "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15).

# 7. கிறிஸ்துவின் சபையை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கிறிஸ்துவின் சபையைப் பற்றி இந்தியாவிலுள்ள பல மக்களிடம் பேசிப் பார்த்தபோது, பலர் இதைப்பற்றி ஒருபோதும் கேள்விப்பட்டிருக்கவில்லை என்பதை அறிந்தேன். உங்கள் நிலை என்ன? ஒரு வேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். உங்களிடமே நான் கேட்கிறேன். கிறிஸ்துவின் சபையைப் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா? இல்லையென்றால் நான் பிறரிடம் கேட்பது போல, உங்களிடமும் கேட்கிறேன்.

**ஏன் இல்லை?** உங்களிடம் ஒரு வேதாகமப் புத்தகம் இல்லையா? அதின் பக்கங்களிலே எந்த சபையைப் பற்றி நீங்கள் படிக்கிறீர்கள்? மீண்டும் நீங்கள் படித்தால் ஒரே ஒரு சபைதான் அங்கு குறிப்பிடப்பட்டிருப்பதை கண்டுபிடிப்பீர்கள். அதுவே கிறிஸ்துவின் சபை. பின் ஏன் நீங்கள் இந்த சபையைப் பற்றிக் கேள்விப்படவில்லை? மற்ற எல்லா மக்களும் ஏன் கேள்விப்படவில்லை? பல ஆண்டுகளாக நீங்கள் வேதாகமத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பகுதியிலுள்ள பல மக்கள் ஏதாவது ஒரு சபையில் அங்கத்தினர்களாக இருந்து வருகின்றனர். ஆனால் கர்த்தருடைய சபையைப் பற்றிய காரியம் என்ன?

கிறிஸ்துவின் சபை உலக முழுவதும் பரவலாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் அது இல்லாவிட்டாலும், வேதாகமத்தை மட்டுமே பின்பற்றும் மக்கள் வசிக்கும் சகல இடங்களிலும் அதைக்காணலாம். இந்த சபை ஒரு நாமகரண சபை அல்ல, ஒரு பிரிவு சபை அல்ல அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டதல்ல அது கத்தோலிக்க மதமோ,

புராட்டஸ்ட்டண்ட் மதமோ அல்லது யூத மதமோ அல்ல. அப்படியானால் அது என்ன? வேதாகமத்தில் நீங்கள் படிக்கும் சபை தான் அது. அதாவது, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு விசுவாசமான மக்களைக் கொண்டு உருவான சபை.

இந்த சபையின் நிறுவனர் கிறிஸ்து, நீங்களே படித்து பாருங்கள். மத்தேயு 16:18ல் கிறிஸ்து கூறினார். "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்"

எருசலேம் நகரத்திலே அது தொடங்கிற்று. லூக்கா 24, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரங்களைப் படித்தால் இது உண்மை என நீங்கள் காண்பீர்கள். இது லண்டனிலோ அல்லது ஜெர்மனியிலோ அல்லது அமெரிக்காவிலோ தொடங்கப்படவில்லை. மாறாக எருசலேமில் தொடங்கிற்று.

ஏறக்குறைய கி.பி. 33ம் ஆண்டில் சபை நிறுவப்பட்டது. அதாவது சபையின் வயது கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தை மீண்டும் படித்துப் பார்த்தால் சபை தொடங்கியது எப்படி என்பதும், அதின் அடிப்படையில் தொடக்கநாளும் தீர்மானிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கிறிஸ்து அதைக் கட்டியபடியால் கிறிஸ்துவின் பெயரை அது தாங்கிற்று. ஒரு சபை என்னும் வகையில் இது உண்மை. "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16) அதின் அங்கத்தினர்களைப் பொறுத்து இதுவும் உண்மையே". "முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று..." (அப் 11:28) வேதாகமம் மட்டும்தான் கிறிஸ்தவர்களை மாத்திரமே உண்டாக்கும். இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

கிறிஸ்து ஒரே சபையை மட்டுமே நிறுவினார். எபேசியர் 4:4-ல் அது ஒரே சரீரம் என அழைக்கப்படுகிறது.

கொலோசெயர் 1:18ம் வசனத்தில், அந்த சரீரமானது சபை என்பதாக அதின் எழுத்தர் கூறுகிறார். எனவே, ஒரு சபை என்பது புரிகிறது.

கிறிஸ்து சபைக்குக் தலைவராக இருக்கிறார். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்". (எபே 5:23). கர்த்தரின் சபைக்கு பூமியில் ஒரு தலைவனோ அல்லது தலைமையகமோ இல்லை. கிறிஸ்துவே அதன் தலைவர். அவர் பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

கிறிஸ்து சபையின் இரட்சகராக இருக்கிறார். எபேசியர் 5:23ம் வசனத்தில் இதுவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, ஒருவர் இரட்சிக்கப்பட, அவர் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டும் என இதற்குப் பொருள்.

கிறிஸ்து சபைக்காக மரித்தார் (எபே 5:25 அப் 20:28). சபையானது அவருக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என இதிலிருந்து அறியலாம். இதைப்பற்றிய உங்கள் கருத்தென்ன?

இரட்சிக்கப்படுபவர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் (அப் 2:4). இரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்து சரியான சபையில் - அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார்.

அவருடைய சபைக்காக அவர் மீண்டும் திரும்பி வருகிறார் (எபே 5:27). அவர் மீண்டும் வரும்போது, நீங்கள் அதில் அங்கத்தினராக இல்லாவிட்டால் எப்படி இருக்கும் இதைப்பற்றி சிந்தியுங்கள்.

இந்தப்பகுதியில், இந்த நகரத்தில், இம்மக்கள் மத்தியில் கர்த்தருடைய சபை ஏற்கனவே உள்ளது. கர்த்தருடைய வார்த்தையைப் படித்து, கற்றுக் கொண்டு, அது

கற்பிக்கிறபடி நடக்கும் அளவிற்கு கர்த்தரை நீங்கள் நேசித்தால், நீங்கள் ஒரு அங்கத்தினராக இருக்கமுடியும். இவ்வாறு செய்வதின் மூலம் நீங்கள் தேவனுடைய வசனத்தையும் அதின் காரண கர்த்தாவும் அவருடைய குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிப்பீர்கள், (எபி 11:6; யோவான் 14:1-3; ரோமர் 10:17) அதன் பின்னர் உங்கள் பாவங்கள் எல்லாவற்றிற்குமாக மனஸ்தாபப்பட்டு அவற்றிலிருந்து மனந்திரும்புவீர்கள் (லூ 13:3; அப் 17:30; அப் 2:38), கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து (ரோமர் 10:10; மத் 10:32) உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட (தண்ணீரில் முழுகி) திருமுழுக்கு பெறுவீர்கள் (அப் 2:38). மாற்கு 16:16; ரோமர் 6:3, கலா 3:26, 27;1 பேதுரு 3:21). இதன் விளைவாக, கர்த்தர் உங்களை அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்ளுவார் (அப் 2:47). நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மட்டும் இருப்பீர்கள் (1பேதுரு 4:16) உங்கள் பகுதியில், இது உங்களை கிறிஸ்துவின் சபையின் ஒரு அங்கத்தினராக்கும் ; கர்த்தரை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு விசுவாசமாக நடக்கும் மக்கள் இருக்கும் வரை இது நீடிக்கும். இருந்தாலும் நீங்கள் வேறு ஒரு சபையின் பகுதிதான் என்று இதற்குப் பொருள் அல்ல. அல்லது நீங்கள் ஒரு நாமகரண சபையைத் தோற்றுவித்ததாக அர்த்தம் அல்ல. ஏனெனில் கர்த்தரின் சபையானது ஒரு நாமகரண சபை அல்ல.

இந்த சபையைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய நீங்கள் தற்போது விரும்பினால், உங்கள் வேதாகமத்தைப் படியுங்கள். எங்களை நேரிடையாக தொடர்பு கொள்ளவும், ஒரு இலவச வேதாகம அஞ்சல் வழிபாட வகுப்பில் சேர்ந்து பயனடையவும் உங்களை அழைக்கிறோம்.

சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலை முறை தலை முறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்". - எபேசியர் 5:21

# 8. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினரா?

இல்லையென்றால், உங்களோடு நான் கொஞ்சம் பேசட்டுமா? நீங்கள் ஏன் கிறிஸ்துவின் சபையில் உறுப்பினர் அல்ல என நான் ஆச்சரியப்படுகிறேன். ஒரு வேளை, வேறு ஏதாவது ஒரு பிரிவு சபையில் நீங்கள் அங்கம் வகிக்கலாம். அப்படியானால், அது யாருடைய சபையாக இருக்கக் கூடும்? நிச்சயமாக, கிறிஸ்துவின் சபையோடு அதை சாதகமாக ஒப்பிட முடியாது.

உங்கள் சபையை கிறிஸ்து நிறுவினரா? எங்கே? எப்போது? அது அவர் மேல் கட்டப்பட்டதா? அவர் அதற்காக மரித்தாரா? அவர் அதில் இரட்சகரா? அவர் அதின் தலைவரா? அவருடைய நாமத்தை அந்த சபை தரித்துக் கொண்டுள்ளதா? வேதாகமத்தில் நீங்கள் அந்த சபையைப் பற்றி படிக்கக் கூடுமா?

உங்களை குழப்புவதற்காகவோ அல்லது தடுமாறச் செய்யவோ நான் இக்கேள்விகளைக் கேட்கவில்லை. மாறாக, இந்த காரியங்களைப் பற்றி நீங்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிறிஸ்து கட்டாத ஒரு சபையில் நீங்கள் இருந்தால், கர்த்தருடைய நாமத்தைத் தரிக்காத ஒரு சபையாக அது இருந்தால், வேதாகமத்தில் காணப்படும் ஒரே உண்மையான சபையாக அது இருக்க முடியாது என்பதை நீங்கள் உணர வேண்டுகிறேன்.

ஒரு வேளை, சபை முக்கியமல்ல, நீங்கள் சார்ந்திருந்தாலும் பரவாயில்லை, எல்லா சபைகளும் ஒன்றே என்றெல்லாம் உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கலாம். அப்படியானால் உங்களுக்குத் தவறான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக, முக்கியமற்ற ஒன்றை கர்த்தர்

நிறுவமாட்டார். மதிப்பில்லாத ஒன்றிற்காக அவர் மரித்திருக்க மாட்டார். ஒருவன் வேறு வழியில் இரட்சிப்படையக் கூடுமானால், சபையை இரட்சிக்க அவர் இரத்தம் சிந்தியிருக்கமாட்டார்.

ஒரே சபை மட்டுமே உள்ளது என்றும், அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்றும் வேதாகமம் போதிக்கிறது (எபேசியர் 1:23). கர்த்தருக்கு கீழ்ப்படிவோர் இரட்சிக்கப்படுகிறார்கள் (மாற்கு 16:16). அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் (அப். 2:47). எனவேதான் சபையின் இரட்சகர் என அவர் அழைக்கப்படுகிறார் (எபேசியர் 5:23) மேலுமாக, சபை அவருக்குச் சொந்தமாகி இருக்கும் தெளிவான காரணத்தால்தான் அது கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிறது (அப். 20:28).

உங்கள் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு, இக்காரியங்களை நீங்களே சோதித்துப் பார்க்க நான் உண்மையாகவே உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அப்படிச் செய்தால், சபையைப் பற்றிய சத்தியத்தை நீங்கள் கண்டு பிடிப்பீர்கள். பின்னர் அதில் அங்கம் வகிக்க விரும்புவீர்கள் என நான் நம்புகிறேன். நீங்கள் எதைச் செய்தாலும், ஒரு மனிதன் உண்டாக்கிய சபையின் பிடியில் இருக்க வேண்டாம். அது நாமகரணக் கூட்டங்களையும் பிரிவினைகளையும் பிரதிநிதித்துவப்படுகிறது. உண்மையான ஒரே ஒரு சபைக்கு மாறான எதிலும் நீங்கள் இருக்காதீர்கள். அப்படி இருந்தால் மட்டுமே நீங்கள் கிறிஸ்துவின் சபை உறுப்பினர் என்பதில் நிச்சயமாக இருக்கலாம்.

தற்சமயம் நீங்கள் எந்த ஒரு சபையிலும் அங்கம் வகிக்காத பட்சத்தில், நீங்கள் ஏதாவது ஒரு மதப்பிரிவில் சிக்கிக் கொள்வதற்கு முன்பு, கிறிஸ்துவின் சபைக்கு உங்களை அறிமுகப்படுத்த விரும்புகிறேன் என்ற போதிலும், ஒரு வேளை

நீங்கள் ஒரு குறிப்பிட்ட சபையில் அதிகாரப் பூர்வமான அங்கத்தினரான இல்லாவிட்டாலும் உங்கள் எண்ணம் ஏற்கனவே ஒரு திசையில் இழுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தவறான அபிப்பிராயம் உங்களை தடை செய்ய நீங்கள் அனுமதிக்காமல், நீங்கள் திறந்த மனதோடு இருந்தால் சபையைப் பற்றிய உண்மையை நீங்கள் அறிய வழி உண்டு. இதை செய்ய, பிற சபைகளைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டவைகளையெல்லாம் மறந்து விட்டு முதலில் வேதாகமத்திற்குத் திரும்ப வேண்டும். அதை நீங்களே படிக்கவும் கற்றுக் கொள்ளவும் தொடங்கி, அது இந்த காரியத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதைக் காணலாம். நிச்சயமாக, நீங்கள் விரும்பினால் இதைச் செய்ய முடியும். நீங்களாகவே படிக்கவும், கற்றுக் கொள்ளவும், நினைக்கவும் கூடிய திறமையான நல்ல மனதை தேவன் உங்களுக்குத் தந்திருக்கிறார். அவருடைய வசனத்தையும் உங்களுக்குத் தந்துள்ளார். எனக்கும் பிற மக்களுக்கும் எதைக் கூறியிருக்கிறாரோ அதையே அவருடைய வசனத்தில் உங்களுக்கும் கூறுகிறார். இப்போது, நீங்கள் படிக்கும் போது சுவிசேஷம் ஒரே ஒரு சபையைப் பற்றி மட்டும் பேசுவதை நீங்கள் கண்டு பிடிக்க முடியும். மேலும் நீங்கள் அந்த சபையை ஆராய்ந்தால், இது கிறிஸ்துவின் சபை என்பதைக் கண்டு பிடிப்பீர்கள். அதில் அங்கத்தினராக நீங்கள் செய்ய வேண்டியதென்ன என்பதையும் அறிவீர்கள். அதன்பின் அதிலே ஒரு அங்கத்தினராக நீங்கள் விரும்புவீர்கள் என்பது எனது ஜெபம் நினைவிருக்கட்டும். தேவனுடைய சபையில் ஒரு பாகமாக நீங்கள் மாறாவிட்டால், அவருக்கு கீழ்ப்படிய இயலாது. ஏனெனில் நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது அவர் உங்களை இரட்சிக்கிறார். அவருடைய சரீரமான சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். நீங்கள் அதின் உறுப்பினராக இல்லாவிடில் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. ஏனெனில்,

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் உங்களை அவர் அதிலே சேர்த்திருப்பார். இது உங்களுக்கு சரியாகத் தோன்றவில்லையா? மீண்டுமாக, நீங்கள் ஆராய்ந்து, உண்மையைக் கண்டுபிடிக்க உங்களை வரவேற்கிறேன். நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை, ஆனால் அப்படிச் செய்தால் ஆதாயப்பட நிறைய உண்டு.

நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருந்தால், நான் "கிறிஸ்தவன் மட்டுமே" என்றும், கிறிஸ்துவின் உண்மையான சரீரத்தின் ஓர் உறுப்பு என்றும் சொல்லிக் கொள்ளுவதில் எவ்வளவு மகிழ்ச்சி உண்டு என்பதை நானும் நீங்களும் அறிவீர்கள்.

ஒரு நாமகரண சபையில் நீங்கள் இல்லை; எந்த ஒரு மனிதனுடைய பெயரையும் நீங்கள் தரித்துக் கொள்ளவில்லை; மனிதனுடைய உபதேசங்களையும் கட்டளைகளையும் பின்பற்றவில்லை. ஆனால் அவை அனைத்துக்கும் நீங்கள் நீங்கலாக இருக்கிறீர்கள்; அப்படியிருப்பதால், உங்களில் சத்தியம் இருக்கிறது, இரட்சிப்பு இருக்கிறது, நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள். இவற்றை விடக் குறைவானது போதும் என்று எப்படி ஒரு மனிதன் திருப்திப்பட முடியும் என்பது புரிந்து கொள்ள கடினமாக இருக்கிறது.

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர் என்றால், அதின் விசுவாசமுள்ள அங்கத்தினரா? இல்லையென்றால், ஒரு கிறிஸ்தவனல்லாத மனிதனை விட எவ்விதத்திலும் நீங்கள் சிறந்தவர் அல்ல. உண்மையைச் சொன்னால் அதைவிடக் கீழ்நிலையில் இருக்கிறீர்கள். ஏனெனில் உங்களுக்கு சத்தியம் தெரியும், அதற்கு கீழ்ப்படிந்தும் இருக்கிறீர்கள்; ஆனால் இப்போது அதிலிருந்து விலகியிருக்கிறீர்கள் அவ்வாறு செய்வதால் கிறிஸ்துவின் காரியத்திற்கு நீங்கள் இடைஞ்சலாக இருக்கிறீர்கள். எனவே, ஆத்துமாக்கள் வீழ்ந்து போக காரணமாக இருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, உங்கள் தவறுகளை அறிக்கை செய்து, கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டு, கிறிஸ்துவிடமும் அவருடைய வழியிலும் திரும்பி வர உங்களை வேண்டுகிறேன். அதே சமயத்தில் ஒரு கிறிஸ்தவனாக பணியாற்றவும் கர்த்தர் திரும்பி வரும்போது, அவரை சந்திக்க ஆயத்தமாக இருக்கவும் முடிவு செய்யுங்கள்.

# தேவனுடைய வார்த்தையோடு தர்க்கம் செய்யாதே!

**தே**வனுடைய வார்த்தையில் தங்கள் விசுவாசத்திற்கு ஏற்ற, தங்களுடைய பழக்கங்கள் அல்லது நிலைகளுக்கு ஏற்ற பகுதியை மட்டுமே பலர் விரும்புகின்றனர். இதனால் பல வசனங்களில் ஒரு பகுதியை அவர்கள் ஏற்பதும், மீதியை ஒதுக்கிவிடுவதும் நடக்கிறது. அவைகளுக்கு விளக்கம் அளிக்கவும், விவாதம் செய்யவும், நியாயப்படுத்தவும் அவர்கள் முயற்சிக்கின்றனர். இது பரிசுத்த வசனத்திற்கு ஏற்படுத்தும் அவமானமாகும்; வசனத்தை தவறாகப் பயன்படுத்தும் செயலும் ஆகும்.

சுவிசேஷத்தின் ஒரு வசனத்தில் உள்ள சகல சத்தியத்தையும் அறிந்துகொள்ள நாம் விரும்ப வேண்டும் என்றபோதிலும், அங்கு நிறுத்திவிடாமல் தொடர்ந்து ஒவ்வொரு வசனத்திலும் காணப்படும் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தர் நமக்களித்த எல்லாக் கட்டளைகளையும் அறிந்து கொள்ளவும், முழு சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் பிறருக்கு அவற்றைக் கற்றுத்தரவும் விரும்பவேண்டும். தேவனுடைய வசனத்தின் எந்த ஒரு பகுதியையும் வேண்டுமென்றே அறியாதிருப்பதும், அலட்சியப்படுத்துவதும் நம்மையோ அல்லது எவரையுமோ காப்பாற்றாது. பாதி சத்தியம் பயன்படாது.

ஒருவன் இரட்சிப்படைய விசுவாசித்தால் மட்டும் போதுமானது என்று சிலர் போதிக்கின்றனர். இதை நியாயப்படுத்த யோவான் 3:16, 18; 5:24; 6:40; லூக்கா 8:48 போன்ற வசனங்களை உபயோகின்றனர். பிறவசனங்கள் என்ன கற்பிக்கின்றனவோ அதின் காரணமாக, இதை மட்டும்தான்

தேவன் கேட்கிறாரா என்பதாக தர்க்கம் எழக்கூடும். ஆனால் விசுவாசத்தின் அல்லது நம்பிக்கையின் அவசியத்தைப் பற்றி எந்தவிதமான தர்க்கமும் இருக்கக்கூடாது. நிச்சயமாக ஒருவன் விசுவாசிக்க வேண்டும் என்று இந்த வசனங்கள் போதிக்கின்றன என நமக்குத் தெரியும். ஆனால் ஆத்தும இரட்சிப்பு சம்பந்தப்பட்ட காரியம் வரும்போது, இந்த சுவிசேஷ வசனப்பகுதிகளை மாத்திரம் கவனிக்கக்கூடாது. ஒருவேளை, விசுவாசம் மட்டும் போதும் என்று போதிக்க இந்த வசனங்களைப் பயன்படுத்துவோர் அவைகளைத் தனிமைப்படுத்தியுள்ளனர். ஒருவேளை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு, விசுவாசத்தின் பொருளை சுருக்கிவிட்டனர்.

ஒருவன் மனந்திரும்ப வேண்டும், இல்லையேல் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார் (லூக்கா 13:3) உலகமெங்கம் உள்ள சகல மக்களும் மனந்திரும்ப தேவன் கட்டளையிடுகிறார் என்று பவுல் கூறினார் (அப்போஸ்தலர் 17:30) மனந்திரும்புதலின் அவசியத்தை கற்பிக்கும், வலியுறுத்தும் பிறவசனங்கள் உள்ளன. இரட்சிக்கப்பட ஒருவன் செய்ய வேண்டிய மிகவும் முக்கியமான காரியம், அவனுடைய பாவங்களுக்கான மனஸ்தாபப்படுதல் என ஒருவன் முடிவுக்கு வரலாம். அதேசமயம், இரட்சிப்படைய இதைவிட இன்னும் அதிகமான காரியங்கள் உள்ளன என்று ஒருவர் வாதிடலாம். இருந்தபோதிலும் ஒரு காரியத்தில் எந்த வாதமும் இருக்கமுடியாது. அது, ஒருவர் தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படுவதை தேவன் கேட்கிறார்.

திருமுழுக்கின் அவசியத்தை வலியுறுத்தும் பல வசனங்கள் உள்ளன (அப் 2:38, யோவான் 3:3-5, எபிரெயர் 11, மாற்கு 16:36). திருமுழுக்கு இரட்சிக்கிறது என்றுகூட ஒரு வசனம் அறிவிக்கிறது (1 பேதுரு 3:21) திருமுழுக்கு மட்டும்

ஒருவனை இரட்சிக்கிறது என்று இதற்கு அர்த்தமா? விசுவாசம் தேவையில்லையா? மனஸ்தாபப்படுவது பற்றி என்ன? இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டு வாதம் செய்யப்படலாம் என்றாலும் தேவனுடைய கற்பனையில் எல்லா சத்தியத்தையும் ஒருவன் ஏற்றுக் கொள்வானாகில், திருமுழுக்கின் அவசியத்தைப் பற்றி எந்த சந்தேகமும் இருக்காது.

மக்கள் மனந்திரும்பி, அவர்களுடைய பாவங்களுக்காக திருமுழுக்குப் பெறவேண்டும் என பெந்தேகொஸ்தே நாளிலே பேதுரு கூறினான் (அப். 2:38). விசுவாசத்தைப்பற்றி எதுவும் கூறப்படா விட்டாலும், இரட்சிப்பைப்பற்றி கேட்கப்பட்ட கேள்வி, அவர்கள் விசுவாசித்தார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. எந்தக் குறிப்புகளும் விடுபட்டு போனாலும், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதே கேள்வி. இந்த காரியத்தில் எந்த தர்க்கமும் இருக்க முடியாது அதை ஏற்றுக்கொள்ளுவது மட்டுமே நாம் செய்யக்கூடிய காரியம்.

இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றியோ அல்லது வேறு ஏதாவது பொருள்பற்றியோ நாம் படித்துக் கொண்டிருந்தாலும், நாம் ஒவ்வொரு வசனத்திலும் உள்ள எல்லாச் சத்தியத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போகிறோம் என்றும், ஒவ்வொரு அறிவிப்பிலும் உள்ள ஒவ்வொரு கட்டளையையும் ஏற்றுக்கொள்வது என்ற நிலையுடன் நமது பாடத்தை நாம் அணுகவேண்டும். கர்த்தர் எல்லாச் சத்தியத்தையும் ஒரே வசனத்தில் அல்லது பல வசனங்களில் கொடுத்திருக்கவில்லை என்பது தெளிவு அல்லது நற்செய்தியின் எல்லா சட்டங்களையும் ஒரே வசனத்தில் அவர் அளித்திருக்கவில்லை. எனவே, எந்தப் பொருள்பற்றியும் ஒன்று அல்லது இரண்டு வசனங்களோடு நிறுத்திக்கொள்ளக் கூடாது என்று இதற்குப் பொருள். ஆனால் தேவனுடைய எல்லா வசனங்களையும் படித்து, கற்றுக் கொண்ட அவற்றை இணைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு வசனத்திலும் உள்ள எல்லா சத்தியத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதன்பின்னர் அடுத்த வசனத்திற்கும், அதற்கு அடுத்ததிற்கும் செல்ல வேண்டும். அப்படிச் செய்வதின்மூலம், கர்த்தர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் நாம் காணமுடியும். முழு சத்தியத்தையும் நாம் விசுவாசித்து, கீழ்ப்படியும் போதுதான் நாம் இரட்சிக்கப்பட முடியும். நிச்சயமாக இதில் எவ்வித வாதமும் இருக்க முடியாது. தேவனுடைய வார்த்தையுடன் வாதம் செய்யும் ஒரு நிலைக்கு நாம் தள்ளப்படுவதை நிச்சயமாக ஒருபோதும் ஏற்படுத்தக்கூடாது அல்லது ஏற்கனவே நாம் ஏற்றுக்கொண்ட ஒரு நம்பிக்கையை நிலைநாட்ட ஏதாவது சத்தியத்தை மறுக்கும் நிலையில் நாம் ஒருபோதும் இருக்கலாகாது. சத்தியத்தை மறுத்தால் நாம் வீழ்ந்துபோவோம்.

# 10. கிறிஸ்துவின் சபை இந்தியாவில் எத்தனை ஆண்டுகள் இருக்கும்?

"இன்னும் எத்தனை ஆண்டுகள் கிறிஸ்துவின் சபையானது இந்தியாவில் இருக்கும்?" - இது பலரால் அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வி. இந்திய மக்களால் பதிலளிக்கப்பட்ட வேண்டிய ஒரு கேள்வி அது. வேறு வார்த்தைகளில் சொன்னால், கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும் அளவிற்கு அவரை நேசிக்கும் மக்கள் போதுமானபடி இருந்தால், சபை கால வரையறையின்றி இங்கு நீடிக்க முடியும். இவற்றில் அக்கறையில்லாத பட்சத்தில், சபை இந்த நாட்டில் தொடர இயலாது என்பதுதான் எளிய சாதாரண உண்மை.

வெளிநாட்டவர் யாராவது இங்கு இருக்கிறார்களா, இல்லையா என்பது பிரச்சனை அல்ல. வெளி உதவி ஏதாவது இங்கே வருகிறதா இல்லையா என்பதும் கேள்வி அல்ல. சபைக்கு கட்டிடம் ஏதாவது உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றியும் கவலையில்லை. இன்னும் எண்ணற்ற பல காரியங்களாலும் எவ்விதப் பிரட்சனையும் கிடையாது. இங்குள்ள மக்கள் எப்படி இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ, அவ்வாறு இருக்கிறார்களா என்பதையே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டுக்கும், பிற எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும். கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருக்கு ஊழியஞ் செய்ய விரும்புகிற மக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு மட்டுமே கர்த்தரின் சபை நிலைத்திருக்கும்.

சில வேளைகளில், சபையில் அங்கம் வகிக்க பிராந்திய மக்கள் சிறிது தயக்கமடைகின்றனர். காரணம் ஒரு வேளை

இன்று தோன்றி நாளை மறைந்து போகும் ஒரு அமைப்பில் அங்கத்தினராக இருக்க வேண்டியதாக இருக்குமோ என்ற அச்சமே. ஆனால் நீங்கள் பயப்பட வேண்டாம்; ஒரு முறை நீங்கள் கர்த்தரின் குடும்பத்திற்குள் பிறந்துவிட்டால் எப்போதுமே அக்குடும்பத்தில் நீங்கள் ஒரு அங்கத்தினர் தான். உங்கள் மத்தியிலே பணியாற்ற வந்த ஊழியர் இடையிலே இடமற்றமாகி சென்றிருக்கக்கூடும் என்ற போதிலும், கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் உங்களிடமிருந்து எப்படி எடுத்துப் போட முடியாதோ, அவ்வாறே சபையையும் அவர் தன்னோடு எடுத்துச் சொல்ல முடியாது. உங்கள் பகுதியில், உங்களோடுள்ள பிற அங்கத்தினர்களோடு இணைந்து எவ்வாறு சபையை நடத்திச் செல்லுவது என நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

தில்லிப் பகுதியில் மட்டுமல்ல, இன்னும் பம்பாய், லக்னோர், ஷிலாங், சென்னை, பெங்களூர் போன்ற வேறு பல நகரங்களிலும், மற்றும் பல கிராமங்களிலும் கிறிஸ்துவின் சபை இருக்கிறது என்பதை அறிய உங்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருக்கலாம். தற்சமயம் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் அது இல்லை என்பதினால், காலப்போக்கில் அது வர இயலாது என்றோ வராது என்றோ அர்த்தமல்ல, மாறாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் வெகு வேகமாக சபை படர்ந்து கொண்டு வருவதைக் காண முடிகிறது. இந்தியாவில் சபை நிலைத்திருக்கப் போவதை அது காட்டுகிறது.

இந்தியாவிற்கு சமீபத்தில் தான் வந்திருக்கிற போதிலும் கிறிஸ்துவின் சபை ஒரு புதுசபை அல்ல. இக்காரியத்தில் உலக சரித்திரத்தை நாம் பார்க்கும்போது, உண்மையில் கிறிஸ்துவின் நற்செய்தியும் கர்த்தரின் சபையும் முதலாவதாக அப்போஸ்தலர் தோமாவால் போதிக்கப்பட்டு இந்நாட்டில் நிறுவப்பட்டது என்பதைக் காணலாம். வானத்தின் கீழே படைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நற்செய்தி

அறிவிக்கப்பட்டிருந்தது என பவுல் கொலோசெயர் 1:23ம் வசனத்தில் எழுதியதை நாம் அறிவோம்; அது இந்திய மக்களையும் உள்ளடக்கியதாகத் தான் இருக்கும். அந்நாளில் நற்செய்தியைக் கேட்டதோடு, அதற்குக் கீழ்ப்படிந்த மக்களும் அன்று இருந்தனர் என வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் அவர்கள் என்னவானார்கள்? அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:47ம் வசனத்தின்படி, அது அவர்களை கர்த்தரின் சபையில் அங்கத்தினர்களாக்கியிருக்கும். பின் அதற்கு என்ன ஆயிற்று? உலகின் பல பகுதிகளிலும் என்ன நடந்ததோ அதுவே தான் இந்தியாவிலும் நடந்தது. காலப்போக்கில் மக்கள் தவறுக்குள் தள்ளப்பட்டு, இப்படியாக சபை முற்றிலுமாக தனது தன்மையை இழந்து, ஆரம்ப நிலையிலிருந்து முற்றிலுமாக உருமாறிப் போய் விட்டது. அதாவது, தொடக்கத்தில் கர்த்தரின் சபை எப்படி இருந்ததோ அதே போல கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது என்று பொருள்.

அடுத்து, கிறிஸ்துவின் சபை ஒரு அமெரிக்க சபை அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது அமெரிக்காவில் தொடங்கப்படவில்லை. மாறாக, அப்போஸ்தலருடைய நடபடிகள் 2-ம் அதிகாரத்தின்படி ஆசியாவிலுள்ள எருசலேமில் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பாக அது தொடங்கப்பட்டது. அது ஒரு நாமகரண சபையும் அல்ல. அது மனிதனால் தொடங்கப்பட்டதல்ல, ஆனால் கிறிஸ்துவால் ஏற்பட்டது. (மத்தேயு 16:18)

சபையின் முழுமையான மாதிரியை வேதாகமம் கொடுத்துள்ளது. எனவே, அந்த மாதிரியைப் பின்பற்றும் போது, அதின் விளைவாக கர்த்தருடைய சபை நிறுவப்படுகிறது. அது இங்கும், உலகத்தின் எந்தப் பகுதியிலும் உண்மையே. இந்த மாதிரியை கீழே பாருங்கள்.

1. சபையை நிறுவியது யார் என அது கூறுகிறது. (மத்தேயு 16:18)
2. அது எங்கே நிறுவப்பட்டது என அது கூறுகிறது. (அப்-2)
3. அது எப்போது நிறுவப்பட்டது என்று அது கூறுகிறது. (அப்-2)
4. என்ன பெயரை அது தரித்திருந்தது என்று அது கூறுகிறது (ரோமர் 16:16)
5. அதின் அங்கத்தினர்கள் எந்த பெயரைத் தரித்திருந்தனர் என்று அது கூறுகிறது. (அப் 11:26)
6. மக்கள் அதில் எப்படி அங்கத்தினரானார்கள் என்று அது கூறுகிறது (மாற்கு 16:15, 16, அப் 2:38, 47)
7. அதின் ஆராதனை பற்றி அது கூறுகிறது (அப் 20:7)
8. அதின் தலைவர் யார் என்று அது கூறுகிறது. (கொலோ 1:18)
9. எத்தனை சபை இருந்தன என்று அது கூறுகிறது (எபே 4:4, எபே 1:22, 23)

மேலும் பல காரியங்களையும் அது கூறுகிறது. ஆனால் இந்த மாதிரியை மக்கள் பின்பற்றினால் அவர்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்கள் ஆகின்றனர். மேலும் உலகின் எந்தப் பகுதிக்கு நீங்கள் சென்ற போதிலும், இதே மாதிரியைப் பின்பற்றியிருக்கும் மக்களை நீங்கள் கண்டால், அவர்களைப் போலலே நீங்களும் உங்களைப் போல அவர்களும் கிறிஸ்துவில் ஒன்றித்திருப்பதை கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய, கிறிஸ்துவின் சபையில் ஒன்றித்திருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

இங்கு சொல்லப்பட்டிருக்கும் காரியங்களின் வெளிச்சத்தில் உங்கள் வேதாகமத்தை எடுத்து, வசனங்களைத் தேடி கண்டுபிடிக்க வேண்டுமாய் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். இதுவே உண்மை என நீங்கள் கண்டால், பின் அதைத் தள்ளி விடுங்கள். ஆனால் நீங்கள் நேர்மையோடும், உண்மையோடும் கற்றால், இக்காரியங்களில் உள்ள உண்மையை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள். யாரும் உங்களை

ஏமாற்ற முயற்சிக்கவில்லை உங்களுக்கு உதவி செய்யவே நாங்கள் விரும்புகிறோம். தேவனுடைய வசனத்தையே உங்களுக்குச் சுட்டிக்காட்டுவது தான் நாங்கள் காட்டக் கூடிய சிறந்த வழியாகும்.

எனவே, கர்த்தருடைய சபை இந்தியாவில் நீடிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள். அவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருங்கள். பிறரையும் அவ்வாறு செய்ய ஊக்கமளியுங்கள். உங்கள் மூலமாகவும் உங்களைப் போன்ற மற்றவர்கள் மூலமாகவும் இங்குள்ள கிறிஸ்துவின் சபையானது நீடித்து நிலைத்திருக்கும்.

# 11. வேதாகமத்தைப் பற்றி நான்கு கேள்விகள்

ஒரே சபை மட்டுமே உள்ளது என மிகத் தெளிவாக வேதாகமம் கற்றுக் கொடுக்கிறது. (எபே 4:4 கொலோ 1:18) என்ற போதிலும், இன்று உலகில் பல சபைகள் இருக்கின்றன. ஆகவே, வேதாகமம் கூறும் ஒரே சபை எது என்பதை எப்படி ஒருவர் அறிந்து கொள்ள முடியும் என்ற கேள்வி எழுகிறது. எல்லா சபைகளும் தேவனுடைய வார்த்தையின்படி ஆனவைதான் என உரிமை கோருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு சபை மட்டுமே உள்ளது என்றால், பின் எல்லாமே கர்த்தருக்குச் சொந்தமானவைகளாக இருக்க முடியாது. எது சரியான சபை என்பதைத் தீர்மானிக்க, நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் நான்கு எளிமையான கேள்விகளைக் கேட்பதுதான். நிறைய கேள்விகளைக் கேட்க முடியும். என்றாலும் எது சரி, எது போலி என்று சொல்ல நான்கு கேள்விகள் போதுமானது.

இக்கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கான வேதாகமப் பதில்களையும் இப்போது பார்ப்போம்.

**1. சபையை நிறுவியது யார்?** கிறிஸ்து சபையை நிறுவினார் என வேதாகமம் தெளிவாகக் கற்பிப்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம் என நான் நினைக்கிறேன். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதாக அறிக்கை செய்யப்பட்டபின், அதற்கும் பதிலளிக்கும் வகையில், மேலும் நான் உனக்கு சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை என்று அவர் கூறினார். (மத்தேயு 16:18) இப்போது, சபையைக் கட்டுவதாக கிறிஸ்து

வாக்களித்தால், சபையைக் கட்டியது கிறிஸ்து அல்லவா? ஆம், நிச்சயமாக, மேலும் கிறிஸ்து சபையைத்தான் கட்டுவதாக இருந்ததே தவிர சபைகளை அல்ல என்பதை நீங்கள் கவனியுங்கள். எனவே, அவர் ஒரு சபையைக் கட்டினார், பின்னர் அது தமக்குச் சொந்தமானது என்று கூறினார். எனது சபை என்று அதைச் சொன்னார். தயவு செய்து அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அது அவருடையதாக இருப்பதாக இருந்தால், அதற்கு அர்த்தம் அது உங்களுடையதோ அல்லது என்னுடையதோ அல்ல.

**2. அது எங்கே நிறுவப்பட்டது?** அப்போஸ்தலருடைய நடபடிகள் 2-ம் அதிகாரத்தின் படி, சபை எருசலேமில் நிறுவப்பட்டது. நமக்கு எப்படித் தெரியும்? எப்படியெனில், உன்னதத்திலிருந்து வரும் வல்லமையால் நிரப்பப்படும்வரை எருசலேமில் தங்கியிருங்கள் என கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் (லூக்கா 24:49). அவர்கள் அவ்வாறே வல்லமை வரும்போது எருசலேமில் இருந்தனர் (அப் 2:1-4). அது மட்டுமல்ல, ராஜ்யம் அல்லது சபை, எருசலேமில் நிறுவப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறினார் (ஏசாயா 2:2,3)

**3. எப்போது அது நிறுவப்பட்டது?** அப்போஸ்தலருடைய நடபடிகள் 2-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்ட படி, சபை கிறிஸ்துவால் எருசலேமில் நிறுவப்பட்டபடியால், அது ஏறக்குறைய கி.பி. 33ம் ஆண்டில் தொடங்கிற்று. அதாவது, கர்த்தரின் சபை ஏறத்தாழ 2000 வருடங்களாக இருந்து வருகிறது.

**4. அது என்ன பெயரைத் தரித்திருந்தது?** தனிப்பட்ட அங்கத்தினர்கள் கிறிஸ்துவர்கள் என அறியப்பட்டனர். (அப் 11:26, அப் 26:28, 1 பேதுரு 4:16) எல்லா கிறிஸ்தவர்களும் கூடி சபையாகிறது. சுவிஷேத்தில் அது

கிறிஸ்துவின் சரீரம் எனக் குறிப்பிடப்படுகிறது. (1 கொரி 12:27) ஆனால் சரீரமே சபை (கொலோ 1:18) ஆகவே அது கிறிஸ்துவின் சபை. பவுலுடைய காலத்தில் வெவ்வேறு பிராந்திய சபைகளையும் சேர்த்து கிறிஸ்துவின் சபை. பவுலுடைய காலத்தில் வெவ்வேறு பிராந்திய சபைகளையும் சேர்த்து கிறிஸ்துவின் சபையார் என்று கூறப்பட்டது. (ரோமர் 16:16). கிறிஸ்து சபையை உண்டாக்கினார் என்றால், பின்னர் அவருடைய பெயரை சபை தாங்குவது தான் இயல்பு. அது கிறிஸ்துவின் சபையில்லையென்றால், பின் யாருடைய சபை? அவருடைய பெயரைத் தரிக்காத பட்சத்தில், அது கிறிஸ்துவின் சபையாக இருக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

இவைகளே நான்கு எளிய கேள்விகளாகும், அவற்றிற்கான எளிய வேதாகமப் பதில்களும் ஆகும். ஒரு சபை கிறிஸ்துவின் சபையா இல்லையா என நீங்கள் திகைத்துக் கொண்டிருந்தால், பின் அது சம்பந்தமான இந்த கேள்விகளைக் கேட்டுப் பதில்களைக் கண்டு பிடியுங்கள். கிறிஸ்துவின் சபை என்று ஒரு சபை உரிமை கோரலாம். ஆனால் அது ஒரு மனிதனால் உண்டாக்கப்பட்டிருந்தால் அது கர்த்தருக்குச் சொந்தமானதாக இருக்க முடியாது. அது லண்டனிலோ, அல்லது அமெரிக்காவிலோ அல்லது உலகின் வேறு ஒரு பகுதியிலோ தோன்றியிருந்ததால், அது கிறிஸ்துவின் சபையாக எப்படி இருக்க முடியும்? சில நூறு வருடங்களுக்கு முன்பாக அது நிறுவப்பட்டிருந்தால், கர்த்தரின் சபையாக இருக்க அதற்கு வயது போதாது. இறுதியாக, மனிதன் உண்டாக்கிய ஒரு பெயரை அது தரித்திருந்தால், பின்னர் அது ஒரு நாமகரண சபையாகத்தான் இருக்க முடியும். அப்படியானால், ஒரு சபை தேவனால் உண்டானதா அல்லது மனிதன் உண்டாக்கினானா என்று சோதித்துப் பார்க்க இது ஒரு வழி என்று நீங்கள் அறிய முடியவில்லையா? இந்தப் பரிசோதனை ஒரு போதும் தோற்றுப் போவதில்லை.

ஒரு சபை, ஒரே ஒரு காரியத்தைத் தவிர பிற எல்லாவற்றிலும் வேதாகமம் குறிப்பிடுவதற்கு ஒப்ப இருப்பதாக நீங்கள் கண்ட போதிலும், அது கர்த்தருடைய சபையாக இருக்க முடியாது. வேதாமத்தின் ஒரே சபையாக அது இருப்பின், வேதாகமத்தின் சகல போதனைகளுக்கும் அது பொருந்துவதாக இருக்க வேண்டும்.

எனது நண்பரே! நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினரா? மேலே கண்ட நான்கு கேள்விகளையும் கேட்டு நீங்களே கண்டு கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் கேட்டு, ஒரு நாமகரண சபையில் இருப்பதாகக் கண்டு கொண்டால், நீங்கள் உங்கள் வேதாகமத்தைக் கற்று கர்த்தருக்குக் கீழ்படிய உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கவலைப்பட வேண்டாம். வேதாகமம் போதிப்பதின் படி நீங்கள் நடந்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நிச்சயமாக, அவர் தவறான சபையில் உங்களை சேர்க்கமாட்டார். அவருடைய சபையை அவர் அறிவார், அதில் மட்டுமே உங்களை சேர்ப்பார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:47) பின்னர், வேதாகமத்தில் நீங்கள் படிக்கக்கூடிய சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பீர்கள். அந்த சபையில் ஏன் இருக்கிறேன். இந்த சபையில் ஏன் இருக்கிறேன் என்று நீங்கள் இனி விளக்கிக் கொண்டிருக்கத் தேவைப்படாது. ஏனெனில் கர்த்தரின் சபை ஒன்றே ஒன்று தான். நீங்கள் அதில் மட்டுமே அங்கத்தினராக இருப்பீர்கள்.

# 12. உங்கள் நகரத்தில் அல்லது கிராமத்தில் கிறிஸ்துவின் சபையை நீங்கள் தொடங்குவது எப்படி?

கிறிஸ்துவின் சபை இல்லாத ஒருநகரம் அல்லது கிராமத்தில் நீங்கள் வசித்துக் கொண்டிருக்கக்கூடும். நாமகரண சபைகளும், மனிதன் உண்டாக்கிய பிற சபைகளும் அங்கு இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய சபை இன்னும் அங்கு நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே என்ன செய்வது என நீங்கள் திகைக்கிறீர்கள்! அங்கே இருக்கும் ஏதாவது ஒரு சபையில் நீங்கள் அங்கத்தினராகலாமா? அல்லது இப்போதிருக்கும் நிலையிலேயே நீங்கள் தொடரலாமா? கிறிஸ்துவின் சபை உள்ள ஒரு இடத்திற்கு குடி பெயர்ந்து போக முயற்சிக்கலாமா? இந்த முக்கியமான கேள்விகளுக்கு எளிதில் பதில் கிடைக்காமல் இருக்கலாம்.

நான் உங்களுக்கு சில ஆலோசனைகளைக் கூறுகிறேன். கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராவது உங்களுக்கு சாத்தியமே. அதோடு, உங்கள் சொந்த நகரத்தில் அல்லது கிராமத்தில் எங்கிருந்த போதிலும் அங்கே கர்த்தரின் சபையின் ஒரு பிராந்திய சபையை தொடங்குவதில் நீங்கள் முன்னோடியாக இருக்க முடியும். நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் இதோ :

1. உங்களுக்கென்று ஒரு வேதாகமத்தை வாங்குங்கள். தேவனுடைய விருப்பத்தைச் செய்ய நீங்கள் ஆர்வமாக இருந்தால், ஒரு வேதாகமம் உங்களுக்கு தேவை. வேதாகமப் புத்தகங்கள் இங்கு இந்தியாவில் கிடைக்கின்றன. அது கிடைத்த பின், அதைப் படிக்கவும், கற்றுக் கொள்ளவும் தொடங்குங்கள். இன்றைய

மக்களுக்காக கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் சட்டங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டின் பகுதியில் தனிக்கவனம் செலுத்துங்கள். இப்படி செய்வதால் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்றும், கர்த்தரின் சபையில் எப்படி ஒரு அங்கத்தினராக இருப்பது எப்படி ஆராதிப்பது, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்றும் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

2. சத்தியத்திற்கு நீங்கள் முதலில் கீழ்படியுங்கள். நீங்கள் கர்த்தரை விசுவாசித்தால் உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனம் திரும்பி, மனிதர்களுக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை செய்து தண்ணீரில் மூழ்கி திருமுழுக்கு பெற்றால், பின் நீங்கள் இரட்சிக்கப்பட முடியும் (மாற்கு 16:16, மத்தேயு 10:32, அப். 2:38) என கர்த்தர் கற்பிக்கிறார். அப்போஸ்தலர்களுடைய நாட்களிலே கிறிஸ்துவுக்குள் மக்கள் எவ்வாறு மனந்திரும்பினார்கள் என்பதைப் பார்க்க அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் படியுங்கள். கர்த்தருக்கு கீழ்படிய நீங்கள் தயாராகி விட்டால், சுவி சேஷத்தின் படியாக உங்களுக்கு திருமுழுக்குக் கொடுக்க யாராவது ஒருவரைக் கண்டுபிடியுங்கள். அதிக தண்ணீருள்ள ஓரிரு இடத்திற்கு அவர் உங்களை அழைத்துச் சென்று உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயராலே அவர் உங்களை தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குக் கொடுக்க ஒப்புக்கொடுங்கள். இப்போது, திருமுழுக்கு பெற்றபடியால் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக சேர்க்கப்பட்டு விடுகிறீர்கள். ஏனெனில் இரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்து அவருடைய சபையில் சேர்க்கிறார் (அப். 2:47). நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகவும் மாறிவிடுகிறீர்கள் (அப். 11:26).

3. இப்போது உங்கள் வீட்டிலேயே ஆராதனை நடத்த ஆரம்பியுங்கள் உங்கள் குடும்ப அங்கத்தினர்களையும், ஆர்வமுள்ள நண்பர்களையும் அதில் பங்குகொள்ள உற்சாகப்படுத்துங்கள். வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமை கூடி வர வேண்டும். தேவன் அங்கீகரித்துக் கொள்ளும்படியாக வேத வாசிப்பு (2 தீமோ. 2:15), ஜெபம் (அப். 2:42), இசைக்கருவியின்றி பாடல் (எபே. 5:19) ஆகியவை நடத்தப்பட வேண்டும் கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பமும், அவருடைய இரத்தத்தின் நினைவாக திராட்சரசமும் கொண்ட கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டும். (மத் 26:26-28, 1 கொரி. 11). கடையில் திராட்ச ரசம் கிடைக்காவிட்டால் உலர்ந்த திராட்சையை வாங்கி, அவற்றை வெந்நீரில் கொதிக்கவைத்து அந்தச்சாறை பயன்படுத்தலாம். இறுதியாக உங்கள் வரவுக்குத் தக்கதாக ஏதாவது பணத்தைக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். உங்களோடு கூடிவந்திருப்பவர்களும் கொடுக்க விரும்பலாம். இந்த பணமானது நேர்மையாக கணக்கு வைக்கப்பட்டு ஏழைகளுக்கு உதவவும், கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்பவும் பயன்படுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஆராதனை முறையானது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்பட வேண்டும் (அப். 20:7).

4. உங்கள் வீட்டில் மட்டுமல்லாமல், ஒரு வேளை உங்கள் நகரத்தின் அல்லது கிராமத்தின் பிற பகுதிகளிலும் கூட ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சபை கூடிவர நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். தேவனுக்குக் கீழ்படிய விருப்பம் உள்ளவர்கள் தோன்றும் வரை, இந்தக் கூட்டங்களில் போதிக்கும் ஆராதனைகளை மட்டுமே நீங்கள் நடத்த வேண்டும். பின்னர் அவர்கள் சபை அங்கத்தினர்களான பின்பு தொழுது கொள்ளும்

ஆராதனைகளை ஏற்கனவே கூறியபடி நடத்தலாம். ஆனால் இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டும் என்றும், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தினபடி அவர்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கமுடியுமென்றும் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவனை அவர்கள் தொழுதுகொள்ள வேண்டும் என்றும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் மக்களிடம் நீங்கள் சொல்ல வேண்டும். இதை நீங்கள் செய்தால் உங்கள் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்டும்.

5. உங்கள் ஆராதனையிலும், போதிப்பதிலும், வாழ்க்கையிலும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள். தேவனுடைய சத்தியத்தைப் பரப்ப உங்களால் முடிந்தவற்றைச் செய்யுங்கள். நினைவிருக்கட்டும். நீங்கள் எங்கேயிருக்கிறீர்களோ, அங்கே ஒரு கிறிஸ்தவனாகவும், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராகவும் இருக்க வேண்டும். அதற்குத் தேவையானதெல்லாம் கர்த்தருக்குக் கீழ்படிந்து நடப்பதே.

# 13. கிறிஸ்துவின் நாமம்

புதிய ஏற்பாட்டைப் படிக்கும் போது அதிலே கிறிஸ்துவின் நாமம் பலமுறைக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டு ஒருவர் வியப்படையக் கூடும். பெயர் ஒன்றும் முக்கியமல்ல என்றும் அல்லது பெயரில் ஒன்றுமில்லை என்றும் மனிதன் எப்போதுமே தர்க்கம் பண்ணுகிறான். சில பெயர்களை பொறுத்தவரை இது உண்மையாக இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய நாமத்தைப் பொறுத்தமட்டில் நிச்சயமாக அப்படியில்லை.

1. தேவனுடைய மக்கள் ஒரு புது பெயரால் அழைக்கப்பட வேண்டியதாயிற்று (ஏசாயா 62:2) புதிய ஏற்பாட்டைத் திருப்பினால் சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரிக்கவும் (ரோமர் 16:16, 1 கொரி. 12:13), அதின் தனிப்பட்ட உறுப்பினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அறியப்படவும் வேண்டியதாயிற்று (அப் 11:26) என்பதை அறிகிறோம். இதுவே அந்த புதுப் பெயராகும்.
2. குடும்பப் பெயர் கிறிஸ்துவின் பெயராக இருக்கிறது. "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு...." என்பதாக பவுல் எபே 3:14-15 வசனங்களில் கூறுகிறார்.
3. சபை கிறிஸ்துவின் மணவாட்டி எனச் சொல்லப்படுகிறது. மணவாட்டி அவருடைய நாமத்தை அணிந்திருக்கிறாள் (வெளி. 21:9, 22:17). கிறிஸ்துவுக்கு ஒரே மணவாட்டிதான் உண்டு. அவர் மீண்டும் வரும்போது, அவருடைய பெயரைத் தரித்துள்ள அந்த மணவாட்டியை தம்மோடு சேர்த்துக் கொள்வார்.

4. எல்லா நாமங்களுக்கும் மேலானதாக அவருடைய நாமம் உள்ளது. "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்" பிலிப்பியர் 2:9-11

5. கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்புண்டு. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" அப் 4:12

6. கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" 1யோவான் 5:13

7. கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிட வேண்டும். "... கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன்..." II தீமோ 2:19

8. மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும். "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப் 2:38) என்று சொன்னான்.

9. கர்த்தரின் நாமத்தில் ஆராதனை கூடி வரவேண்டும். கிறிஸ்து கூறினார் : "ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத் 18:20) குறிப்பு : கிறிஸ்துவின் பெயரை நீ அணிந்து கொள்ளாதிருந்தால், எப்படி கிறிஸ்துவின் பெயரால் கூடி வர இயலும்.

10. எல்லாவற்றையும் கர்த்தரின் நாமத்தில் செய்ய வேண்டும். "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" கொலோ. 3:17.

11. கிறிஸ்துவின் நாமத்தால் நீதிமான்கள் வெறுக்கப்படுவர். "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" மத். 10:22

12. கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் செய்ய வேண்டும். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" யோவான் 14:13

13. கிறிஸ்துவின் நாமத்தின் வழியாக பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. "பிள்ளைகளே அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்ககப்படுகிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" 1 யோவா 2:12

14. கிறிஸ்துவின் நாமத்தை நிந்திக்கலாகாது. "உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்கள் அல்லவோ தூஷிக்கிறார்கள்?" யாக். 2:7

15. கிறிஸ்துவின் நாமத்தில் பிரயாசப்பட வேண்டும். "நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும் பொறுமையாயிருக் கிறதையும் என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்". வெளி. 2:3

16. கிறிஸ்துவின் நாமத்தின் மூலமாக நித்திய ஜீவன் கிடைக்கிறது "இயேசு தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" யோ. 20:30-31

கிறிஸ்துவின் நாமம் எவ்வளவு முக்கியம் என்பதை நிச்சயமாக இப்பொழுது நீ அறிந்திருப்பாய். அப்படி இது உண்மையாக இருக்கும் போது கர்த்தரின் நாமத்தை நானும் நீயும் தனித்தனியாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும், தரித்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியம் என நீயும் கூட அறிந்து கொள்ளலாம். நான் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதால், நான் ஒரு கிறிஸ்தவன். உன் நிலை என்ன? வேதாகமத்தில் நீ வாசிக்கக்கூடிய சபையில் நீ ஒரு அங்கத்தினரா? நீ ஒரு கிறிஸ்தவனா? இல்லையேல், இன்றே கிறிஸ்தவனாகு.

# 14. நீ ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியும்

மதப் பிரிவினைகள் நிறைந்த ஒரு உலகத்தில் இன்று நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம். நூற்றுக்கணக்கில் சபைகளும், ஆயிரக்கணக்கில் பெயர்களும் பட்டங்களும் உள்ளன. கிறிஸ்துவின் காரியத்தில் இது உதவி செய்திருக்கவில்லை. மாறாக பெரும்பாலான மக்களுக்கு தீய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவாக மிகக் குழப்பமும், வெறுப்பும் அடைந்த நிலையில், மக்கள் மதத்தை முற்றிலும் நிராகரிக்கும் அளவுக்கு வந்துவிட்டனர். ஆனால் பிரச்சனைக்கு தீர்வு இதுவா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் இதை விட ஒரு சிறந்த வழி இருக்கவேண்டும்.

ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருப்பது சாத்தியம் என்று உங்களுக்குத் தெரியுமா? அது சாத்தியமே. உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் நீங்களும் பிறரும் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்க முடியும். கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொள்ள முடியும் போது, ஏன் மனிதனுடைய பெயர்களையும் பட்டங்களையும் தரித்துக்கொள்ளுகிறீர்கள்? வேதாகமம் மாத்திரமே உங்களை கிறிஸ்தவனாக உண்டாக்கும்.

புதிய ஏற்பாடு காலத்தில் மக்கள் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருந்தனர். உதாரணமாக, ".... முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று", என நாம் படிக்கிறோம் (அப். 11:26) எந்த வகையைச் சார்ந்த கிறிஸ்தவர் என்பது இன்றைய நாட்களில் கேட்கப்படும் கேள்வி. ஆனால் அந்நாளில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைக்கப்பட்டனர்.

மீண்டும் அகிரிப்பா அரசனுக்கு பவுல் போதிப்பதைப் பற்றி நாம் படிக்கிறோம். "... நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என அரசன் பதில் கூறுவதையும் பார்க்கிறோம் (அப் 26:28). கர்த்தரின் உபதேசத்திற்குக் கீழ்படிந்தால், அது ஒருவனை கிறிஸ்தவனாக்கும் என இம்மனிதன் எவ்வாறு அறிவான்? பிறருக்கு அது என்ன செய்தது எனத் தெளிவாக அறிந்திருந்தான் அல்லது அவனுக்கு அது குறிப்பாகப் போதிக்கப்பட்டது. எப்படியிருப்பினும், கிறிஸ்துவுக்குக் கீழ்படியும் போது, அதன் விளைவாக அவனை அது கிறிஸ்தவனாக்குகிறது என அவன் அறிந்திருந்தான். இறுதியாக, பேதுரு எழுதுகிறார். "ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமல் இருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேதுரு 4:36).

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவன் என்ற பெயர் மூன்று முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் அது கர்த்தருக்குக் கீழ்படிந்திருக்கிற தனி மனிதன் அல்லது மனிதர்களையே குறிப்பிட்டு தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. அல்லது கர்த்தருக்கு ஒருவன் கீழ்படிகிறபோது, அது அவனை கிறிஸ்தவனாக்குகிறது எனக் காட்டப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் என்ற வார்த்தைக்கு, கிறிஸ்துவைப் போல் இருப்பது எனப் பொருள். கர்த்தரின் நாமத்தைத் தரித்துக் கொள்ளாமல், அவருக்கு ஒருவன் எப்படி கீழ்படியக்கூடும்? கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ளுவதற்குப் பதிலாக மனிதன் உருவாக்கிய பெயர்களைத் தரித்துக் கொண்டு, கிறிஸ்தவைப் போலவோ அல்லது கிறிஸ்துவின் ஆவியை உடையவனாக இருப்பதோ ஒருவனுக்கு சாத்தியமா? நிச்சயமாக அது முற்றிலும் சாத்தியமல்ல.

பெயரில் ஒன்றுமில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இரட்சிப்பு கிறிஸ்துவின் நாமத்திலேயே உள்ளது என்று

சுவிசேஷம் கூறுகிறது (அப். 4:12). அதற்கு மாறாக, இரட்சிப்பு வேறு எந்தப் பெயரிலும் இல்லை. கொரிந்து சபையில் சில அங்கத்தினர்கள் பிரிந்திருந்து, சிலர் தாங்கள் பவுலைச் சார்ந்தவர்களென்றும் கூறியதைப் பற்றி 1 கொரிந்தியர் 1:12ம் வசனத்தில் பார்க்கிறோம். பவுல் அதற்காக அவர்களை ஆதரிக்கவில்லை; மாறாக அதைக் கண்டித்தான். “சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகள் இல்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்” என்றார் (1 கொரி. 1:10) பின்னர் அவர்களுடைய நடவடிக்கையின் அபத்தத்தைக் காட்டும் வகையில், “கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்திலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என அவன் கேட்டான் (1 கொரி. 1:13)

சந்தேகமின்றி, கிறிஸ்து ஒருவரே என்றும், அவர்களுக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தார் என்றும், கர்த்தரின் பெயரால் அவர்கள் திருமுழுக்குப் பெற்றிருந்தார்கள் என்றும் அவர்கள் அறிவார்கள். எனவே, அவர்கள் மனிதர்களின் பெயர்களைத் தரித்துக் கொள்ளுவதற்கு மாறாக கிறிஸ்துவின் பெயரைத் தரிக்க வேண்டும் என்ற முடிவை நாம் பார்க்கிறோம். அதே நிலை இன்றும் உண்மையாக இருக்கிறது.

வேதாகமத்தில் நீங்கள் காண முடியாத பெயர்களையும் பட்டங்களையும் நீங்கள் தரித்துக் கொண்டிருந்தால், நீங்கள் வேதாகமம் கற்பிக்கிறதைப் போன்ற ஒரு கிறிஸ்தவன் அல்ல. சில வேளைகளில் வேதாகமத்தில் வரும் பெயரை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் அதை நீங்களோ பிறரோ தரித்துக்கொள்ள கர்த்தருக்கு

சித்தமில்லையென்றால், அதை நீங்கள் பயன்படுத்துவது தவறு. கிறிஸ்தவன் என்ற பெயருக்கு முன்பாக, அல்லது பின்னாக எதையாகிலும் நீங்கள் சேர்த்துக் கொண்டால், கர்த்தருடைய நாமத்தை நீங்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, நீங்கள் எப்படியிருக்க வேண்டுமென்று வேதாகமம் கற்பிக்கிறதோ அக்கருத்துப்படி நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஏதாவது ஒருவகை கிறிஸ்தவனாக இருந்து கொண்டு, கிறிஸ்தவனாக மாத்திரம் இருக்க முடியாது. ஒன்றில் நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்லது நீங்கள் ஒரு கிறிஸ்தவன் அல்ல.

உங்கள் வேதாகமத்தைப் படித்துக் கற்றுக்கொள்ளும் படியாகவும், அதன் பின் வேதம் சொல்லுவது போல நடக்கவும் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அவ்வாறு செய்வீர்களானால் நீங்கள் என்னவாக இருப்பீர்கள் என நாங்கள் அறிவோம். நீங்கள் ஒரு கிறிஸ்தனாக மட்டுமே இருப்பீர்கள். அதற்கு மேலோ அல்லது கீழோ அல்ல. அது போதுமானதாக இருக்கக் கூடாதா? நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மட்டுமே இருக்க முடியும்போது, ஏன் கிறிஸ்தவனுக்குக் கூடுதலாக அல்லது கிறிஸ்தவனுக்குக் குறைவாக நீங்கள் இருக்க வேண்டும்?

நீங்கள் கர்த்தருக்கு செவி கொடுத்து (ரோமர் 10:17) தேவனை விசுவாசித்து (எபிரெயர் 11:6), உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு (அப். 17:30) கிறிஸ்துவை அறிக்கை செய்து (மத்தேயு 10:32) பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றால் (அப். 2:38; மாற்கு 16:16) பின்னர் கர்த்தர் உங்களை இரட்சிப்பார். அது உங்களை ஒரு கிறிஸ்தவனாக மட்டும் ஆக்கும். அதே கீழ்படிதலானது நீங்கள் வேதாகமத்தில் படிக்கக் கூடிய ஒரே ஒரு சபையான கர்த்தருடைய சபையில் உங்களை அங்கத்தினராகவும் ஆக்குகிறது (அப் 2:47; மத்தேயு. 16:18; ரோமர் 16:16).

ஒரு கிறிஸ்தவனாக மாத்திரமும், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராகவும் நீங்கள் இருக்கும்போது, சரியான பாதையில் நீங்கள் நடப்பதை அறிவீர்கள். கிறிஸ்துவின் நாமத்தை நீங்கள் தரித்துக்கொண்டிருப்பதையும், அவருடைய சபையில் ஒரு அங்கத்தினராக இருப்பதையும் நீங்கள் எல்லாரிடமும் பெருமையாகக் கூறிக்கொள்ள முடியும். “வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்” என பவுல் ஏன் எழுதினார் என்பதையும் புரிந்து கொள்ள முடியும். (கொலோ 3:17)

# 15. கிறிஸ்தவம் உனக்கு என்ன செய்யக் கூடும்?

வேறு எதைக் காட்டிலும் கிறிஸ்தவமே இவ்வுலகத்திற்கு அதிகமாகச் செய்திருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட, அதினுடைய தாக்கத்தினால் ஈர்க்கப்பட்டுள்ளனர். மனிதன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும், அதே போல அவன் நல்லவனாகவும் இருப்பது அவனில் அது ஏற்படுத்திய தாக்கத்தின் காரணத்தால்தான். மறு பக்கத்தில், கிறிஸ்தவம் உலகத்திற்கு அறிமுகப்படுத்தப் படாவிட்டால், உலகம் எவ்வாறு இருந்திருக்கக்கூடும் என்பதை சிறிது சிந்தித்துப்பாருங்கள். ஒருவேளை நாம் வாழ முடிந்திருந்தால் சந்தேகமின்றி வாழ்வதற்கே அது ஒரு பயங்கரமான இடமாக இருந்திருக்கும்.

பொதுவாக மனித குலத்திற்கு கிறிஸ்தவம் அதிகமாகச் செய்துள்ள போதிலும் இயற்கையில் இன்னும் தனி மனிதனைக் குறித்த காரியமாகத்தான் இருக்கிறது. எனவே, அதிலிருந்து மிக அதிகமான நன்மைகளை நாம் அடையவேண்டுமானால், அதை ஏற்றுக் கொள்ளத் தொடங்க வேண்டும். கிறிஸ்தவத்தில் தலைவரான இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி, அவருடைய உபதேசங்களுக்கு நாம் கீழ்படியும் போது மட்டுமே இதைச் செய்வது சாத்தியமாகக்கூடும். அவ்வாறு செய்யும்போது அதின் கொள்கைகள் நமது வாழ்வில் அங்கம் பெற்று, நாம் எவ்வளவு கனி கொடுக்க அவற்றை அனுமதிக்கிறோமோ, அவ்வளவு ஆசீர்வாதங்களை நாம் அடைகிறோம்.

கிறிஸ்தவத்தை மனதளவில் ஏற்றுக் கொண்டால் அல்லது ஏதாவது ஒரு மத அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டால் அவர்கள் அளவற்ற ஆசீர்வாதங்களையும்

பலன்களையும் பெறமுடியும் என்று சிலர் நம்ப வைக்கப்படுகின்றனர். தாங்கள் செல்வந்தர்களாகி விடுவதாகவும், தங்களுடைய சகல பிரச்சனைகளும் உடனே தீர்க்கப்படுவதாகவும், இதற்குப் பதிலாக தாங்கள் எதையும் செய்யத் தேவையில்லை என்பதாகவும் அவர்கள் தமக்குள்ளே கற்பனை செய்கின்றனர். ஆவிக்குரிய காரியங்களில் சிறிதும் அக்கறையில்லாமல், உலக ஆதாயங்களை மட்டுமே தேடுகிறவர்கள்தான் வழக்கமாக இவ்வகையான சிந்தனையில் மூழ்கிப் போகின்றனர். தங்களுடைய கனவுகள் நிறைவேறாமல் போகும்போது, இப்படிப்பட்டவர்களே எப்போதும் ஏமாந்து போகின்றனர். அதோடு வேறு திசைக்கு வெகு எளிதில் திரும்பி விடுகின்றனர். கிறிஸ்தவம் எளிமையானது. அதற்குரிய விலையைக் கொடுக்க விரும்புவோருக்கு அது பல நன்மைகளை வைத்துள்ளது. விசுவாசம், கீழ்படிதல், ஊழியம், பற்றுதல், நம்பிக்கை இவைகளே அந்த விலை. இதயப்பூர்வமாக அதை ஏற்றுக்கொண்டவர்கள் உலகக் காரியங்களிலும் ஆவிக்குரிய காரியங்களிலும் மென்மேலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர். இதே காரியத்தை அது உங்களுக்கும் செய்ய முடியும்.

1. உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து கிறிஸ்தவம் உங்களுக்கு இரட்சிப்பை கொண்டு வர முடியும். தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளித்திடும் காரணகர்த்தாவாக கிறிஸ்து இருக்கிறார் (எபிரெயர் 5:9). "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16) என அவர் கூறினார். மனிதன் பாவியாக இருக்கிறான்; எனவே அவனுக்கு மன்னிப்புத் தேவை. மனிதனுடைய விலையேறப் பெற்ற சொத்தாகிய ஆத்துமாவைக் கழுவி, சுத்தப்படுத்தும் இப்பணியை கிறிஸ்து மாத்திரமே செய்ய முடியும் (லூக்கா 19:10, மத். 16:26).

2. தேவனுடைய பல வாக்குத்தத்தங்களோடு உங்களை கிறிஸ்தவம் தொடர்பு கொள்ளச்செய்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கனிகள் (அப். 2:38) சபையில் சேர்த்துக் கொள்ளுவது. (அப் 2:47) கர்த்தரின் பிரசன்னம் (மத் 28:30) ஜெபம் செய்யும் சலுகை (யோவான் 9:31) நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கை (யோவான் 14:1-3) ஆகிய அனைத்தும் உள்ளன.

3. ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய ஆசீர்வாதங்களை கிறிஸ்துவம் அளிக்கிறது. கிறிஸ்து கற்பித்தார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" (மத்தேயு 6:3) தேவனுடைய ராஜ்யம் அல்லது சபைக்கு முன்னுரிமை கொடுத்தால் மட்டுமே பிற காரியங்கள் கூட்டிக் கொடுக்கப்படும் என்பதைக் கவனியுங்கள். தாங்கள் ஏன் அதிகமாக ஆசீர்வதிக்கப்படவில்லை என்று பல வேளைகளில் கிறிஸ்தவர்கள் வியப்படையக்கூடும். ஆனால் கர்த்தரின் காரியத்தில் எவ்வளவு குறைவாக அவர்கள் செய்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதே இல்லை. மத்தேயு 5ஆம் அதிகாரத்தைப் படியுங்கள்.

4. நல்லதைச் செய்யும் சந்தர்ப்பங்களை கிறிஸ்தவம் நமக்கு அளிக்கிறது. "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலாத்தியர் 6:2). "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா. 6:10).

5. எவ்வளவு அதிகமாக நாம் கொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பெற்றுக்கொள்வோம் என்பதை கிறிஸ்தவம் கற்பிக்கிறது. "பின்னும் நான்

சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (1 கொரி. 9:6) என பவுல் தமது கொரிந்து சபை சகோதரர்களை உற்சாகப்படுத்தினார். மீண்டுமாக, ".... மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7). பலர் ஒரு போதும் பெறுவதில்லை. ஏனெனில், அவர்கள் ஒருபோதும் கொடுப்பதுமில்லை. பின், ஏன் கிடைக்கவில்லை என அவர்கள் வியப்பதுண்டு.

6. பெறுவதை விடக் கொடுப்பது மிக ஆசீர்வாதமானது என கிறிஸ்தவம் அறிவிக்கிறது. கிறிஸ்து தாமே இதை சொல்லியிருக்கிறார் (அப் 20:35) அவர் மேலும் கூறினார். "தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என் நிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான் (மத்தேயு 10:39).

7. இவ்வுலகத்திலிருந்து வரப்போகும் உலகத்திற்கு ஒருவேளை நடத்திச் செல்லும் ஒரு வாழ்க்கை முறையை கிறிஸ்தவம் ஒருவனுக்கு அளிக்கிறது. ஒருவன் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என இயேசு கற்பிக்கிறார் (லூக்கா 6:31). தனது எதிரியை மனிதன் நேசிக்க வேண்டுமென்று அவர் கூறினார். (மத்தேயு 5:44) தன்னைப் போல தனது அயலானையும் நேசிக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு 22:39) கிறிஸ்தவர்கள் உலகத்தை நேசிக்கலாகாது (1 யோவான் 2:15). மாறாக ஒரு ஜீவனுள்ள பலியாக தன்னைத் தானே தேவனுக்கு அர்ப்பணித்து (ரோமர் 12:1) தன்னைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் (மத்தேயு. 5:8) நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையுடைய ஒரு சமாதானமான மகிழ்ச்சி மிக்க நல்ல ஒரு வாழ்க்கை இதின் விளைவாக

முடிவில் அமைகிறது. (கொலோ 1:5) இதைவிட அதிகமாக ஒருவன் வேறு எதைக் கேட்கக் கூடும்?

எனவே கிறிஸ்தவம் மிகவும் பலனளிப்பதாக இருக்கிறது. ஆனால் ஒருவன் அதற்காக எதைக் கொடுக்கிறானோ, அதற்கேற்பவே அவனுக்குக் கிடைக்கிறது. அதற்காக எதையும் நீங்கள் செய்யாவிட்டால், அதிகமாக எதையும் எதிர்பார்க்கலாகாது. ஆனால் உங்களை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்து, அவருடைய கொள்கைகள் உங்களது வாழ்வில் கிரியை செய்ய அனுமதித்தால் கற்பனை செய்து பார்ப்பதற்கும் மேலாக நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

# 16. இரட்சிக்கப்பட ஒருவன் என்ன செய்ய வேண்டும்?

"எல்லாரும் பாவஞ் செய்து ...." (ரோமர் 3:23). "அந்தப்படியே : நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10), "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). இப்படியாக, இதேபோன்ற ஒத்த வசனங்கள் பலவற்றை தொடர்ந்து கூற இயலும். இந்நிலையில் தனக்கு தேவன் இன்றி, நம்பிக்கை ஏதுமின்றி மனிதன் வாழ்ந்துபோய், பாழாய்ப் போயிருப்பதை தான் இவையனைத்தும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. எனவே, மனிதன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு நாம் திரும்பினால் அங்கே காணமுடியும்.

மனந்திரும்புவது பற்றிய பதினொரு நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இடம் அனுமதித்திருந்தால், அவைகளில் ஒவ்வொன்றையும் பரிசீலித்து, இரட்சிக்கப்பட அவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது என்பதை கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் இந்தப் பாடத்தில் மூன்று நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டும் நாம் கவனிப்போம் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அதே கேள்வி கேட்கப்பட்டு, அதே பதில் கொடுக்கப்பட்டுள்ளது. "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற அடிப்படையில் அக்கேள்வியாகும். இப்பொழுது, அதற்கு என்ன பதில் என்பதை ஒன்றன் பின் ஒன்றாக கண்டுபிடிக்க முயற்சிப்போம்.

***1. "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப்போஸ்தலர் 2). பெந்தெகொஸ்தே நாளிலே மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்டனர்.***

இங்கே அவிசுவாசிகளான ஒரு மக்கள் கூட்டத்தோடு பேதுருவும், பிற அப்போஸ்தலர்களும் விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததில் அவர்களில் பலருக்குப் பங்குண்டு. எனவே முதல் முதலாக கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டியதாக இருந்தது. இதைச் செய்ய, கிறிஸ்து அவர்கள் மத்தியில் செய்திருந்த அற்புதங்கள், அடையாளங்கள், ஆச்சரியமான காரியங்களையெல்லாம் பேதுரு அவர்களுக்கு நினைப்பூட்டினார். பின்னர், கிறிஸ்து சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டிருந்தார் என்பது மட்டுமன்றி, அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று நாட்களுக்குப் பின் உயிர்த்தெழுந்தார் என்பதும், அவர்களில் பலருக்குக் காட்சியளித்திருந்தார் என்பதும், பின்னர் மீண்டுமாக பரலோகத்தின் பிதாவினிடத்தில் அவர் பரமேறிச் சென்றார் என்பதும் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இறுதியாக, கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருந்த பல தீர்க்கதரிசனங்களை அவர் நிறைவேற்றியிருந்தார் என்ற உண்மையும், குறிப்பாக அவர் வருகையைப் பற்றி தாவீது முன்னுரைத்திருந்ததும், இவ்வேளையில் கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதும் வலியுறுத்தப்பட்டது.

"இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது"

(அப்போஸ்தலர் 2:37,39) பதிவேடு தொடர்ந்து குறிப்பிடுகிறது. பின்னர் "அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" (அப்போஸ்தலர் 2:41) பின்னர், "... இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்" என அப்போஸ்தலர் நடபடிகள் 2:47ம் வசனம் கூறுகிறது.

நற்செய்தி போதிக்கப்பட்டது, அதை அவர்கள் விசுவாசித்தனர் மனஸ்தாபப்பட்டனர், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றனர் என்பதை தயவுசெய்து கவனியுங்கள். ஆகவே என்ன நடந்தது? அவர்கள் இரட்சிக்கப்பட்டு கர்த்தரின் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## *2. "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் ?" என்ற கேள்வியை சவுல் கேட்டான் (அப்போஸ்தலர் 9 : 22)*

இதோ இங்கே ஒரு மனிதன் இருந்தான். அவன் கர்த்தருடைய சபையை பாழடிப்பதற்காக தனது சக்திக்குட்பட்ட சகலவற்றையும் செய்து கொண்டிருந்தான். தமஸ்கு பட்டணத்துக்கு அவன் பயணமாக சென்றபோது கர்த்தர் அவனுக்குத் தோன்றினார். "அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்கு சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது: அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது : சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் அதற்கு அவன் : ஆண்டவரே நீர் யார்? என்றான். அதற்கு கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே : முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கி திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய

சித்தமாயிருக்கிறீர்? என்றான். அதற்கு கர்த்தர் : நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்போஸ்தலர் 9:3-6) எப்படி அவன் நகரத்துக்குள் சென்றான் என்றும், பார்வையிழந்த நிலையில் உபவாசத்தோடும், ஜெபத்தோடும் மூன்று நாட்களும் அங்கு எப்படி கழித்தான் என்பதாக அந்த நிகழ்ச்சி தொடருகிறது.

சவுலிடம் போய், அவன் செய்ய வேண்டியது என்ன என்று கூற அனனியாவுக்கு கர்த்தர் எப்படி கற்பித்தார் என்பது பற்றியும் பதிவேடு கூறுகிறது. பின்னர் நடந்தவற்றை பவுல் விசாரிக்கும் போது, அனனியா தன்னிடம் வந்து கூறியதைச் சொன்னார். "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றார்" (அப்போஸ்தலர் 22:16)

இப்பொழுது, சவுல் எப்பொழுது இரட்சிக்கப்பட்டான்? கர்த்தர் அவனுக்குத் தோன்றிய வேளையில் என்பதாக சிலர் சொல்லுகின்றனர். ஆனால் நகரத்திற்குள் செல்லவும், அவன் செய்ய வேண்டியது அங்கே கூறப்படும் என்று கர்த்தர் அவனிடம் சொன்னார். ஜெபத்தின் வழியாக அவன் இரட்சிக்கப்பட்டான் என்று சிலர் கூறுகின்றனர். அது உண்மையாக இருந்தால் அவன் பாவங்கள் கழுவப்பட எழுந்து, திருமுழுக்கு பெற்றுக்கொள் என்று அனனியா அவனிடம் ஏன் சொன்னான்? உண்மையென்னவென்றால் பெந்தெகொஸ்தே நாளில் எப்படி மக்கள் இரட்சிக்கப்பட்டார்களோ, அவ்விதமாகவே அவனும் இரட்சிக்கப்பட்டான். அவன் நற்செய்தியை கேட்டான், அதை விசுவாசித்தான், தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பினான், கர்த்தரை தேவனுடைய குமாரனென ஏற்றுக் கொண்டான். தனது பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றான்.

### 3. “ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ?” என பிலிப்பிய சிறைச்சாலைக்காரன் சத்தமாகக் கேட்டான்

பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டனர். அவர்கள் அற்புதமாக விடுவிக்கப்பட்டிருந்தனர்; கைதிகள் தப்பிவிட்டதாக சிறைச்சாலைக்காரன் பயந்துபோய், உள்ளே விரைந்து வந்து பார்த்தான். கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்கள் என்று எண்ணி, பட்டயத்தை உருவி தன்னைத்தானே கொலை செய்து கொள்ளப் போனான். பவுல் மிகுந்த சத்தமிட்டு, “நீ உனக்குக் கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே, நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச் சொல்லி, உள்ளே ஓடி நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,” (அப்போஸ்தலர் 16:28, 29) இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பின்பு, “அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி”, (அப்போஸ்தலர் 16:31) கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். இப்பொழுது, இந்த இடத்தில் பலர் நிறுத்திக் கொண்டு இம்மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு இதெல்லாம்தான் தேவையாயிருந்தன என கூறுகின்றனர். ஆனால் இது தொடக்கம் மட்டுமே யார் அந்த மனிதன் அவன் ஒரு அவிசுவாசி. எனவே, முதலில் அவன் விசுவாசிக்க வேண்டியது அவசியமாயிற்று. மேலும் அதை சாத்தியமாக்க பதிவேடு தொடர்வது போல, “அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்தில்தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களை தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய்,

அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டாரனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்" (அப்போஸ்தலர் 16:32-34) இப்பொழுது இம்மனிதனும் அவனுடைய குடும்பத்தாரும் என்ன செய்தனர்? "கர்த்தருடைய வசனத்தை அவர்கள் கேட்டபோது, அவர்கள் அதை விசுவாசித்தனர். ஆனால் கர்த்தரால் என்ன கட்டளை கொடுக்கப்பட்டது? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16). கர்த்தரின் வார்த்தையைக் கேட்டதின் விளைவாக, அம்மனிதன் கைதிகளின் காயங்களைக் கழுவி, தனது மனந்திரும்புதலைக் காட்டினான். அதே நேரத்தில் திருமுழுக்கும் பெற்றுக் கொண்டான். பவுல் போதித்த செய்தியின் பகுதியாக இக்கட்டளைகள் இருந்தன. இல்லையென்றால், சிறைச்சாலைக்காரன் ஒருபோதும் அவர்கள் கூறியதை கேட்டிருக்கமாட்டான்.

இப்போது இரட்சிக்கப்பட இன்று ஒருவர் என்ன செய்ய வேண்டும்? அன்று செய்த அதேபோன்று தான். சத்தியத்தை ஒருவர் கேட்கவும், அதை விசுவாசிக்கவும் தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படவும், கிறிஸ்துவை அறிக்கையிடவும், திருமுழுக்கு பெறவும் வேண்டும் எபிரெயர் 11:6; ரோமர் 10:10; லூக்கா 13:3; அப்போஸ்தலர் 17:30; மத்தேயு 10:32; மாற்கு 15:16; மேலும் அப்போஸ்தலர் 2:38 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

# 17. இரட்சிப்பின் திட்டம்

மனிதன் ஒரு பாவி என வேதாகமம் கற்பிக்கிறது. "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 2:23) என பவுல் அறிவிக்கிறார். தொடர்ந்து அவர் சொல்லுகிறார்; "பாவத்தின் சம்பளம் மரணம் ...." (ரோமர் 6:23) மனிதனுக்கு இரட்சிப்பு தேவை என்று இதற்கு அர்த்தம். ஆனால் அவன் எப்படி இரட்சிக்கப்படக்கூடும்? வேதாகமம் இதையும் கூட வெளிப்படுத்துகிறது. தேவன் மனிதனை படைத்ததும் அல்லாமல், அவனை உண்டாக்கினவருக்கு விரோதமாக மனிதன் திரும்புகிறவனாக இருந்தபோதிலும் தப்பிக்கும் ஒரு வழியையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார். இந்த தப்பிக்கும் வழியானது தேவனுடைய இரக்கம், கருணை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. (யோவான் 3:16; எபே 2:8, 9). அவரிடம் வரவேண்டுமென்று மனிதனை அவர் கட்டாயப்படுத்தவில்லை. மாறாக, அவரிடம் வர அவனை அழைக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்கிறவர்கள். தாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இரட்சிப்பைக் காண்கிறார்கள்.

ஒருவன் இரட்சிப்படைய, ஐந்து எளிய படிகளை தேவன் அமைத்திருக்கிறார் :

1. சத்தியத்தை ஒருவர் கேட்க வேண்டும் "... இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்..." (மத் 17:15) "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17)

2. ஒருவன் தேவனையும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது ; கூடாத காரியம்

ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்". (எபிரெயர் 11:6) கிறிஸ்து கூறுகிறார்; "... தேவனிடத்தில் விசுவாசமாக இருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவான் 14:1). அவர் மேலும் சொன்னார் "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவன் உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்...." (யோவான் 3:36) இதோடு பல வசனங்களைச் சேர்க்க முடியும்; ஆனால் ஒருவனுடைய இரட்சிப்புக்கு விசுவாசம் அல்லது நம்பிக்கை வெகு முக்கியமானது என்பதை நீங்கள் பார்க்கக் கூடும், என்றாலும், இரட்சிப்பு விசுவாசத்தினால் மட்டுமே வருகிறது என இந்த வசனங்களில் எதுவும் குறிப்பிடவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

3. தனது பாவங்களுக்காக ஒருவன் மனஸ்தாபப்பட வேண்டும். கிறிஸ்து கூறினார்; "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக்கா 13:3) பவுல் போதித்தார்: "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப் 17:30). பேதுரு எழுதினார் : "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9). மனந்திரும்புதல் என்றால் பாவத்தைப் பற்றி ஒரு

மனமாற்றம் எனப்பொருள் அதாவது, திரும்பி வேறு திசையில் செல்லுதல் என்று அர்த்தம். வேறு வார்த்தைகளில் கூறினால், பாவத்திலிருந்து விலகு எனப்பொருள், ஒரு மனிதன் ஒரு நல்ல வாழ்க்கையைத் தொடங்குமுன் அவர் பாவத்திலிருந்து விடுபட வேண்டும். இதைத்தான் கர்த்தர் விரும்புகிறார்.

4. கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என ஒருவர் அறிக்கை செய்ய வேண்டும். கிறிஸ்துவே கூறினார் : "மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத்தேயு 10:32). இந்த அறிக்கையை வாயினால் செய்ய வேண்டும் என்று பவுல் அறிவிக்கிறார். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். 'இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10:10). அப்போஸ்தலருடைய நடபடிகள் 8ம் அதிகாரத்தில் ஒரு உதாரணத்தை நாம் பார்க்கிறோம். எத்தியோப்பிய மந்திரி திருமுழுக்குப் பெறுமுன் இப்படியான ஒரு அறிக்கையைச் செய்கிறான். இது நல்ல அறிக்கை என்பதாக சாதாரணமாகக் கருதப்படுகிறது. இதைவிடச் சிறந்த அறிக்கையை ஒருவர் செய்ய முடியுமா?

5. ஒருவர் இரட்சிக்கப்படத் திருமுழுக்குப் பெற வேண்டும். கிறிஸ்து அதைத் தெளிவாக்கினார். "விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16)". பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப் 2:38). மீண்டும் அவர் கூறினார் : "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச

அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு 3:21). "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ் நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு..." (அப் 22:16) என சவுலுக்குச் சொல்லப்பட்டது. ஒரே ஒரு திருமுழுக்கு இருப்பதை வேதாகமம் கூறுகிறது (எபே 4:5). அது ஒரு அடக்கம் (கொலோ 2:12) என்றும், அது தண்ணீரில் செய்யப்படும் ஒரு அடக்கம் (அப் 8: 36-39) என்றும் அது சொல்லுகிறது. இந்த ஒரு திருமுழுக்கும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே நடத்தப்பட வேண்டும் (மத் 28:18-20). அது ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும், சபைக்குள்ளும் கொண்டு வருகிறது. (ரோமர் 6: 3-4 கொரி 12:13)

இந்த எளிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், ஒருவன் தனது கடந்த காலப் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படவும், கர்த்தரின் சபையில் சேர்த்துக் கொள்ளப்படவும், ஒரு கிறிஸ்தவனாக அவனுடைய வாழ்நாள் முழுவதும் தேவனுக்கு விசுவாசமாக ஊழியஞ் செய்யவும் முடியும். அவ்வாறு செய்தால் பரலோகம் அவனுடையதாக இருக்கும். இக்காரியங்களில் நீங்கள் இன்றே செயல்பட உங்களுக்கு வேண்டுகோள் விடுகிறோம்.

# 18. யார் இந்த இயேசுகிறிஸ்து?

இன்றைய உலகில் இயேசுகிறிஸ்துவின் பெயரை ஒருபோதுமே கேட்டிராத ஒரு சில மக்கள் இருக்கக்கூடும் அநேகர் கேட்டிருக்கின்றனர். ஆனால் அவரைக் கேள்விப்பட்ட பலர் உண்மையிலேயே அவர் யார்? என்று அறியாமல் குழப்பத்தில் இருக்கின்றனர். பல லட்சக்கணக்கான மக்கள் அவரை விசுவாசிக்கின்றனர். ஆனால் லட்சக்கணக்கான பிறமக்கள் அவரை விசுவாசிப்பதில்லை. இந்த இயேசுகிறிஸ்து யார்?

ஆதியில் இயேசுகிறிஸ்து தேவனோடு இருந்தார். அவர் தேவனின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமும் ஆக இருக்கிறதாக எபிரெயர் 1:3 விவரிக்கிறது. யோவான் 1:1 அவரை "வார்த்தை" என்று அழைப்பதுடன், ஆதியிலே தேவனோடு இருந்தார் என்றும் அவர் தேவனோடு இருந்தார் என்றும் கூறுகிறது. தேவனோடும் பரிசுத்த ஆவியானவரோடும் தேவத்துவத்தில் அவர் ஒரு ஆளாக இருக்கிறார். இதற்குப் பொருள் தோற்றமும் முடிவும் இன்றி, நித்தியத்திற்கும் உள்ளவராக தேவன் வர்ணிக்கப்படுகிறார்; இயேசுகிறிஸ்துவும் இப்படிப்பட்டவரே (ஏசாயா 63:16), நேற்றும் என்றும் அவர் மாறாதவராக இருக்கிறார் என்றும் (எபிரெயர் 13:8) தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாக (வெளி. 3:14); முந்தினவரும் பிந்தினவருமாக (வெளி 22:13) இருப்பதாக சொல்லப்படுகிறார்.

இயேசுகிறிஸ்து சகலவற்றையும் படைத்தார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என ஆதியாகமம் 1:1ல் நாம் படிக்கிறோம். எபிரெய மொழியில் தேவன் என்ற சொல்லானது பிதா, வார்த்தை, பரிசுத்த

ஆவியானவர் ஆகியோரை உள்ளடக்கி பன்மையில் கூறப்பட்டுள்ளது. ஆதியாகமம் 1:26ல் தேவன் கூறினார், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக..." இயேசுகிறிஸ்துவைப் பற்றி பேசும்போது, கொலோசெயர் 1:16, 17 வசனங்களில் பவுல் மேலும் விவரிக்கிறார் : "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது .... சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது".

பூமிக்குரிய தந்தையின்றி, தேவனுடைய வல்லமையால் கன்னியான மரியாளிடமிருந்து இயேசுகிறிஸ்து பிறந்தார். அவருடைய அபூர்வமான பிறப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசியால் இவ்வாறு முன்னுரைக்கப்பட்டது : "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசாயா 7:14) மத்தேயு 1:20, 21 வசனங்களில், "...அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" எனக் கூறப்பட்டுள்ளது. சாதாரண ஒரு மனிதனைவிட இயேசு மேலானவர் என்றும், அவர் அற்புதமாகப் பிறந்தார் என்றும் இந்த வசனங்களிலிருந்து நாம் காணலாம்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:3-8) மனிதனுடைய

பாவங்களிலிருந்து அவனை மீட்க அவர் இவ்வுலகத்திற்கு வந்தார். யோவான் 3:16,17 வசனங்களில் நாம் படிக்கிறோம் : "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." கிறிஸ்துதாமே, "இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனிதகுமாரன் வந்திருக்கிறார் என்றார்" (லூக்கா 19:10)

தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க இயேசுகிறிஸ்து அற்புதங்களைச் செய்தார். அவருடைய அற்புதங்களைப் பற்றி யோவான் எழுதும்போது, "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்றார் (யோவான் 20:30, 31)

தம்மை விசுவாசிப்பவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும் நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறவும் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தார். அப்போஸ்தலர் பவுல் எழுதும் வசனங்களை நாம் படிக்கிறோம் : "அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள்

இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே ... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து ...." (1கொரி. 15:1-4)

"எனது சபை" (மத்தேயு 16:18) என அவர் அழைத்த தமது குடும்பத்தில் கீழ்ப்படிவோரை இயேசுகிறிஸ்து இரட்சிப்பதாக வாக்களித்தார். இந்த சரீரமாகிய மக்களுக்காக அவர் மரித்தார். மேலும் அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அது அவருடை சரீரம் என்றழைக்கப்படுகிறது. அதின் தலையாக அவர் இருக்கிறார். அவருடைய நாமத்தைத் தரித்த அவருடைய மணவாட்டி என்றும் அது வர்ணிக்கப்படுகிறது (எபேசியர் 5:23, 25; அப்.2:47; எபேசி. 3:15: அப் 4:12) அந்த இரட்சிக்கப்ட்ட சரீரமாகிய மக்களுக்காக ஒருநாள் அவர் மீண்டும் வருவார்.

இயேசுகிறிஸ்து தேவத்துவத்தின் இரண்டாவது ஆளாக இருக்கிறார் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி) (மத்தேயு 28:19, 20) ஒரே தேவன், ஒரே கர்த்தர் (கிறிஸ்து) ஒரே ஆவி (பரிசுத்த ஆவியானவர்) உண்டு (எபேசி. 4:1-6) பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரங்களையும் படைத்தவராக கிறிஸ்து இருக்கிறார் (மத் 28:18). அவர் இப்போது தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருந்து. ராஜாதி ராஜனாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார் (1 தீமோ 6:15). அவருடைய மக்களாகிய சபையை பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல அவர் மீண்டும் ஒரு நாள் வருவார்; அங்கே அவர்கள் நித்தியத்திற்குள் வாசம் செய்வர். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக

வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" என அவர் வாக்களித்தார் (யோவான் 14:1-3).

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? யோவான் 8:24ல் அவர் எச்சரித்தார் : ".... நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்". அவரில் நாம் விசுவாசம் வைத்தால் அவருக்கு நாம் கீழ்ப்படிவோம் (மாற்கு 16:16) மரணபரியந்தம் அவருக்கு விசுவாசமாக இருப்போம் (வெளி 2:10)

# 19. புதிய பிறப்பு

மீண்டும் பிறத்தல், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள், புதிய பிறப்பு என்றெல்லாம் மக்கள் பேசிக் கொள்ளுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம் அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள்? அவர்களிடம் நீங்கள் கேட்பதாக இருந்தால், கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களை அது குறிக்கிறது எனப் பொதுவான விளக்கத்தைக் கொடுப்பார்கள். மேலும் அதிகமாக நீங்கள் அவர்களிடம் கேட்டால், ஒரு வேளை நீண்ட ஒரு விளக்கம் அளித்துக் கொண்டிருப்பார்கள். ஆனாலும் தேவனுடைய வார்த்தைக்கு ஒப்ப அந்தக் காரியத்தை விளக்க முடியாமல் தோல்வியைத் தழுவிக் கொள்ளுவார்கள்.

இது ஒரு வேதாகமக் காரியமாக இருப்பதால், வேதாகமம் என்ன கற்பிக்கிறது எனப் பார்க்க நாம் வேதாகமத்திற்கே செல்ல விரும்புகிறோம். இதை ஆரம்பிக்க, வசனத்தை வாசிப்பதே சிறந்த வழியாகும். எனவே நாம் படிக்கிறோம் : "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கோதேமு எனப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவனிடத்தில் வந்து : ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றார். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ; ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கோதேமு ஒரு மனிதன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்

கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக : ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது, அதன் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்" (யோவான் 3:1-8)

முதலாவதாக, இங்கு ஆராயப்படும் இந்தப் பிறப்பானது ஒரு மாம்சப் பிறப்பிற்கு சிறிதும் சம்பந்தப்பட்டதல்ல என்பதை நாம் காணவேண்டும். இந்த வசனப் பகுதியில் காணப்படும் தண்ணீர் மாம்ச பிறப்பிற்கு சம்பந்தப்பட்டது என விளக்கமளித்து அதை விட்டு விட முயலும் சிலர் இருக்கின்றனர். ஆனால் அது அப்படி அல்ல. அது ஒரு மாம்ச பிறப்பைப் பற்றிய காரியம் பேசப்படுவதாக நிக்கோதேமு நினைத்தான் ஆனால் அது பற்றியதல்ல என கர்த்தர் விவரிக்கிறார். இரண்டாவதாக, அது ஒரு மாம்சப் பிறப்பு அல்லவென்றால், பின் அவர் பேசிக்கொண்டிருப்பது ஒரு ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி தான் இருக்க முடியும். எனவே இயேசு இவ்வாறு விளக்கினார். "...ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:5). அவர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்.

1. **"பிறவாவிட்டால்"** கர்த்தருடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஒரே ஒரு வழி மட்டுமே

இருக்கிறது. பிறவாவிட்டால் என்ற எதிர்மறையான வார்த்தையை இயேசு பயன்படுத்துகிறார்.

2. **"ஒருவன்"** இங்கே ஆணையும், பெண்ணையும் குறிக்கும் பொது வார்த்தையாக ஒருவன் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. வேறு விதமாகச் சொன்னால் கணக்கு ஒப்புவிக்கும் வயதுள்ள எல்லாரும் குழந்தைகள் இதில் சேர்க்கப்படவில்லை.

3. **"பிறப்பு"** ஒரு பிறப்புக்கு இரு முக்கிய காரியங்கள் தேவை : ஒன்று பிரசவம், அடுத்தது பிறப்பு, ஆவிக்குரிய புதிய பிறப்பில், முக்கியமான ஒன்று ஆவி, அடுத்தது : தண்ணீர், இங்கே ஒருவன் ஆவியால் பிரசவிக்கப்பட்டு, ஜலத்தினால் பிறக்கிறான் : அவ்வளவு எளிது.

4. **"ஜலம்"** (தண்ணீர்) இங்கே தண்ணீர் திருமுழுக்கிற்கு சம்பந்தப்பட்டது. இங்கே தண்ணீர் என்பது நேரிடை அர்த்தத்தில் கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். பிற எல்லா சமயங்களிலும் தண்ணீர் என்பது அடையாளமாக மறை பொருளான அர்த்தத்தில் குறிப்பிடப்படுகிறது; எப்போதுமே அது ஜீவ தண்ணீர் என சொல்லப்படுகிறது. கிறிஸ்துவ மார்க்கத்தில், ஒரு செயலில் தண்ணீர் சம்பந்தப்படுகிறது; அது திருமுழுக்கு, இப்படியாக, ஒருவன் தண்ணீரில் முழுகி திருமுழுக்குப் பெறும் போது (ரோமர் 6:3, 4) புதிய பிறவி எடுக்கிறான்.

5. **"ஆவி"** புதிய பிறவியில் ஒருவன் ஆவியினால் உற்பத்தியாகிறான். ஆனால் எப்படி? தேவனுடைய வசனத்தின் வழியாக வார்த்தையானது ஆவியால் கொடுக்கப்பட்டது ; ஒரு நல்ல உள்ளத்தில் அது ஊன்றப்படும் போது அது வளர்ந்து கீழ்ப்படிதலைக் கொண்டு வருகிறது. விசுவாசிப்பவன் தனது வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணிக்கத் தீர்மானிக்கிறான் : உலக காரியங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் திரும்புகிறான். இயேசுவோடு திருமுழுக்கில் அடக்கம்

செய்யப்பட்டு, ஒரு புதிய மனிதனாக எழும்பி, பாவத்திலிருந்து கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறக்கிறான். பேதுரு கூறுவதைக் கவனியுங்கள் : "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடே ஒருவரையொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெபிக்கப்பட்டிருக்கிறீர்களே". (1பேதுரு 1:22, 23) எனவே ஆவி தேவனுடைய வார்த்தை மூலமாக கர்ப்பம் தரிக்க, கிரியை செய்கிறது; கீழ்ப்படிதலின் மூலமாக ஒருவன் திருமுழுக்குப் பெறுகிறான். இப்படியாக, தண்ணீராலும் ஆவியாலும் அவன் பிறந்திருக்கிறான். இது அவ்வளவு எளிதானது.

6. "இராஜ்யம்" இது தேவனுடைய இராஜ்யம், அதாவது சபை (மத் 16:18, 19) அதில் பிரவேசிக்க ஒரே ஒரு வழி தான் இருக்கிறதென்றும், தண்ணீர் மூலமாகவும் ஆவியாலும் பிறப்பதே அந்த வழி என்றும் இயேசு சொல்லுகிறார்.

மாம்சப் பிறப்பிற்கும், ஆவியின் பிறப்பிற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் காட்டி கிறிஸ்து தொடருகிறார். பின் காற்றுடன் ஒப்பிட்டு விளக்குகிறார். ஒருவன் காற்றைக் காண முடியாவிட்டாலும், அதில் விளைவுகளைப் பார்க்கவும் உணரவும் இயலும். அதே நிலை ஆவிக்கும் பொருந்துகிறது. அது இயங்குவதைக் காண இயலாது ஆனால் விளைவுகளை மிகவும் தெளிவாகக் காணமுடிகிறது. வார்த்தையின் மூலமாக ஆவி கிரியை செய்கிறது. அது கற்பிக்கிறதற்குக் கீழ்ப்படிந்தால், ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் கர்த்தரின் இராஜ்யத்திற்குள்ளும்

பிரவேசிக்கிறான் ஆவியின் கனிகளை அடைகிறான். (கலாத்தியர் 5:22, 23)

இறுதியாக, இரட்சிக்கப்பட அல்லது இராஜ்யத்திற்குள் அல்லது சபைக்குள் பிரவேசிக்க, கர்த்தர் இரண்டு வழிகளை வைத்திருக்கவில்லை. புதிய பிறப்பு என்னும் உபதேசம், மாற்கு 16:16 அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38 வசனங்களோடும், ஒருவன் இரட்சிக்கப்பட செய்ய வேண்டியதென்ன என்று கூறும் பிற எல்லா வசனங்களோடும் முற்றிலுமாக ஒத்துப்போகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், ஒருவன் சத்தியத்தைக் கேட்கும் போதும் (ரோமர் 10:17) அதை விசுவாசிக்கும் போதும் (ரோமர் 10:10) அவனுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் போதும் (அப்.17:30) கிறிஸ்துவை அறிக்கை செய்யும் போதும் (ரோமர் 10:10) திருமுழுக்குப் பெறும் போதும் (அப் 2:38; அப். 22:16) இந்தத் தொடர் நடவடிக்கைகளால் அவன் மீண்டும் பிறக்கிறான்; இப்படியாக கர்த்தரின் சபைக்குள் பிரவேசிக்கிறான். (1 கொரி 12:13; அப். 2:47). தேவனுடைய வார்த்தையின் படியாக நீர் மீண்டும் பிறந்திருக்கிறீரா? என்பதே கேள்வி.

# 20. இன்று தேவன் நம்மோடு நேரில் பேசுகிறாரா?

பரலோகத்தின் தேவனிடத்தில் கிறிஸ்து திரும்பிச் செல்லும் வேளையில், அவருடைய பணியைத் தொடர்ந்து செய்ய தமது 12 அப்போஸ்தலர்களையும் ஆயத்தப்படுத்தினார். ஆனால் அவர்கள் சாதாரண மனிதர்களாக மட்டுமே இருந்த படியால் அவர்களுக்கு அவர் சொல்லியிருந்த எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ள அவர்களுக்கு இயலாது என்பதை அவர் அறிந்தார். மனிதத் தவறில் அவர்கள் கள்ளப் போதகங்களைக் கூட கற்று கொடுத்திடக்கூடும். இப்படிப்பட்ட ஆபத்தான முடிவற்ற பிரட்சனைகளைத் தடுத்து, அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை அனுப்புவதாக இயேசு வாக்களித்தார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26). என அவர் சொன்னார். மீண்டும் அவர் சொன்னார், "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 16:13)

இயேசு கட்டளையிட்டிருந்தபடி, பெந்தேகொஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் எருசலேமிலே கூடி வந்தனர். அப்போது சடிதியில் தேவனால் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் நிரப்பப்பட்டார். வாக்களித்திருந்தபடியே பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப்பெற்று, அப்போது அங்கே கூடி

வந்திருந்தவர்களுடைய மொழிகளிலே அவர்கள் அற்புதமாகப் பேசக்கூடியவர்களாக இருந்தனர். (அப் 2:4:8). அவர்கள் வியாதிக்காரரை சுகப்படுத்தவும், மரித்தோரை எழுப்பவும், இயேசு வாக்களித்தபடி, பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின் படியாக தேவனின் சத்தியங்களைப் பேசவும் செய்தனர். அந்த வல்லமையின் மூலமாக மனித தவறுகளும் முரண்பாடுகளும் இன்றி, புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களையும் அவர்கள் எழுதினார்கள்.

அப்போது, பரிசுத்த ஆவியானவரின் இந்த அற்புதவரங்கள் கொடுக்கப்பட காரணங்கள் என்ன?

- ❖ அப்போஸ்தலர்களை வழி நடத்த இயேசு அங்கு இல்லை, அவர் பரலோகத்திற்கு திரும்பிச் சென்றிருந்தார்.
- ❖ பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, சபை தொடங்கியிருந்தது. சபைக்கடுத்த சகல பழக்கங்களும் போதனைகளும் மனித தவறுகள் ஏதுமின்றி இருப்பதை நிச்சயப்படுத்த தேவ வழி நடத்துதல் தேவையாக இருந்தது.
- ❖ இரட்சிப்பின் நற்செய்தியைப் போதித்துக் கொண்டு அப்போஸ்தலர்களும் அவர்களால் மனந்திரும்பியவர்களும் உலகெங்கும் சுற்றித்திரிந்த படியால், அவர்களால் செய்யப்பட்ட அற்புதங்களாலே தங்களை தேவனுடைய மக்கள் என நிரூபித்தனர்.
- ❖ புதிய ஏற்பாட்டின் வசனங்கள் இன்னும் எழுதப்படாதிருந்தன. "தேவன் - வெளிப்படுத்திய வார்த்தைகளை அப்போஸ்தலர்கள் எழுதிய போது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இது நடந்தது.
- ❖ எழுத்தர்கள் செய்த அற்புத அடையாளங்களாலே, புதிய ஏற்பாட்டின் எழுத்துக்கள் தேவனுடைய வார்த்தை என உறுதி செய்யப்பட்டன (மாற்கு 16:20)

❖ சபையின் தொடக்க காலத்திலே, சுவிசேஷங்கள் எழுதி முடிப்பதற்கு முன்பு, பல பிராந்திய சபைகளில் ஆவியானவரின் வழி நடத்துதலின் அவசியத் தேவையிருந்தது. ஏனெனில் அவர்கள் உலகெங்கும் சிதறிப் போயிருந்தனர். ஜெபத்தாலும் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததாலும் (அப் 8 : 14-18) சரியான வழி நடத்துதலை அவர் செய்யத்தக்கதாக கிறிஸ்தவர்களுக்கு தனிப்பட்ட அற்புத வரங்கள் கிடைத்தன (1 கொரிந்தியர் 12 : 4-31). அப்போஸ்தலர்கள் தவிர வேறு எவரும் இந்த அற்புத கொடைகளைக் கொடுக்க முடியும் என்று காண்பிக்கும் வசனங்கள் புதிய ஏற்பாட்டில் எங்கும் காணப்படாத படியால், அப்போஸ்தலர்களும், அவர்கள் யாருக்கு கொடைகளை அளித்தார்களோ அவர்களும் மரித்துப்போன பின்பு, அற்புத யுகம் மறைந்தது. தேவன் தமது வல்லமையைக் குறைத்துக் கொண்டார் என்பது இதற்குக் காரணம் அல்ல, ஆனால் அந்த வேளையில் சுவிசேஷங்கள் பூரணமாக எழுதப்பட்டு விட்டன.

புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய செய்தியின் நிறைவைப் பற்றி, நாம் 2தீமோத்தேயு 3:16, 17 வசனங்களில் படிக்கிறோம். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது".

இன்று தேவனுடைய விருப்பத்தை நாம் எப்படி அறிந்து கொள்ளுகிறோம்? விசுவாசத்தில் நாம் எப்படி வளருகிறோம்? ரோமர் 10:17ம் வசனத்தில் இவற்றிற்கான

விடையைக் காண்கிறோம் "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்".

இருந்த போதிலும், பல பிரிவு சபை மக்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படாத வார்த்தைகளை இன்று புதிய வெளிப்பாடுகளை தேவன் தங்களுக்கு அளித்து, தங்களோடு நேரில் பேசுவதாகவும் சவால் விடுகின்றனர். இவர்களின் உரிமை உண்மையா? இந்நாட்களில் தனிப்பட்ட நபர்களிடம் பரிசுத்த ஆவியானவர் பேசுகிறாரா? ஒருவருக்கு ஒரு கட்டளையையும், வேறொருவருக்கு அதற்கு முற்றிலும் மாறான கட்டளையையும் கொடுக்கிறரா? இந்த மதத்தலைவர்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசுவதாக உரிமை கோரும் போது அவர்கள் அளித்திடும் "நற்செய்தி"யின் செய்தியானது புதிய ஏற்பாட்டில் ஏற்கனவே எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருப்பவைகளுக்கு எதிராதான இருப்பதால், இம்மனிதர்கள் உண்மையை பேசிக் கொண்டிருக்கிறார்களா? இல்லையே!

தேவன் எச்சரிக்கிறார் : "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" (கலா. 1:8)

"அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனமும் நமக்கு உண்டு. இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்தத்தீர்க்கத்தரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்ககத்தரிசனமானது ஒரு காலத்திலும் மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே

ஏவப்பட்டுப் பேசினார்கள். கள்ளத் தீர்க்கத்தரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்". (2 பேதுரு 1:19-21; 2:1)

சுவிசேஷங்களின் இறுதி வார்த்தைகளான வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19 வசனங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பைகளோடு எதையும் கூட்டக்கூடாது அல்லது அதிலிருந்து எடுத்துப் போடக்கூடாது என்று எச்சரிக்கின்றன. மனித வர்க்கத்திற்கு தேவன் அளித்திருக்கும் செய்தி பூரணமானதாக இருக்கிறது. அவரிடமிருந்து புதிய வார்த்தைகளை இன்று பேசுவதாக உரிமை கொண்டாடுவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையில் உருவாகும் வார்த்தைகளையே பேசிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். மேலும் அவர்களை நம்புகிறவர்களையும் ஏமாற்றுகின்றனர். தேவன் என்ன கூறியிருக்கிறார் என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால், வேதாகமத்திற்குச் செல்லுங்கள், ஏவப்பட்டு எழுதப்பட்ட அந்த வார்த்தைகள் வழியாக அவர் உங்களிடம் பேசட்டும்!

# 21. ஞானஸ்நானத்தின் நோக்கம்

ஞானஸ்நானம் (திருமுழுக்கு) ஒரு வேதாகமப் பாடம். அது மிக எளிமையான ஒன்று என சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல வேளைகளில் அது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. பெரும்பாலான மக்கள் அதின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதில்லை. வார்த்தை நமக்கு எதைக் கற்பிக்கிறது?

முதலாவதாக, ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என்பதை நாம் புரிந்துகொள்வோம் (எபேசியர் 4:5). யோவானின் திருமுழுக்கு துன்பத்தின் திருமுழுக்குப் போன்ற வேறு திருமுழுக்குகளும் இருந்திருக்கின்றன. ஆனால் பவுல் கி.பி. 64ஆம் ஆண்டில் இந்த அறிவிப்பை விடுத்த வேளையிலிருந்து, ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே இருந்தது. அது உண்மையாக இருக்கும்போது, எந்த ஒன்றைப் பற்றி பவுல் எண்ணிக் கொண்டிருந்தார் என நாம் தீர்மானிப்பது எப்படி? அது எளிது. நாம் செய்யவேண்டியதெல்லாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு திருப்பிக்கொண்டு, அங்கே பட்டியலீட்டிருக்கிற பல மனந்திரும்புதல் நிகழ்ச்சிகளைக் கவனிப்பதுதான். அவ்வாறு நாம் செய்யும்போது, அது ஒரு அடக்கம் என்றும், தண்ணீரில் செய்யப்படும் அடக்கம் என்றும், அது பாவங்களைக் கழுவுகிறது என்றும் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக செய்யப்படுகிறது என்றும், கர்த்தரால் அது கட்டளையிடப்பட்டிருக்கிறது என்றும் நாம் கண்டுபிடிக்கிறோம் (அப். 8:27-39; அப். 22:16; அப்; 2:38; அப். 10:48).

திருமுழுக்குப் பற்றிக் கூறும் பல வசனப் பகுதிகளை வேதாகமத்தில் படிக்கும்போது, அதை பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பற்றிய காரியம் என்பதாக நினைத்து, கடந்து

செல்கின்றனர். என்றாலும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு ஒரு போதும் கட்டளையிடப்படவில்லை என்பதை தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். காரியத்தை நீங்கள் படிக்கும்போது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு விதி உண்டு. அதாவது, எந்த ஒரு முழுக்குப் பற்றி பேசப்படுகிறதோ அது தண்ணீர் திருமுழுக்கு இன்றி வேறு திருமுழுக்குப் பற்றிய குறிப்பாக இருப்பின் அது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு அல்லது யோவானின் திருமுழுக்கு என்பதாக எப்போதுமே தெளிவாகச் சொல்லப்படுகிறது, என்றாலும், திருமுழுக்கு என்ற வார்த்தை மட்டுமே காணப்பட்டால், மாற்கு 16:16; அப்போஸ்தலருடைய நடபடி 2:38 வசனங்களில் காணப்படுவது போல பின் அது தண்ணீர் திருமுழுக்கைப் பற்றிதான் கூறுகிறது என்று நீங்கள் எப்பொழுதுமே குறித்துக்கொள்ளலாம். எபேசியர் 4:5ம் வசனத்தில் பேசப்படும் ஒரு திருமுழுக்குக்கும் இது பொருந்தும்.

அடுத்து, தவறான காரியத்திற்காகவும் திருமுழுக்குப் பெறுவது சாத்தியம், என்பதை மனதில் வையுங்கள். உதாரணமாக, ஒருவர் இரட்சிக்கப்படக் கூடும், அதன்பின் அவர் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று பரவலாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. மீண்டும், ஒருவர் இரட்சிக்கப்பட்டால் ஒரு சபைக்குள் பிரவேசிக்கப்பட்ட அவர் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த இரு நிகழ்ச்சிகளிலும் தவறான நோக்கத்திற்காக திருமுழுக்கு எடுக்கப்படுகிறது. ஒருவர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார் என்பதால் சுவிசேஷத்தின்படியாக திருமுழுக்குப் பெற இயலாது. ஏனெனில் சுவிசேஷத்தின் படியாக ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருக்காவிட்டால் அவர் இரட்சிக்கப்படுவதில்லை. அல்லது, சுவிசேஷத்திற்கு ஏற்ப திருமுழுக்குப் பெற்ற ஒருவரை அது ஒரு நாமகரண சபையில் சேர்க்காது. விபரமாக சொல்வதானால் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக நினைத்துக்

கொண்டிருக்கும் பல மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். ஏனெனில் உண்மையில் அவர்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. ஒருவர் தண்ணீரில் முழுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் திருமுழுக்குப் பெற்றிருக்கிறார் என்பது அவசியம் இல்லை. சுவிசேஷத்தின்படியான ஒரு திருமுழுக்கு இருக்கிறது; வேதாகமத்தின் அந்த ஒரே திருமுழுக்கைப் பெற வேண்டுமானால் சரியான நோக்கத்திற்காக அது இருக்க வேண்டும். அது சரியான நோக்கத்திற்காக இல்லையென்றால் அது வேதாகமத்தின் ஒரே திருமுழுக்கு அல்ல. அது சரியான திருமுழுக்கு என எண்ணி நீங்கள் ஏமாந்து போக வேண்டாம். இப்படிப்பட்ட நிலையில், அத்தனி மனிதன் மீண்டுமாக தண்ணீரில் முழுக்கப்பட வேண்டும். அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்பதற்காக அல்ல, ஆனால் அவன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்கே. அதன் பின்னர் மட்டுமே சுவிசேஷத்தின் ஒரே திருமுழுக்கை அவன் பெற்றவனாக இருப்பான். இப்போது நாம் சுவிசேஷத்தின் படியான திருமுழுக்கிற்கான நோக்கத்தைப் பற்றி கவனிப்போம்.

1. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரட்சிக்கப்பட ஒருவர் திருமுழுக்குப் பெற வேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16) என கிறிஸ்துவே கூறினார். இரட்சிப்பை, திருமுழுக்குக்குப் பின்னால் கிறிஸ்து வைத்திருக்கிறார்; இரட்சிப்பு திருமுழுக்குக்கு முன்பு அல்ல. ஒருவனை அழிக்க அவிசுவாசம் போதுமானது. ஆனால் இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் விசுவாசித்து திருமுழுக்குப் பெற வேண்டும். மீண்டும் பேதுரு எழுதினார். "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது

நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேதுரு. 3:21) "திருமுழுக்கு இரட்சிக்கிறதில்லை" என யார் சொல்லுவார்கள்?

2. பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டும். பேதுரு போதித்தார். "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38)

3. திருமுழுக்குப் பாவங்களைக் கழுவுகிறது. "இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16) என பவுலுக்குச் சொல்லப்பட்டது.

4. திருமுழுக்கு ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. ரோமர்களுக்கும் கலாத்தியர்க்கும் பவுல் எழுதுகிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3) "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" (கலா. 3:26, 27) திருமுழுக்குப் பெறுவதற்கு முன்பு, தான் இரட்சிக்கப்பட்டிருப்பதாக ஒருவர் உரிமை கோரினால், கிறிஸ்துவுக்கு வெளியே, இப்படியாக கிறிஸ்துவுக்குள் இல்லாமல், இரட்சிக்கப்பட்டிருப்பதாக அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார் என அதற்கு அர்த்தம். ஒரு தவறான கொள்கை, ஒருவருடைய நடவடிக்கைகளால் இப்படித்தான் அறிக்கை செய்ய வழிநடத்தும்.

5. திருமுழுக்கு ஒருவரை சபைக்குள் கொண்டுவருகிறது. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்" (1கொரி 12:13). சரீரம் என்பது இங்கு சபை (1கொலோசெயர் 1:18)ல் குறிப்பிடப்படுவது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு அல்ல, ஆனால் இது தண்ணீர் திருமுழுக்கு ஆகும். ஒருவரை சபைக்குக் கொண்டுவர பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு ஒரு போதும் கொடுக்கப்படவில்லை. மாறாக ஆவியின் வழி நடத்துதலால் அல்லது அதின் வழியாக, அதாவது வார்த்தையின் வழியாக அவர் செயல்படும் போது, அவர் சரீரத்திற்குள் அல்லது சபைக்குள் திருமுழுக்குப் பெறுகிறார்.

6. கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை திருமுழுக்கு படம்பிடித்துக் காட்டுகிறது. (1 கொரி. 15:1-4). கிறிஸ்து சிலுவையில் மரித்தது போல, பாவி தனது பாவங்களில் மரிக்கிறான். கிறிஸ்து ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது போல, தண்ணீர் திருமுழுக்கில் அவன் அடக்கம் செய்யப்படுகிறான். கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தது போல (ரோமர் 6:1-12) கர்த்தரில் அவன் ஒரு புது மனிதனாக எழுப்பப்படுகிறான் (2 கொரி 5:17)

7. திருமுழுக்கு புதிய பிறப்பைக் கொண்டு வருகிறது. கிறிஸ்து சொன்னார். "ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:5) இது ஆவியின் திருமுழுக்கு அல்ல; தண்ணீரின் திருமுழுக்குத்தான் இங்கு குறிக்கப்படுகிறது. வார்த்தையின் வழியாக ஆவிகிரியை செய்யும்போது நாம் ஆவியின் வழி நடத்துதலின் மூலம்

இராஜ்யத்தில் அல்லது சபையில் பிரவேசிக்க திருமுழுக்குப் பெற நாம் கற்றுத்தரப்படுகிறோம். மீண்டும், படியுங்கள் : 2 கொரி 5:17; 1 பேதுரு. 1:21, 22 திருமுழுக்கு மட்டுமே இரட்சிப்பதில்லை. ஆனால் இரட்சிக்கப்பட ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும். சுவிசேஷத்தின் பிரகாரம் நீங்கள் திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? இல்லையெனில், திருமுழுக்கு பெற முயற்சியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 22. "பெந்தெகொஸ்தேக்காரர்" என்றால் யார்?

ஒரு விசித்திரமான உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களில் பலர் தங்களை "பெந்தெகொஸ்தேக்காரர்" என்று அழைத்துக் கொள்ளுகின்றனர். ஆனால் வேதாகமத்தில் ஒரு இடத்தில்கூட "பெந்தெகொஸ்தேக்காரர்" என நீங்கள் படிக்க முடியாது. முழுமையான ஒரு ஒத்தவாக்கிய புத்தகத்தில் நீங்கள் தேடிப்பார்த்தாலும் இந்த வார்த்தையை ஒரு தடவைகூட கண்டு பிடிக்க முடியாது!

கர்த்தரின் சபை நிறுவப்பட்ட பெந்தேகொஸ்தே என்னும் யூதப்பெருவிழா நாளின் பெயரையே தவறாக இவர்கள் எடுத்துக் கொண்டு, தங்களையும் தங்களுடைய சபையையும் அந்த விடுப்புநாளின் பெயரால் அழைத்துக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு காரியத்தை தேவன் ஒருபோதும் கருத்தில் கொள்ளவில்லை.

ஆம், கிறிஸ்து வாக்களித்திருந்தபடி, பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பேரில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அன்றைய நாளில் சபை தொடங்கிற்று. அதனால் மக்கள் "பெந்தெகொஸ்தேக்காரர்" ஆகவோ, சபையும் "பெந்தெகொஸ்தே சபை" யாகவோ இல்லை. மாறாக, சீடர்கள் "கிறிஸ்தவர்கள்" என அழைக்கப்பட்டனர் (அப். 22:26), சபையும் கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருந்தது. "... நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப். 4:12; ரோமர் 16:16) தங்களை "பெந்தெகொஸ்தார்" என

அழைப்பவர்கள், சுவிசேஷத்தில் பெந்தெகொஸ்தே என்னும் பெயர் பயன்படும் விதத்தை சரியாக கவனித்திருக்கவில்லை. அல்லது அந்தநாளில் நடைபெற்ற காரியங்களிலுள்ள பிற உண்மைகளைப் பற்றி அறிய முயற்சிக்கவில்லை. "பரிசுத்த ஆவி", "அந்நியபாஷை", "அற்புதங்கள்" போன்ற வார்த்தைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, அவர்களுடைய சொந்தக் கொள்கைகளை உண்டாக்கியிருக்கின்றனர்.

*கடந்த சில வருடங்களாக இவர்கள், வித்தியாசமான பல பெயர்களை தங்களுக்குத்தானே வைத்துக் கொண்டு பல குழுக்களாகப் பிரிந்திருக்கின்றனர், என்றபோதிலும், இவர்கள் அனைவருமே பரிசுத்த ஆவியானவரால் நேரிடையாக செயல்படுவதாக உரிமை கொண்டாடுகின்றனர்.* தேவன் குழப்பத்திற்கும், பிரிவினைக்கும் உரியவர் அல்ல என்ற உண்மையை இவர்கள் அலட்சியப்படுத்திவிடுகின்றனர் (1 கொரி. 1:10, 14:33; ரோமர் 16:1) மேலும், தேவத்துவத்தில் ஒருவராக இருக்கும் பரிசுத்த ஆவியானவர், மதப்பிரிவினைகளுக்கோ அல்லது சுவிசேஷத்திற்கு விரோதமான பெயர்களைத் தரித்துக்கொள்ளுவதற்கோ ஒரு காரணமாக இருக்க முடியாது.

*அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றதை அவர்கள் பார்க்கின்றனர். எனவே அதே திருமுழுக்கை எல்லா விசுவாசிகளும் பெறுகின்றனர் என அவர்கள் கற்பிக்கின்றனர்.* இந்த திருமுழுக்கிற்காக ஜெபம்பண்ணும்படி மக்களுக்குப் போதிக்கின்றனர். மனந்திரும்பிய சகல விசுவாசிகளும், பெந்தெகொஸ்தே நாளில் தண்ணீரில் திருமுழுக்குப் பெற வேண்டுமென சொல்லப்பட்டதை இவர்கள் அலட்சியப்படுத்தி விடுகின்றனர் (அப். 2:38, 8:36). மேலும், "பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு" பெறுவதற்காக ஜெபம் செய்ய வேண்டி ஒரு ஆத்துமாகூட ஒரு

போதும் கற்றுத்தரப்படவில்லை. அந்த மாதிரியான பெயர்கூட சுவிசேஷங்களில் எழுதப்பட்டிருக்கவில்லை!

***மக்கள் இன்று "அந்நியபாஷை" களில் பேச வேண்டுமென்று அவர்கள் கற்பிக்கின்றனர். தேவன் மட்டுமே அல்லது "ஏவப்பட்டு அர்த்தம் சொல்லுபவர்" மட்டுமே இந்த தேவமொழியை புரிந்து கொள்ளுவர் என்று அவர்கள் கற்பிக்கின்றனர்.*** அப்போஸ்தலர்கள் பேசிய "அந்நிய பாஷை"யைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:7,8 வசனம் கூறுவதை அவர்கள் கவனிக்க மறுக்கின்றனர். ".... இதோ பேசுகிற இவர்கள் எல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?"

***அப்போஸ்தலர்களைப் போலவே தாங்களும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றிருப்பதால், அப்போஸ்தலர்களைப் போல மக்களும் இன்று அற்புதங்களைச் செய்ய முடியும் என்று அவர்கள் கற்பிக்கின்றனர்.*** பெந்தெகொஸ்தே நாளிலே தங்கள் பாவமன்னிப்புக்கென்று, தண்ணீர் திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட போதிலும் (அப். 2:38), அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:12ம் வசனம் கூறுவதுபோல, "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது...." என்ற உண்மையை அவர்கள் அலட்சியப்படுத்துகின்றனர்!

ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டும் (அப் 6:3) அற்புதங்கள் செய்ய முடியாத சில சகோதரர்கள், அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதற்கும் (அப். 6:6), ஜெபங்கள் மூலமாக சிறப்புக் கொடைகளை அளிப்பதற்குமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே, இந்த கூடுதலான மக்கள்

அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர் (வ.8). அப்போஸ்தலர்களால் சிறப்புக் கொடைகளைப் பெற்றிட தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த சில மக்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர் என்பதை புதிய ஏற்பாடு முழுவதும் காணலாம் (அப் 8:18; 1 கொரி 12)

பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமை மூலமாக, விசுவாசிப்பவர்கள் அனைவரும் அற்புத அனுபவங்களைப் பெறமுடியும், அற்புதங்களைச் செய்ய முடியும், அந்நிய பாஷையில் பேசமுடியும், அற்புத சுகம் பெற இயலும், தாங்கள் விரும்பும் உலகக் காரியங்களை "ஆசீர்வாதத்துடன்" பெற முடியும் என்றெல்லாம் அவர்கள் கற்பிக்கின்றனர். கிறிஸ்தவர்களுக்கு மாம்ச மற்றும் உலக சுகங்கள் ஒருபோதும் வாக்களிக்கப்படவில்லை என்பதையோ, பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகச் சொத்துக்களுக்கு சம்பந்தமற்றவர் என்பதையோ இவர்கள் கவனிப்பதில்லை. கிறிஸ்தவர்களுக்கு அற்புத சுகம் வாக்களிக்கப்படவில்லை! விசுவாசிகளை உருவாக்க முதல் நூற்றாண்டில் அற்புதங்கள் பயன்பட்டன (மாற்கு 16:20) விசுவாசிகளை சுகப்படுத்த அல்ல! தீமோத்தேயுவுக்கு வயிற்றில் பிரச்சனை இருந்தது (1 தீமோ. 5:23), பவுலுக்கு மாம்சத்திலே ஒரு முள் இருந்தது (2 கொரி. 12:7), துரோப்பீமு மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விடப்பட்டான் (2 தீமோ. 4:20), எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாக இருந்தான் (பிலிப்பியர் 2:27) என்ற போதிலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையானது இதில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் விசுவாசிகளை சுகப்படுத்தப் பயன்படுத்தப்படவில்லை! பெந்தெகொஸ்தேக்காரர் பல கொள்கைகளையும், சவால்களையும் உண்டாக்குகின்றனர். ஆனால் அவற்றில் பெரும்பாலானவைகள் சுவிசேஷங்களுக்கு முரண்பட்டவைகளாக இருக்கின்றன!

உண்மையிலேயே பெந்தேகொஸ்தரர் செயல்படுவதும், கற்பித்தலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால்தான் என்றால், சுவிசேஷங்களில் ஏற்கனவே பதிவாகி, உறுதிசெய்யப்பட்ட பல காரியங்களுக்கு முரண்பாடானவைகளாக அவை இருக்காது. கர்த்தரின் சபை "பெந்தெகொஸ்தே சபை" அல்ல. அவருடைய மக்கள் "பெந்தெகொஸ்தார்" என்ற பெயரைத் தரிப்பவர் அல்ல. புதிய ஏற்பாட்டுக்கு முரணான கொள்கைகளை நாங்கள் கற்றுக் கொடுப்பதும், நடைமுறைப்படுத்துவதும் கிடையாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் சபை, சரீரம், மரணம் (ரோமர் 6:3-6, 8:10) ஆகியவற்றிற்குள்ளாக்கும் திருமுழுக்கு பெற்றுக்கொள்ளும் நேரந்தொடங்கி, எங்களில் வாசஞ்செய்ய வந்த பரிசுத்த ஆவியின் வழியாக தேவனுக்குள் வசிக்க உண்டாயிருப்பதை நாங்கள் புரிந்துகொள்ளும் வேளையில், பூரணமான புதிய ஏற்பாடு உறுதி செய்யப்பட்டதும், அவருடைய அற்புதமான கிரியைகள் முடிவுக்கு வந்தன என்பதை நாங்கள் உணருகிறோம்.

## "தொடக்கத்திலிருந்து"

கர்த்தரை ஏற்றுக்கொள்ளும் எல்லாருக்கும் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு உண்டு என மத உலகில் ஒரு பெரும் பகுதி மக்கள் நம்புகின்றனர்; அவ்வாறு உபதேசிக்கின்றனர். இந்த தவறான புரிந்து கொள்ளுதலையும் சேர்த்து, இந்த மக்கள் அனைவரும் "அந்நிய பாஷை"யில் பேசவும் அற்புதங்களைச் செய்யவும் தகுதி பெறுகின்றனர் என்று அவர்கள் போதிக்கின்றனர் என்ற போதிலும் இவர்களில் ஒருவர் கூட பார்வையற்ற ஒரு மனிதனுக்கு பார்வை அளிக்க முடிவதில்லை; கை கால்களை பிறவியிலேயே அல்லது இடையிலே இழந்து போனவர்களுக்கு புதிய கை, கால்களை அளிக்க இயலவில்லை, அல்லது மரித்தோரை உயிரோடு எழுப்ப முடியவில்லை. ஒரு உண்மையான அற்புதத்தைச் செய்ய நாம் அவர்களை வலியுறுத்தினால், கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலர்களும் செய்தவற்றைப் போலச் செய்ய தங்களால் இயலாது என்பதற்கு சாக்குபோக்குகளைச் சொல்லுவார்கள். சென்னையில் கேட்டால், போன மாதம் ஒரு அற்புதம் செங்கல்பட்டியில் நடந்தது என்பர்; செங்கல்பட்டில் கேட்டால் செம்பட்டில் நடந்தது என்பர்; தலைவலி, முதுகுவலி, காய்ச்சல் போன்ற வெளியே காணமுடியாத வியாதிகளை சுகப்படுத்தியதாக கூறுவர். ஆனால் இயற்கை சட்டங்களுக்கு மாறான எந்த ஒரு பெரும் அற்புதத்தையும் இவர்கள் செய்ததாக பத்திரிகையோ தொலைக்காட்சியோ ஒரு செய்தியைக் கூட இதுவரை வெளியிட்டதில்லை. உண்மையிலேயே ஒரு அற்புதம் நடைபெற்றிருந்தால் பெரிய செய்தியாக வெளிவந்திருக்குமே!

சில குழப்பங்களைத் தெளிவுபடுத்த, நாம் முதலில் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. பரிசுத்த

ஆவியானவரின் திருமுழுக்கு யாருக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது? கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் சொன்னார் : " என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". (யோவான் 14:26) மீண்டும் அவர் கூறினார், "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வாரர்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோவான் 16:7)

இயேசு யாரிடம் பேசிக்கொண்டிருந்தார்? தமது பிதாவிடத்தில் தாம் திரும்பிப் போனபின்பு, அவருடைய பணியைத் தொடர்ந்து செய்ய அவர் பிரத்தியேகமாக தேர்ந்தெடுத்த மனிதர்களிடம் அந்த அப்போஸ்தலர்களிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார். மக்கள் கூட்டத்தைப் பார்த்து பொதுவாக அவர் சொல்லவில்லை அல்லது வருங்காலங்களில் தம்மை விசுவாசிக்கப் போகும் சகலருக்கும் அதைச் சொல்லவில்லை. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட பனிரெண்டு பேர்களுக்கு மட்டுமே, தேற்றரவாளனின் வாக்குத்தத்தத்தை அவர் அளித்திருந்தார்.

கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் தொடர்ந்து கூறும்போது, "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும் போது அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (யோவான் 15: 26, 27). அவரோடு தொடக்கத்திலிருந்து இருந்து வந்த அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இந்த வாக்குத்தத்தத்தை கிறிஸ்து அளித்ததைக்

கவனியுங்கள். அன்றைய நாளில் அங்கிருந்த ஒவ்வொருவரிடமும் அல்லது இன்றுள்ள நம்மையும் சேர்த்து அவர் சொல்லவில்லை என்பதை தெளிவாக நாம் பார்க்கமுடியும். ஏனெனில், பூமியில் அவருடைய தனிப்பட்ட ஊழியத்தின் தொடக்கத்திலிருநது நாம் யாவரும் அவரோடு வசித்ததில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட பனிரெண்டு பேரில் ஒருவனாகிய யூதாஸ், கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்துவிட்டு, தற்கொலை செய்து கொண்டான். பின்னர், கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்ப்பு, பரமேறிச் சென்றது ஆக அனைத்திற்கும் பின், யூதாசின் இடத்தில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டது. அப்போஸ்தலருடைய நடபடிகள் பதிவேடு கூறுகிறது: "ஆதலால், யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லலாம் எங்களுடனே கூட இருந்த மனிதர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனே கூட சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான்". (அப் 1:21-26)

யாராவது ஒருவரை அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுக்கக் கூடியதாக இருக்கவில்லை என்பதையும், அவர் ஒரு சாட்சியாக இருந்திருக்க வேண்டும் என்பதையும், யோவான் ஸ்நானகனால் கிறிஸ்து திருமுழுக்குப் பெற்ற காலத்தில் இருந்து கர்த்தரோடும் பிற அப்போஸ்தலர்களோடும் இருந்திருக்க வேண்டும் என்பதையும் கவனியுங்கள்.

பரமேறிச் செல்லுவதற்கு சற்று முன்னர், தமது அப்போஸ்தலர்களை ஒலிவ மலையில் கூட்டிச் சேர்த்து இயேசு அவர்களிடம் சொன்னார் : "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள்

உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்". (லூக்கா 24 : 49) அவர் மேலும் கூறும்போது, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப் 1:8)

இந்த வாக்குத்தத்தங்களை கர்த்தர் அளித்த போது யாரிடம் பேசிக்கொண்டிருந்தார்? பொதுவாக மக்களிடமோ அல்லது இந்த சந்ததியாரோடோ அல்ல; மாறாக, அப்போஸ்தலர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தில் பதிவேடு கூறுவது போல, சபை தொடங்கிய நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றனர் என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்வர். அந்த ஊற்றுதலுக்குப் பின், தண்ணீரில் திருமுழுக்குப் பெற்ற எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர் (அப். 5:32). என்றாலும் அற்புதங்கள் செய்யும் வல்லமையை அது அளிக்கவில்லை. வெகு காலத்திற்குப்பின், முதல் புறஜாதியர் உபதேசிக்கப்பட்டபோது (அப்10) அவர்களும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அனுபவத்தைப் பெற்றனர். அதை பேதுரு விவரிக்கும் போது, ".... ஆதியிலே நம் மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்". (அப்11:15-18) இப்படிப்பட்ட ஆவியின் ஊற்றுதல் நமக்கு வாக்களிக்கப்படவில்லை, அல்லது இன்று அவ்வாறு நடப்பது இல்லை.

# 24. ஒருவர் மீண்டும் திருமுழுக்குப் பெற வேண்டுமா?

ஒருவர் திருமுழுக்குப் பெறவேண்டும் என வேதாகமம் திட்டமாகக் கற்பிக்கிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. திருமுழுக்கு இரட்சிக்கிறது (1 பேதுரு 3 : 21) பாவங்கள் மன்னிக்கப்பட அதுதேவை (அப். 2 : 38), அது ஒரு மனிதனை கிறிஸ்துவுக்குள்ளும், சபைக்குள்ளும் பிரவேசிக்கச் செய்கிறது (ரோமர் 6 : 3, 4 : 1, கொரி. 12 : 13) என்றபோதிலும், ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே இருப்பதாக சுவிசேஷம் தெளிவாகக் கற்பிக்கிறது (எபேசியர் 4 : 5). இப்போது கேள்வி என்னவென்றால்: ஒருவர் ஏற்கனவே திருமுழுக்குப் பெற்றிருந்தால், மீண்டும் திருமுழுக்குப் பெறவேண்டுமா?

ஒருவர் சுவிசேஷத்தின்படியாக திருமுழுக்குப் பெற்றிருந்தால், சந்தேகமின்றி, எந்தக் காரணத்திற்காகவும் மீண்டும் அவர் திருமுழுக்குப் பெறத்தேவையில்லை. முதலாவதாக இது செய்ய முடியாதது. சுவிசேஷத்தின் படியாக ஒருவர் ஒரு தடவைக்குமேல் திருமுழுக்குப் பெற ஒருபோதும் இயலாது.

ஆகவே, சுவிசேஷத்தின்படி ஒருவர் திருமுழுக்கு பெற்றிருக்கிறாரா? என்ற கேள்வி எழுகிறது. இலட்சக்கணக்கான மக்கள் தாங்கள் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக நினைத்தபோதிலும், அவர்கள் அப்படி பெற்றிருக்கவில்லை. குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை இங்கு பட்டியலிட்டுக் காட்டுகிறேன்.

1. குழந்தைகளாக இருக்கையில் தெளிப்பைப் பெற்றவர்கள் ஒருபோதும் திருமுழுக்கு பெற்றிருக்கவில்லை. தெளித்தல் திருமுழுக்கு அல்ல. அது சுவிசேஷ ஆதாரம்

எதுவுமற்ற ஒரு மனித வழக்கம். மாறாக, திருமுழுக்கு ஒரு அடக்கம் என்பதாக வேதாகமம் கற்பிக்கிறது (கொலோ. 2 : 12; ரோமர் 6 : 3, 4), அதுவும் தண்ணீரில் ஒரு அடக்கம் ஆகும் (அப். 8 : 26, 39). பின்னர், அடுத்த காரியமாக, குழந்தை திருமுழுக்கை வேதாகமம் ஒரு இடத்திலும் கூறவில்லை. அதற்குப் பதிலாக, குழந்தைகள் பாவமற்றவர்கள் என்று அது கற்பிக்கிறது (மத்தேயு 18 : 1-3). இறுதியாக, ஒருவர் சத்தியத்திற்குக் கீழ்படிய தான் தானே சத்தியத்தைக் கேட்கும் வயதுடையவராக இருக்க வேண்டும். (ரோமர் 10 : 17). அவருடைய இருதயத்தில் விசுவாசிக்கக்கூடிய வயதுடையவராக இருக்க வேண்டும் (யோவான் 3 : 16) அவருடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிற வயதுள்ளவராக இருக்க வேண்டும் (அப். 17 : 30). இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யும் வயதுள்ளவராக இருத்தல் வேண்டும் (மத்தேயு 10 : 32). அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறும் வயதுடையவராக இருக்க வேண்டும் (அப். 2 : 38). எனவே, எந்த வழியில் நீங்கள் பார்த்தாலும், குழந்தையில் ஒருவனுக்குத் தெளிக்கப்பட்டிருந்தால், அவன் ஒருபோதும் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இயேசு கட்டளையிட்டபடி அவன் திருமுழுக்குப் பெறத்தேவை (மாற்கு 16 : 15, 16).

2. அதைத் தொடர்ந்து, பெரியவர்கள் தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் சுவிசேஷத்தின் படியாகத் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை, தெளித்தல் திருமுழுக்கு அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஏனெனில், தண்ணீரில் அடக்கம் செய்யப்படுவதுதான் திருமுழுக்கு என வேதாகமம் கற்பிக்கிறது. தெளித்தலை திருமுழுக்கு என நியாயப்படுத்த எந்த ஒரு வழியும் கிடையாது. ஒரு

அகராதி புத்தகத்திலே, திருமுழுக்கு என்னும் வார்த்தைக்கு தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்று அர்த்தம் கூறப்பட்டிருந்தாலும்கூட, இன்று நடைமுறையில் எல்லாராலும் பயன்படுத்தப்படும் வார்த்தையை அதின் ஆசிரியர் கையாண்டுள்ளார் என்பதை நீங்கள் உணரவேண்டும். அவர் வேதாகம விளக்கம் தர முயற்சிப்பதே கிடையாது. சகல வல்லமையும் அதிகாரமும் எனக்கே உரியன என இயேசு கூறினார் (மத்தேயு 28 : 18-20). தெளித்தலையும், ஊற்றுதலையும் அவர் அனுமதிக்கவில்லை, அதைத் திருமுழுக்கு என ஏற்றுக்கொள்ளும் பல மக்களும் கர்த்தரைப் பின்பற்றுவதற்குப் பதிலாக மனிதனைப் பின்பற்றுவதைத் தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே, ஒருவர் தெளிக்கப்பட்டிருந்தால், அவர் திருமுழுக்குப் பெற்றிருக்கவில்லை என்றுதான் பொருள். அதற்கு மீண்டும் திருமுழுக்குப் பெறவேண்டும் என்று அர்த்தமல்ல, ஆனால் சுவிசேஷத்தின்படியாக திருமுழுக்குப் பெறவேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

3. ஏதாவது ஒரு நாமகரண சபையில் அங்கத்தினராவதற்காக தண்ணீரில் முழுகியிருப்பவர்களும், சுவிசேஷத்தின் படியான திருமுழுக்கைப் பெறவில்லை. ஒரு திருமுழுக்கு என்பது தண்ணீரில் முழுகுவதுதான். ஆனால் அதுமட்டுமே எல்லாம் அல்ல. அது சரியான காரணத்திற்காகவும் இருக்க வேண்டும். அது பிதா, குமரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே செய்யப்பட்ட வேண்டும் (மத்தேயு 28 : 19, 20). வேதாகமம் கற்பிக்கிற மாதிரி ஒருவர் திருமுழுக்குப் பெற்றிருந்தால், மனிதன் ஏற்படுத்திய சபையில் அவர் சேரமாட்டார். ஆனால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் முழுக்கப்படுவார். கிறிஸ்துவின் அதிகாரத்தின்படி

திருமுழுக்குப் பெறப்பட்டிருப்பதால், கர்த்தரின் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார். ஒருவர் தண்ணீரில் முழுக்கப்பட்டிருந்தும், நாமகரண சபையில் அங்கம் வகித்தால், பின் அவர் இன்னும் திருமுழுக்குப் பெறத் தேவையுள்ளவராக இருக்கிறார். ஆனால் இப்போது சரியான காரணத்திற்காக பெறவேண்டியவராக இருக்கிறார். அவ்வாறு செய்தால் மட்டுமே, ஒரே உண்மையான திருமுழுக்கைப் பெற்றவராக இருப்பார்.

ஆகவே திருமுழுக்கு அவசியம். அது சரியாக செய்யப்பட வேண்டியது மிக அவசியம். இல்லையெனில், அது திருமுழுக்கு அல்ல. தாங்கள் திருமுழுக்குப் பெற்றிருப்பதாகப் பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்; ஆனால் உண்மையில் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆனால் தெளித்தல் திருமுழுக்கு அல்ல என்று அவர்கள் அறிந்தபோது அல்லது உண்மையான திருமுழுக்கு ஒருவரை நாமகரண சபையில் சேர்க்காது என்பதை உணரும்போது, பின்னர் வேதாகமத்தின் ஒரு திருமுழுக்கிற்கு அவர்கள் பணிந்தனர். அப்பொழுது மட்டுமே அவர்கள் திருமுழுக்குப் பெற்றிருந்தனர் என்று சொல்லமுடியும். இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை அப்போஸ்தலருடைய நடபடி 19ம் அதிகாரத்தில் காணலாம்.

நீங்கள் சுவிசேஷத்தின்படி திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? இல்லையென்றால், “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு .... ” (அப். 22 : 16).

# 25. விசுவாசத்தினால் இரட்சிப்பு

இரட்சிப்பு விசுவாசத்தினால் உண்டு என்று வேதாகமம் தெளிவாகக் காண்பிக்கிறது. அதாவது, விசுவாசத்தினால் ஒரு மனிதன் இரட்சிக்கப்படுகிறான். வேறுவிதமாகச் சொன்னால், விசுவாசத்தால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். "ஆதலால், மனிதன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்" என ரோமர் 3 : 28ல் பவுல் கூறுகிறார். இங்கு நியாயப்பிரமாணம் எனக் குறிக்கப்படுவது மோசேயின் சட்டமாகும். தொடர்ந்து அவர் கூறும்போது, "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்கிறார் (ரோமர் 5 : 1). இவைபோன்ற பிற பல வசனங்களை நாம் கூற முடியும். எனவே, விசுவாசத்தினால் இரட்சிப்பு உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.

விசுவாசத்தால் இரட்சிப்புண்டு என்பதை நாம் மறுக்க இயலாத அதே நேரத்தில், விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உண்டு என்றும் நாம் கற்பிக்க இயலாது. மத உலகில் பல மக்கள், விசுவாசத்தினால் இரட்சிப்பு பற்றி குறிப்பிடும் வசனங்களின் இடையில் "மட்டும்" என்ற சிறிய வார்த்தைப் படித்துவிட்டு, ஒருவர் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்படுவதைப் போன்ற தோற்றத்தை உருவாக்குகின்றனர். இது உண்மையல்ல. இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரமல்ல, யாக்கோபு இதை ஆதரித்து இப்படி கூறுகிறார் : "ஆதலால் மனிதன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான் என்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக்கோபு 2 : 24)

அப்படியானால், விசுவாசத்தால் இரட்சிப்பு உண்டு என சுவிசேஷம் கூறுவதின் பொருள் என்ன? குறிப்பான காரியம் என்னவென்றால், இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என ஏற்றுக்கொள்ளுவதற்கும் மிக அதிகக் காரியங்கள் விசுவாசத்தில் அடங்கியுள்ளன. தேவனுடைய வார்த்தையின்படி நடப்பது, கர்த்தரின் சித்தத்தின்படி செய்வது, அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவது, கீழ்ப்படிதலோடு அவருக்கு பணியாற்றுவது ஆகிய காரியங்களை விசுவாசம் உள்ளடக்கியுள்ளது. இது விசுவாசத்திலிருந்து ஒன்றையும் அகற்றிப்போடுவதில்லை; தேவனுடைய கிருபையையும் எடுத்துப்போடுவதில்லை. மாறாக, தேவன் நமக்கு அளிக்கும் இரட்சிப்பை நாம் விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

***இது செயல்படும் விதத்தை நாம் பார்ப்போம் :*** உதாரணமாக, யோவான் 3 : 16ம் வசனத்தில், கிறிஸ்து கூறினார் : "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". இதை மேற்கோள் காட்டிய உடனே, "கர்த்தரில் யாரெல்லாம் விசுவாசம் உள்ளவராக இருக்கிறார்களோ அவர்கள் எல்லாரும் கெட்டுப்போகாதபடி நித்திய ஜீவனை அடைவார்கள் என கர்த்தர் கூறினார்" என்று சொல்ல ஒருவர் தயாராக இருக்கிறார். அது சரிதான்; ஆனால் "யாரெல்லாம் விசுவாசம் மட்டும் வைக்கிறார்களோ" என்று அவர் கூறவில்லை. பதிலுக்கு நாம் கேட்க வேண்டும்: "எதை விசுவாசிப்பது?" "யாரெல்லாம் இயேசுவில் விசுவாசம் வைக்கிறார்களோ" என்பது தெளிவு. இப்போது கேள்வி : "நீங்கள் இயேசுவை விசுவாசிக்கிறீர்களா?" ஆம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால், அவர் சொல்லுவதை நீங்கள் செய்யும் அளவிற்கு அவரில் விசுவாசம் வைத்துள்ளீர்களா?

அப்படியானால், நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிவீர்கள். அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படியும் அளவிற்கு போதுமான்படி நீங்கள் விசுவாசிக்கவிட்டால், உங்கள் விசுவாசம் செத்தது.

யோவான் 3:36ம் வசனத்தை இப்போது கவனியுங்கள் : "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்". முதலாவதாக, "விசுவாசிப்பவன் மட்டும்" என்ற சொற்றொடரை அவர் பயன்படுத்தவில்லை என்பதை கவனியுங்கள். பின் வசனத்தின் இறுதிப்பகுதியில், விசுவாசியாதவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவர் சொல்லுவதையும் கவனியுங்கள். வேதாகமத்தின் திருத்திய பதிப்பில், "குமாரனுக்கு எவன் கீழ்ப்படிகிறதில்லையோ அவன் ...." ஜீவனைக் காணமாட்டான் என்று சொல்லப்படுகிறது. வேறு வார்த்தையில் கூறினால், குமாரனை விசுவாசிக்கிறவன் அல்லது அவருக்குக் கீழ்ப்படிகிறவன், நித்திய ஜீவனை உடையவனாக இருக்கிறான். ஆனால் யார் விசுவாசியாமல் அல்லது கீழ்ப்படியாமல் இருக்கிறார்களோ, தங்கள் ஜீவனைக் காணமாட்டார்கள்.

ரோமர்களைப் பார்த்து பவுல் கூறும்போது, ".... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று சொல்லுகிறார் (ரோமர் 10:9) அடுத்த வசனத்திலேயே அவர் கூறுகிறார், விசுவாசமும், அறிக்கையிடுதலும் இரட்சிப்படையத் தேவை அல்லது அத்திசையில் அவை செல்லுகின்றனவே தவிர, ஏற்கனவே ஒருவரிடம் அது இல்லை. இப்படியாக ஒருவர் விசுவாசித்து, அறிக்கை செய்தால் கர்த்தர்

கட்டளையிட்டிருப்பதை அவர் செய்யவில்லையா? அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:26-39 வசனங்களில் ஒரு உதாரணத்தை நாம் பார்ப்போம். இங்கு பிலிப்பு, மந்திரிக்கு கிறிஸ்துவைப் போதித்தார்; அவர்கள் வண்டியில் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கையில் தண்ணீருள்ள ஒரு இடத்தின் அருகில் வந்தனர். ".... அப்பொழுது மந்திரி, இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது அவன் : இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி : இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் : பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்". அப்போது அந்த மந்திரி என்ன செய்தான்? அவன் கிறிஸ்துவை அறிக்கை செய்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை வெளிப்படுத்தி அவனுடைய முழு இருதயத்தோடும் அவரை விசுவாசித்தான். எனவே, அவன் இரட்சிக்கப்பட்டான்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:31ல், ".... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று சிறைச்சாலைக்காரனுக்கு சொல்லப்பட்டது. பலர் இந்த இடத்தில் நிறுத்திக் கொள்கின்றனர். ஆனால் அது தவறு. சிறைச்சாலைக்காரன் யார்? அவன் ஒரு அவிசுவாசி. எனவே முதலாவதாக அவன் விசுவாசிக்க வேண்டியவனாக இருந்தான், அவ்வாறு அவன் விசுவாசிக்கத்தக்கதாக, தேவனுடைய வார்த்தையை பவுலும் சீலாவும் அவனுக்கும், அவனது வீட்டாருக்கும் போதித்தனர். விசுவாசம் ஏற்பட்ட பிறகு (ரோமர் 10:17) மனந்திரும்புதலை வெளிப்படுத்தியவனாக, அவர்களுடைய காயங்களைக் கழுவி, அவனும் அவனுடைய வீட்டாரும் உடனே திருமுழுக்கு பெற்றனர்.

குறிப்பிட்ட கட்டளைகள் சம்பந்தமான எல்லா தொடர்பு வசனங்களையும்கூட நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16) என கிறிஸ்து கூறினார். விசுவாசிகளின் கூட்டம் ஒன்றில் பேதுரு கூறினார் : "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) இப்போது, விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்படக்கூடும் என்று ஒரு முறையும், வேறொரு முறை அவர்கள் பிற கட்டளைகளுக்கும் கீழ்படிய வேண்டியதிருக்கிறது என்று மக்களிடம் கர்த்தர் சொல்லுகிறாரா? நிச்சயமாக இல்லை. காரியம் என்னவென்றால் ஒருவன் கர்த்தரை விசுவாசித்தால் அல்லது அவர் பேரில் உண்மையான நம்பிக்கை வைத்திருந்தால் கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய அவன் தூண்டப்படுகிறான். அதாவது அவனுடைய விசுவாசத்தை நிரூபிக்க அல்லது அதைக்காட்ட அல்லது மெய்பிக்கவோ செய்வான். எப்படி தேவனுடைய மக்கள் சரித்திரத்தின்படி காலாகாலமாக தங்கள் விசுவாசத்தைக் காட்டினார்கள் என்பதை அறிய எபிரெயர் 11ம் அதிகாரத்தைப் படியுங்கள், அங்கே காண்பதற்குக் குறைந்த எதையும் இன்று தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இந்த சிறிய கட்டுரையின் இறுதியில், உங்களிடம் ஒரு கேள்வி உங்களுக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறது? "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமல் போகிறதென்ன?" என்று கர்த்தர் இக்கேள்வியை ஒருமுறை கேட்டார் என்பது நினைவிருக்கட்டும்! (லூக்கா 6:46) விசுவாசம் மாத்திரம்

போதும் என்ற கொள்கையை ஆதரிப்பவராக நீங்கள் இருந்தால், நிச்சயமாக உங்களிடம் கர்த்தர் அதே கேள்வியைக் கேட்கக்கூடும். சுவிசேஷத்தின் சில வசனங்களை தனியாகப் பிரித்து தவறாகப் படித்து, சுவிசேஷத்திற்கு விரோதமான ஒரு கொள்கையை ஆதரிக்க முயற்சிக்காதீர்கள். கர்த்தரில் விசுவாசமாக இருங்கள் : அவர் சொல்லுவதைச் செய்யுங்கள் : அதன்பின் நீங்கள் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுவீர்கள் ஆனால் இவ்வாறு செய்தபின்பே இரட்சிப்பு.

# 26. புதிய ஏற்பாட்டு ஒற்றுமை

இந்த உலகம் மதங்களால் பிரிக்கப்பட்டிருக்கிறது கத்தோலிக்க மதம், புராட்டஸ்டண்ட் மதம், நாமகரணக் கூட்டங்கள், குழுக்கள் என பல பிரிவுகள் உள்ளன. இவை அனைத்தும் ஒரே கர்த்தருக்கு ஊழியம் செய்ய முயற்சிப்பதாகத்தான் கூறுகின்றன. அதேவேளையில், ஏதோ தவறு நேர்ந்துள்ளது என இவை அனைத்தும் ஏற்றுக்கொள்கின்றன. அதின் விளைவாக, ஒற்றுமை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒற்றுமையைக் கட்ட ஒரு பொதுத்திட்டத்தை வகுக்க, மதக்குழுக்களில் தலைவர்கள் மாநாடுகளையும், பொதுக்கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்துகின்றனர். கடைசியாக, ஒற்றுமையின் தேவையைக் கருதி விழிப்புற்ற இம்மக்களைப் பற்றி அறிவது வரவேற்கக்கூடியதாக இருப்பினும், இந்த குழுக்கள் அனைத்தும் தங்களுடைய மத ஏடுகள், சட்டங்கள், விரோதமான நம்பிக்கைகள், பெயர்கள், உபதேசங்கள், பழக்கங்கள் ஆகிய எல்லாவற்றையும் விட்டுவிட்டு, வேதாகமம் போதிப்பதற்கு ஏற்றபடி திரும்பினால் ஒழிய ஒற்றுமை ஒருபோதும் ஏற்படாது. ஒருமுறை இவ்வாறு நடத்திவிட்டால், உண்மையான ஒற்றுமை ஏற்பட்டுவிடும்.

குழப்பங்களையும், பிரிவினைகளையும் தேவன் வெறுக்கிறார். சுவிசேஷத்தில் இது தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. உதாரணமாக கொரிந்து பட்டணத்தில் கர்த்தருடைய சபையின் ஒரு பிராந்திய சபையில் சில பிரிவினைகள் உண்டாயின. பவுல் அதை உடனடியாகக் கண்டித்தார். வசனத்தைப் பாருங்கள். "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும் ஏக யோசனையும்

உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டார்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை; இதற்காகத் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" (1 கொரிந்தியர் 1:10-17)

ஒற்றுமைக்கான பவுலின் வேண்டுகோளை மேற்சொன்னவற்றில் நீங்கள் கவனிக்க முடியும். பிரிவினையைப் பற்றி குறிப்பிடுகையில் அவர்களுடைய அபத்தமான நிலை பற்றி மூன்று கேள்விகளைக் கேட்டார். முதலாவது. "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" என்று கேட்டார். அவர் பிரிந்திருக்கவில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். இரண்டாவதாக, "பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்பதை அவர்கள் அறிவார்கள். இறுதியாக, "பவுலின் நாமத்திலேயா நீங்கள்

திருமுழுக்குப் பெற்றீர்கள்?" என்று கேட்டார். இல்லை. எந்த மனிதனுடைய நாமத்தினாலேயும் அவர்கள் திருமுழுக்குப் பெறவில்லை; ஆனால் கிறிஸ்துவின் நாமத்தினாலே மட்டுமேதான் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். எனவே அவர்கள் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுவே முடிவு எவ்வளவு எளிது?

கொரிந்துவில் இந்தப் பிரச்சனை இருந்ததால், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், பவுலுடைய சொந்தப் பெயராலே திருமுழுக்குக் கொடுத்திருந்தார் என்று அவர்கள் கூறாதபடிக்கு, ஒரு சிலருக்கு மட்டுமே தாம் திருமுழுக்குக் கொடுத்திருக்கிறபடியால் அவர் மகிழ்ச்சியடைந்தார் என்பதை பவுல் தொடர்ந்து காட்டுகிறார். இதை மனதில் வைத்துக்கொண்டுதான், தாம் திருமுழுக்குக் கொடுக்க வரவில்லை என்றும், நற்செய்தியைப் போதிக்கவே வந்ததாகவும் பவுல் சொன்னார். வேறுவிதமாகக் கூறினால் நற்செய்தியைப் போதிக்கும் பணிக்காகவே அவர் வந்திருந்தார். அதின் விளைவாக, சிலர் அவருடைய கரங்களாலும், ஆனால் அநேக மக்கள் பிறராலும் திருமுழுக்கு பெற்றனர். திருமுழுக்குக்கு விரோதமாக பவுல் போதித்துக் கொண்டிருக்கவில்லை. அப்படி இருந்தால் அவர் ஒருவருக்கும் திருமுழுக்குக் கொடுத்திருக்க முடியாது; ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு சிலருக்கு மட்டுமே அவர் திருமுழுக்குக் கொடுத்திருந்ததால் மகிழ்ச்சியாக இருந்தார்.

ரோமர் 16:17, 18 வசனங்களில் பவுல், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே

ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்" என்று சொன்னார். பிரிவினைகளை உண்டு பண்ணுகிறவர்கள் குறிக்கப்பட்டு அவர்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று அந்த அப்போஸ்தலர் சொல்லுகிறார் ஏன்? அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல், அவர்களுடைய இனிய, ஏமாற்றுப் பேச்சுகளால் எளிய மக்களின் இருதயங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தனர். எனவே அவர்களை ஆதரிக்கவோ, புகழவோ அல்லது சகித்துக் கொண்டிருக்கவோ வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. இந்த செய்தியை தெரிவிக்கும் பிறவசனங்களும் உள்ளன. வேதாகமத்தைக் கற்றுக் கொடுப்பதாக பறைசாற்றும் அனைவரும் அதில் உள்ளதை உள்ளபடியே கற்றுக் கொடுப்பதில்லை என்பதையும், நம்மை தேவனுடைய மக்கள் என உரிமை கொண்டாடும் எல்லாருமே உண்மையில் தேவனுடைய பிள்ளைகளும் அல்ல என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர்களில் பலர் ஏமாற்றப்படுகின்றனர். கவனமாக கற்கத் தவறியதால் பிறரையும் ஏமாற்றுகின்றனர்.

கிறிஸ்து ஒற்றுமைக்காக ஜெபித்தார்; அதாவது ஒன்றாயிருக்க முற்றிலுமாகவும் முழுமையாகவும் இருக்க ஜெபித்தார். அவர் சொல்லுவதைக் கேளுங்கள் : "நான் இவர்களுக்காக வேண்டி கொள்கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும். பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நாம் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20,21) இங்கே, அப்போஸ்தலர்களுக்காகவும் அவர்களுடைய

போதகத்தின் மூலமாக அவரை விசுவாசிக்க வரும் சகலருக்காவும் கிறிஸ்து ஜெபித்தார். பின் அவர்கள் அனைவரைப் பற்றியும் கூறுகிறார் : "அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கவும் .... "எவ்விதமாக? அவரும் அவருடைய பிதாவும் இருப்பதைப்போல அதுவே உண்மையான ஒற்றுமை.

பவுல் எழுதியவற்றிற்குத் திரும்பிச் சென்றால், ஒற்றுமைக்கான ஒரு அஸ்திபாரம் போடப்பட்டிருப்பதைக் காணலாம். அவர் கூறுகிறார் : "ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி என்னவெனில் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபேசியர் 4:1-6) ஒவ்வொன்றிலும் எத்தனை உள்ளன? ஒன்றே ஒன்று; ஒன்று என்றால் ஒன்றேதான். நிறைய சபைகள் இருக்ககிறதென்றால், அவை அனைத்தையும் இணைத்து ஒரே சபையை உண்டாக்கி, அது தேவனையும் கிறிஸ்துவையும் போதிப்பதாகக் கூறினால் எப்படி இருக்கும்? அபத்தமாக இருக்கும்.

நண்பர்களே! வேதாகமம் என்ற ஒரே ஒரு புத்தகத்தை மட்டுமே தேவன் நமக்குத் தந்துள்ளார். நாம் அனைவரும் அதைப் படித்து விசுவாசித்து, அதின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்தால், நாம் அனைவரும் ஒரே உபதேசத்துக்குக் கீழ்ப்படிவோம், அதே சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவோம்.

அதே பெயரைத் தரித்துக்கொள்ளுவோம். ஒரே மாதிரியாக ஆராதிப்போம், ஒரே காரியத்தைப் போதிப்போம். வேதாகமம் நம்மைப் பிரிக்காது, மாறாக நம்மை ஒற்றுமைப்படுத்தும். நாம் பிரிந்திருக்க கிறிஸ்து ஜெபிக்கவில்லை அவரில் நாம் அனைவரும் ஒன்றாயிருக்க ஜெபித்தார். தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் நாம் ஒற்றுமையாக இருக்கமுடியும்; அது வரை முடியாது.

## 27. பாவங்கள் மன்னிக்கப்படுதல்

மனிதன் பாவியாக இருக்கிறான் (ரோமர் 3:23) இந்நிலையில், அவன் வீழ்ந்து போய், செயலற்றவனாக இருக்கிறான். அவனுக்குத் தேவனும் இல்லை, நம்பிக்கையும் இல்லை, இந்த அவல நிலையில் அவன் மரணமடைந்தால் நித்தியத்திற்கும் அவன் வீழ்ந்து போய்விடுவான். இது ஒரு பயங்கரமான எண்ணமாகக் காணப்பட்டாலும் அதுவே தான் உண்மையாக இருக்கிறது.

மனிதன் பாவியாக இருப்பதாலும், அவனுடைய பாவங்கள் மிகவும் மன உறுத்தலை அளிப்பதாலும், அவைகளுக்குப் பரிகாரம் தேடவோ, அல்லது மன்னிப்பு அடையவோ அவன் வழி எதுவும் உண்டோ என்று தொடர்ந்து தேடிக் கொண்டிருக்கிறான். இது ஒரு உலகளாவிய பிரச்சனை. ஆனால் பல மக்களும் வித்தியாசமான பல வழிகளில் இதைத் தீர்க்க முயலுகின்றனர். சிலர் மிருக பலிகளை செலுத்துகின்றனர்; வேறு சிலர் தங்கள் சரீரங்களை வருந்திக் கொண்டு தங்கள் பாவங்களுக்குப் பரிகாரத்தைத் தேடுகின்றனர். மற்றும் சிலர் நற்காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றனர்; அல்லது தங்கள் ஆத்ம சமாதானத்திற்காக, ஆசிரமங்களை ஒதுக்குப் புறங்களில் அமைத்துக் கொண்டு அவற்றில் தனித்து வாழ்ந்து வருகின்றனர். கிறிஸ்துவில் விசுவாசமுள்ள சிலரோ, விசுவாசத்தோடு மட்டும் ஜெபம் செய்து, இன்னும் சில உபதேசங்களைக் கடைபிடித்து தாங்கள் இரட்சிப்படைய நினைக்கின்றனர். ஆனால் தவறின் அடிப்படையில் ஏற்பட்ட இப்படியான எந்த நம்பிக்கைகளும் பழக்கங்களும் மனிதனுடைய பாவங்களைக் கழுவாது.

உலக மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட தமது குமாரனை அர்ப்பணிக்கும் அளவிற்கு, தேவன் நம் மேல் தமது அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார் (யோவான் 3:16, 17 :

ரோமர் 5:8) கிறிஸ்து தாமே நமக்காக மரிக்க விரும்பினார்; மனிதனுக்காக அவர் மரிக்க விரும்பும் போது மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமானால், அவன் எந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறும் உரிமையும் அவருக்கு மட்டுமே என்பது தான் சரியான முடியும். இந்தத் திட்டங்கள் யாவை? சுவிசேஷத்தைக் கவனியுங்கள்.

1. இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை ஒருவன் விசுவாசிக்க வேண்டும். "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோவான் 8:24).

2. அவனுடைய பாவங்கள் அனைத்திற்கும் மனஸ்தாபப்பட வேண்டும், "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக்கா 13:3).

3. கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். "மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத்தேயு 10:32, 33).

4. இறுதியாக, திருமுழுக்கின் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16) "பேதுரு அவர்களை நோக்கி : இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப். 2:38)

இந்தக் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும் போது மட்டுமே நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது மற்றப்படி அல்ல என்று கர்த்தர் தமது வசனத்தில் கூறுகிறார். இவ்வாறாக, அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம், நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். எனவே நமது கடந்த கால பாவங்களை அனைத்தும் நிரந்தரமாக மன்னிக்கப்படுகின்றன.

பாவம் அழிவை உண்டாக்குகிறது. அது ஒருவேளை நார் நாராகக் கிழித்துப்போடும் முடிவற்ற இதய நோவை உண்டாக்கும் இறுதியாக அழிவைக் கொண்டுவரும். ஆனால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவை எடுத்துக் போடப்பட்டு, நிரந்தரமாக அகற்றப்படுவது அதிசயமான ஒரு காரியம் அல்லவா? நமக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார். அவருடைய நாமம் இயேசு. நாம் விசுவாசத்துடன் மட்டும் அவரைப் பார்த்து அவருடைய விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தால், உண்மையிலேயே அவர் உன்னுடைய இரட்சகராகவும் என்னுடைய இரட்சகராகவும் இருப்பார்.

உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக் கின்றனவா? இல்லையென்றால் உன்னை இரட்சிக்கவல்ல இயேசுவினிடத்தில் நீ திரும்பினாலன்றி நீ வீழ்ந்து போகிறாய், நித்தியத்திற்கும் வீழ்ந்து போவாய் அன்பான கீழ்ப்படிதலுடன் நீ அவரைநோக்கிப் பார்த்தால், உன்னை அவர் இரட்சிக்கக் கூடும் ; இரட்சிப்பார்; உன்னை அவருடையவனாக்கிக் கொள்ளுவார். பின்னர், உன் கடந்த கால பாவங்களிலிருந்து விடுதலையும், ஆத்ம சமாதானமும் அடைந்து இயேசுவைப் பின்பற்றி, அவருடைய வாசஸ்தலத்திற்கும் அவருடைய சிறந்த ராஜ்யத்திற்குள்ளும் பிரவேசிப்பாய் கர்த்தர் உன்னை வரவேற்று அழைக்கிறார்; செவி கொடுப்பாயா?

# 28. எந்தச் சட்டம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது?

வேதாகமம் இரு பெரிய புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்பவைகளாகும். ஏற்பாடு என்றால் ஒப்பந்தம் அல்லது சட்டம் என்று பொருள். எனவே, தமது மக்களுக்காக தேவன் ஒரு சட்டத்தை வைத்திருந்தார் என இதிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் பின்னர், அவர் முதல் சட்டத்தை பழையதாக்கி அதாவது இனி ஒரு போதும் நம்மைக் கட்டுப்படுத்தாததாக்கி, ஒரு புதிய சட்டத்தைக் கொடுத்தார். இந்த இரண்டு சட்டங்களும் ஒரே சமயத்தில் அமுலில் இருக்க இயலாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வேதாகமத்தைக் கற்றுக் கொள்ளும்போது, மோசேயின் சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அந்த பழைய சட்டமானது இனி ஒருபோதும் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை என்பதைத் தெளிவாகக் காணலாம். ஏனெனில், அது கொடுக்கப்பட்ட காலத்தில் நாம் வாழக்கூட இல்லை. யாத்திராகமப் புத்தகத்திற்குப் திருப்பினால் அது இஸ்ரவேல் மக்களுக்காகத் தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்டதை நாம் காண்கிறோம் (யாத்திராகமம் 20) இப்போது உபாகமத்திலிருந்து சில வசனங்களைப் படிப்போம்; "மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி : இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள், நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கற்றுக் கைக்கொள்ளக் கடவீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன்

பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" (உபாகமம் 5:1-3) பின்னர் பத்துக்கட்டளைகளைக் கொடுக்கத் தொடங்குகிறார். எனவே, இந்தச் சட்டமானது இஸ்ரவேல் அல்லது யூத மக்களுக்குக் கொடுக்கப்பட்டது; புற ஜாதியாருக்கு அல்ல இப்போது, கேள்வி என்னவென்றால், இந்தச் சட்டம் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்தது? அது இன்றும் நம்மைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்க முடியுமா? நாம் பார்க்கலாம்.

கிறிஸ்துவே மோசேயின் சட்டத்தின் கீழ்தான் வாழ்ந்து, மரித்தார். அதைப்பற்றி அவர்கூறும்போது : "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன், வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 5:17, 18). இப்பொழுது இந்தச் சட்டம் தொடர்ந்து நீடிக்கும்படி கர்த்தர் அங்கீகாரம் அளித்து விட்டதாக இதைச் சிலர் புரிந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவ்வாறு அல்ல. ஒரு ஒப்பந்தம் அல்லது சட்டத்தைக் கையாள இருவழிகள் உள்ளன. அது அழிக்கப்படலாம் அல்லது அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் அல்லது சட்டங்கள் மதிக்கப்படலாம் அல்லது தொடர்ந்து கடைபிடிக்கப்படலாம். அதை அழிக்க வந்தேன் என்று நினைக்க வேண்டாம்; ஆனால், மாறாக அதை நிறைவேற்றவே வந்தேன் என்று கிறிஸ்து கூறினார். மேலுமாக, எல்லாம் நிறைவேறும் வரை அதில் ஒரு பகுதியும் எடுத்துப் போடப்படமாட்டாது என அவர் வலியுறுத்தினார். "வரை" என்ற அந்த சிறிய வார்த்தை. அதற்கு ஒரு கால வரம்பை நிர்ணயித்தது. எது நிறைவேயிருக்கும் வரை. அந்தச் சட்டம் தொடரும்? எல்லாம் நிறைவேறியிருக்கும் வரை.

இது கர்த்தரின் இரண்டாவது வருகையின் காலத்தில் அல்லது எல்லா பொருட்களும் அழிந்து போனபின் இருக்க முடியாது. ஏனெனில் அச்சமயம் எல்லமே அழிந்து போயிருக்கும் என்பது தெளிவு என்ற போதிலும் உடனடியாக எதிர்காலத்திற்குள் அச்சட்டத்தின் நிறைவேறுதலைப்பற்றி அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அது எப்போது நடந்தது?

கர்த்தர் சிலுவையில் மரிப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு அவர் சொன்னார் : "முடிந்தது" (யோவான் 19:30) சரியாக அவர் மரணம் அடைந்த அதே நேரத்தில் ஆலயத்தின் திரைச்சீலை மேலேயிருந்து கீழே வரை இரண்டாக கிழிந்தது என பதிவேடு கூறுகிறது (மத்தேயு 27:51) இப்படியாக அந்தச் சட்டம் முடிந்து போயிற்று. திரைச்சீலை கிழிந்து அதைக்குறிப்பாக உணர்த்திற்று. "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குறித்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து" என பவுல் எழுதினார் (கொலோசெயர் 2:14) எனவே, நியாயப்பிரமாணமாகிய அந்தச் சட்டத்தை கிறிஸ்து சிலுவையில் ஆணியால் அடித்தார்.

யோவான் எழுதினார் : "எப்படியெனில் நியாயப்பிரமானம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவான் 1:17) இரண்டிலும் காணப்படும் வித்தியாசத்தை தயவு செய்து கவனியுங்கள். மோசே, எலியா, கிறிஸ்து ஆகியோரின் முன்னிலையில் தேவன் தாமே கூறினார் : "... இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள்..." (மத்தேயு 17:5) பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார் (எபிரெயர் 1:12)

எபிரெய எழுத்தர் அதைத் தெளிவாக்குகிறார். “ஏனென்றால் எங்கே மரண சாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும் : அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே” (எபிரெயர் 9 : 16, 17) மீண்டும் அவர் சொல்லுகிறார் : “.... இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்” (எபிரெயர் 10:9, 10) முதலாவது உள்ளது எது? பழைய ஏற்பாட்டுச் சட்டம் இரண்டாவது எது? புதிய ஏற்பாடு. எனவே, பழைய சட்டத்தை அகற்றிவிட்டு, புதிய சட்டத்தை அதற்குப் பதிலாக வைத்தார்.

நியாயப்பிரமாணம் இப்போது நம்மைக் கட்டுப்படுத்தவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல், ஒருவர் எப்படி 2 கொரிந்தியர் 3ம் அதிகாரத்தைப் படிக்க இயலும்? நியாயப்பிரமாணம் மரணத்துக்கேற்ற ஊழியம் என்றும், புதிய சட்டமோ (கிறிஸ்துவின் சட்டம்) ஜீவனுக்கேற்ற ஊழியம் என்றும் பவுல் அறிவிக்கிறார். கிறிஸ்துவை விட்டு விலகி நியாயப்பிரமாணத்திற்குத் திருப்புவது எவ்வளவு முட்டாள்தனமானது என்று காட்ட கலாத்தியர் புத்தகத்தின் மூலமாக பவுல் முயற்சித்தார். ஆனால் “நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்” (கலா 5:4) என்று கூறி முடிக்கிறார். கலாத்தியர் 4:21-31 வசனங்களையும் படியுங்கள்.

எனவே, நாம் இனி ஒருபோதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லை ஆனால், நாம் கிறிஸ்துவின் சட்டம் அல்லது புதிய ஏற்பாட்டின் கீழ் இருக்கிறோம். ஆகவே தான்

மனந்திரும்புதலுக்கு ஒரு உதாரணமாக சிலுவையில் அறையப்பட்ட கள்ளனை நாம் காட்ட முடியாது அல்லது தசம பாகம், இசைக்கருவிகளுடன் கூடிய பாடல்கள், சனிக்கிழமை ஓய்வு நாள் ஆசரிப்பு, இன்னும் பல காரியங்களுக்கு நாம் திரும்பிச் செல்ல முடியாது மோசேயின் நியாயப்பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்தாது ஆனால் கொலை, விபசாரம் போன்றவற்றைச் செய்ய நமக்கு அனுமதி கிடைத்து விட்டது என்று பொருள் அல்ல. ஏனென்றால் இந்தப் பாவங்கள் அனைத்தையும் புதிய ஏற்பாடும் மாம்சப்பூர்வமாகவும், மனப்பூர்வமாகவும் கண்டிக்கிறது.

பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை. ஆனால் சட்டமாக அது நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. மாறாக நாம் கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே நமது விசுவாசத்தின் காரணகர்த்தாவாகவும், நிறைவானவராகவும், கிறிஸ்துவைப் பார்க்கிறோம். கிறிஸ்து நமக்காக மரிக்கவும், அதன் விளைவாக நாம் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறவும் அவர் வந்திருக்கும் போது, ஏன் யாரும் நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பிக் போக விரும்ப வேண்டும் வார்த்தையை சரியாகப் பகுத்துக் கற்றுக் கொள்ளும்போது, நீங்கள் பவுலின் புத்திமதியை ஏற்றுக் கொள்ளுங்கள் (2 தீமோ 2:15). அவ்வாறு நீங்கள் செய்யும் போது, பின் சட்டங்களுக்குள் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும் எந்தச்சட்டம் இன்று நம்மைக் கட்டுப்படுத்துகிறது என்பதை அறியவும் உங்களுக்கு எவ்விதப் பிரச்சனையும் இருக்காது.

# 29. பரிசுத்த ஆவியானவரின் அளவுகள்

அற்புத அடையாளங்கள் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என பல மக்கள் நம்புகின்றனர். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு எப்படித் தேவைப்பட்டதோ, அதேபோல இன்றைய தேவனுடைய பிள்ளைகளுக்கும் அது தேவையாக உள்ளது என்று இம்மக்கள்தான் உபதேசிக்கின்றனர். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் அளவுகளைப் பற்றி பல மக்களுக்கு ஞானமில்லாத காரணமே இந்த குழப்பங்களின் விளைவாகும்.

## *1. கிறிஸ்து ஆவியை அளவில்லாமல் பெற்றார்.*

"தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார் : தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" (யோவான் 3:34) அதின் விளைவாக சகல காரியங்களையும் செய்யும் வல்லமையை அவர் பெற்றார். அவர் முடவர்களை நடக்கச் செய்தார், விழி இழந்தோருக்கு பார்வை அளித்தார், ஊமைகளைப் பேசச் செய்தார், செவிடர்களைக் கேட்கச் செய்தார், திரளான மக்கள் கூட்டத்திற்கு உணவளித்தார், தண்ணீர் மேலே நடந்தார். சமுத்திரத்தை அடக்கினார், மற்றும் மரித்தோரை உயிரோடு எழுப்பினார். அதற்கும் மேலாக, மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தார். ஆனால் இப்படி ஏன் செய்தார்? வார்த்தையை உறுதிப்படுத்தி, விசுவாசிகளை உண்டாக்க (யோவான் 20:30, 31)

## *2. பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு*

புதிய ஏற்பாடு முழுவதிலுமாக இரண்டு நிகழ்ச்சிகளில் மட்டுமே இது நமக்குக் காட்டப்படுகிறது. முதலாவது அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர் (அப்போஸ்தலர் 2) இதற்கு முன்பாக, கிறிஸ்து

தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவதாகவும், சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை அவர் வழிநடத்துவார் என்றும் வாக்களித்திருந்தார் (யோவான் 16:13) கிறிஸ்து பரத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அப்போஸ்தலர்களுக்கு இன்னும் உதவி தேவைப்பட்டதால், அவர்களை வழிநடத்த பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அவர் சொன்னார். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்ற பின்னர் அந்நிய மொழிகளில் பேசவும், முடவர்களை சுகமாக்கவும், நோயாளிகளைக் குணப்படுத்தவும், மரித்தோரை எழுப்பவும், தங்கள் கைகளை பிறர்மேல் வைத்து தம்மக்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமைகளைப் பெற்றுக் கொள்ளவும் செய்தனர்.

இரண்டாவதாக, யூதர்களைப் போலவே புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர் என்பதைக் காட்ட கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர் (அப்போஸ்தலர் 10 & 11) அவர்கள் அதைப் பெற்று, அந்நிய மொழிகளில் பேசி அதை நிரூபித்த பின்னர் “நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா?” என்று தெரிந்துகொள்ள பேதுரு விரும்பினார் (அப்போஸ்தலர் 10:47). அந்த நிகழ்ச்சியை அவர் விளக்கும்போது. “நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்” (அப்போஸ்தலர் 11:15) என்று அவர் சொன்னார். எல்லா விசுவாசிகளும் பெற்றது போல, கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்று பேதுரு கூறவில்லை: மாறாக அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பெற்றது போல அவனும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர் என்று அவர் கூறுவதைக் கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் ஆதியில் பெற்றிருந்ததைப் போல அவர்கள் பெற்றிருந்தனர் என்று அவர் சொல்லுகிறார்.

### *3. கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவி*

அப்போஸ்தலர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்த படியாலும், இன்னும் பல காரியங்கள் செய்யப்பட வேண்டியதிருந்தாலும் அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பலரின் மேல் கைகளை வைத்து, அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளச் செய்தனர். முதலாவதாக ஏழு பேர்களின்மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தனர் (அப்போஸ்தலர் 6:6). பிலிப்பு போன்ற மனிதர்கள் சமாரியாவுக்குச் சென்று அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமையை இது அளித்தது. அதின் விளைவாக, பல மக்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். என்ற போதிலும், பிலிப்பு பெற்ற வல்லமையை பிறருக்குக் கொடுக்க அவருக்கு இயலவில்லை. பின்னர் பேதுரு, யோவான் ஆகிய அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்து அழைக்கப்பட்டு, அவர்களுடைய கைகளை மக்கள் மேல் வைத்து, அற்புதங்கள் செய்யும் வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்கள் (அப்போஸ்தலர்கள் 8:14-17).

### *4. சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியானவர்*

பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றவர்களையும், கைகளை வைத்து பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களையும் தவிர, பிற அனைவரும் சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதை இது உறுதிப்படுத்தியதே தவிர, அற்புதங்கள் செய்யும் வல்லமையைத் தரவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மக்களிடம் கூறினார் : "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் 2:38)

நினைவிருக்கட்டும், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களிக்கப்பட்டிருந்தது. கர்த்தரால் நடத்தப்பட்டது. எல்லா சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்த அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வசனத்தை உறுதிப்படுத்தவும், புதிய ஏற்பாட்டை எழுதுவதில் அவர்களை இயக்கவும் கொடுக்கப்பட்டது. மேலுமாக கொர்நேலியவும் அவன் வீட்டாருடைய காரியத்தில் தண்ணீர் திருமுழுக்குப் பெறும் முன்பாக அதைப் பெற்றிருந்தனர்.

பின்னர், கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களால் மட்டுமே தரப்பட்டது. எனவே அப்போஸ்தலர்களும், அவர்கள் யாரின் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்த போது, பரிசுத்த ஆவியின் இந்த அற்புதங்கள் செய்யும் அளவுகள் ஒழிந்து போயின. அவ்வேளையில், அவைகளுக்கு இனி எந்த அவசியமும் இல்லாது போயிற்று. ஏனெனில், புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டிருந்தது; அது மனிதனை எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப் போதுமானதாக இருந்தது (யாக்கோபு 1:25; 2 தீமோத்தேயு 3:16, 17)

ஆனால், இன்று தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாகவும், அற்புதங்கள் செய்யும் வல்லமை தங்களிடம் இருப்பதாகவும் உரிமை கோருபவர்களைப் பற்றிய காரியம் என்ன? அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர், தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர், அவர்கள் போலிகள், தேவனுடைய விருப்பத்தின்படி கூட அவர்கள் நடப்பதில்லை. அப்படியிருக்கும்போது, ஆவி அவர்களை எவ்வாறு வழி நடத்தும்? வேதாகமத்தில் காணப்படாத சபைக்குள் அவர்களை சேர்க்கவும், மனிதன் உண்டாக்கிய பெயர்களைத் தரித்துக் கொள்ளவும் ஆவியானவர் வழி நடத்துவாரா? நிச்சயமாக இல்லை. அவர்கள் உரிமை

கொண்டாடும் வல்லமை அவர்களுக்கு இருக்குமேயானால், பின் இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்த எல்லாக் காரியங்களையும் அவர்கள் செய்யக்கூடும் என்றெல்லாம் பீற்றிக்கொள்ளுவதையும் தவிர வேறு எதையும் அவர்களால் செய்ய இயலாது என்பதே உண்மை.

எனது நண்பரே! அவர்களுடைய கள்ள உபதேசங்களில் ஏமாந்து போகாதீர். மாறாக வேதாகமத்திற்குச் செல்லுங்கள். அதுவே உங்களை வழிநடத்துவதாக இருக்கட்டும்.

# 30. அந்நிய மொழி

நம்மிடையே உள்ள மதவாதிகள் அந்நிய மொழியில் தாங்கள் பேசுவதாக உரிமை கொண்டாடுகின்றனர். தேவனுடைய ஆவியானவர் தங்கள் வழியாகப் பேசுவதாக அவர்கள் இதற்குச் சொந்த விளக்கம் அளிக்கின்றனர். மேலும் தாங்கள் பேசுவது என்ன என்று அவர்களுக்கே தெரியாது என்றும், அவர்கள் பேசுவதைக் கேட்பவர்களுக்கும் அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் எனப்புரியாது என்றும், ஆனால் தேவனுக்கு மட்டுமே தெரியும் என்றும் விளக்கம் அளிக்கின்றனர். வேதாகமம் இப்படியான ஒரு காரியத்தை எங்கும் கற்றுக்கொடுக்கவில்லை. இம்மக்கள் எளிதில் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். அந்நிய மொழியில் அல்ல, வேறு எந்த மொழியிலுமே அவர்கள் பேசிக் கொண்டிருக்கவில்லை. அர்த்தமற்ற சத்தங்களை மட்டுமே அவர்கள் வாயால் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு அந்நிய மொழியைப் பற்றி வேதாகமம் பேசுவது உண்மையே (1கொரி 14:2) என்றாலும் அதைப் பேசும் தனிப்பட்ட மனிதன் பேசுவதை அறியாமல் இருக்கவில்லை இங்கு, பேசுகிறவருக்கு நான் பேசுவது புரிகிறது; ஆனால் கேட்பவர்களுக்கு அது புரியவில்லை. இப்படியாக, அவருடைய புரிந்துகொள்ளுதல் பயனற்றதாக இருக்கிறது. அதின் விளைவாக, அவர் தேவனிடம் பேசுகிறார். (புரிவதின் மூலமாக) அவருக்குப் பக்திவிருத்தி உண்டாகிறது ஆனால் கேட்கிறவர்களுக்கு அது அர்த்தமற்றதாக இருக்கிறது. ஏனெனில் அவருடைய மொழி அவர்களுக்கு அறியாததாக இருக்கிறது (1 கொரி 14:4)

"மொழி" என்பதற்கு புரியக்கூடிய வார்த்தைகள் என்று எழுத்தர் குறிப்பிடுகிறார் என்று நாம் அறிவோம். ஏனெனில்

பவுல் விளக்குகிறார், "அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியா விட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே" (1 கொரி 14:9) தொடர்ந்து பவுல் கூறுகிறார் : "என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும் இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்" (1 கொரி 14:14, 15) இங்கு அந்நிய மொழி என்பது கேட்பவர்களுக்குப் புரியாத மொழியாகும். எனவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பவுல் கூறும்போது, தான் ஜெபம் செய்து கொண்டிருக்கும்போது, அதைக் கேட்பவர்களுக்கு அவருடைய ஜெபம் அர்த்தமற்றதாகத் தோன்றும் என்று சொல்லுகிறார். அவர் பாடுவதைப் பற்றியும் இந்நிலையே தான் உண்மை எனக் கூறுகிறார். எனவே அவர் ஆவியோடும் புரிந்து கொள்ளுதலோடும் ஜெபிக்கவும், பாடவும் தீர்மானித்தரர்.

அந்நிய மொழியைப் பற்றி பவுல் பேசும்போது, அவர் மொழிகளைப் பற்றித்தான் பேசுகிறார். இப்படியாக அறியாத மொழி பற்றிக் குறிப்பிடும்போதும், தெரியாத ஒரு மொழியைப் பற்றியே பேசுகிறார். தொடர்ந்து அவர் எண்ணத்தை தெரிவிக்கும்போது, "இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்ரத்திற்கு ஆமென்" என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடைய மாட்டானே. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான்

சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" (1 கொரி. 14:16-19)

தொடர்ந்து, அப்போஸ்தலர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார், "மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்; ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாள மாயிருக்கிறது; தீர்க்கத் தரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாள மாயிருக்கிறது" (1 கொரி. 14:21, 22)

மீண்டும் கவனியுங்கள் : "யாராவது அந்நிய பாஷையில் பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்றுபேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும் ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் (என்ன பேசுகிறான் என்பதை பேசுகிறவன் அறிந்து எனப் பொருள்) தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்" (1கொரி 14:27, 28). அந்நிய மொழி என்பது அதைக் ***கேட்கும் படிப்பறிவில்லாதவர்களுக்குப்*** புரியாத ஒரு மொழி. எனவே, யாராவது அந்நிய மொழியில் பேசுகிறவர்கள் இருந்தால், அவர்கள் வரிசையாக பேசட்டும். அது மொழியாக்கம் செய்யப்படட்டும். ஆனால் மொழியாக்கம் செய்பவர் இல்லையெனில், பின் அங்கே அமைதியாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத் தானேயும், தேவனோடும் பேசவேண்டும். வேறுவிதமாகக் கூறின், அவர்களுடைய சொந்த தனிச்ஜெபங்களை அவர்கள் செய்ய வேண்டும்.

இப்போது வேறுமொழிகளில் பேசும் வல்லமை யாருக்கு அன்று இருந்தது? அப்போஸ்தலர்களுக்கு இருந்தது. ஏனெனில், கர்த்தர் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கை அவர்களுக்கு வாக்களித்திருந்தார். அதின் விளைவான அடையாளங்களில் ஒன்றுதான், அவர்கள் அந்நிய மொழிகளில் பேசினார்கள் என்ற உண்மையாகும் (அப் 2:6) புறஜாதியாரும்கூட தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர் எனக்காட்ட கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அவர்களும் அந்நிய மொழிகளில் பேசினர் (அப்.10). பின்னர், அப்போஸ்தலர்கள் யார்மேல் கைகளை வைத்தனரோ அவர்களும் பரிசுத்த ஆவியில் திருமுழுக்கைப் பெற்றனர். அந்நிய மொழிகளில் பேசும் வல்லமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டது (அப்.19:1-7) வேறு யாராவது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றார்களா? யாராவது இருந்தால், வேதாகமம் ஒரு இடத்திலும் அப்படிச் சொல்லவில்லையே! ஆனால் இம்மனிதர்கள் இந்த வல்லமையை ஏன் பெற்றனர்? ஒரு பிராந்திய மொழியைக் கற்றுக் கொள்ளத் தேவையான கால அவகாசத்தை எடுக்காமல் அல்லது ஒரு மொழியாக்கம் செய்பவரை அமர்த்திக் கொள்ளாமல், உலகம் எத்திசையிலும் சென்று நற்செய்தியை பிராந்திய மொழியில் போதிக்கும் ஆற்றலைப் பெற இந்த வல்லமையைப் பெற்றனர். இது எவ்வளவு காலம் நீடிக்கவிருந்தது? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு உலகத்திற்குக் கொடுக்கப்படும் வரை காலம் வரும். அப்போது அந்நிய மொழி (அற்புதமாகப் பேசப்படுவது) ஒழிந்துபோகும் என பவுல் கூறினார் (1கொரி. 13:8-10; யாக்கோபு 1:25) எனவே, இன்று அற்புதமாக அந்நிய மொழி பேசப்படுவதில்லை. அதற்கு எவ்விதத் தேவையுமில்லை. வேதாகமம் உலகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

***அந்நிய மொழிகளில் பேசுவதாக உரிமை கோருவோர்கூட பல காரியங்களைக் கவனிக்கத் தவறுகின்றனர்.***

1. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லை.
2. "கைகளை வைத்துக்கொடுக்கும்" அளவிலான பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் மட்டுமே பிறரின்மேல் கைகளை வைத்துக் கொடுக்கக்கூடியவர்களாக இருந்ததாலும், அப்போஸ்தலர்கள் அனைவரும் மரித்துபோனதாலும், ஒருவரும் அந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெறமுடியாது.
3. அந்நிய மொழிகளில் பேசுவதென்பது, அறியாத ஒரு வேற்றுமொழியையே குறிப்பதாக இருந்தது.
4. அவிசுவாசிக்கே அந்நிய மொழியில் ஒருவர் பேசுவது தேவைப்பட்டது. (ஆனால் இன்று அவர்களுடைய மதச்சடங்குகளில் அநேகமாக விசுவாசிகளின் மத்தியில் மட்டுமே அது நடக்கிறது.)
5. இன்று உரிமைகோருபவர்களுக்கு தாங்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாவிட்டால், மேலும் கேட்பவர்களுக்கும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாவிட்டால், பின்னர் தேவனுக்குத் தெரியும் என்று அவர்கள் எவ்வாறு எதிர்பார்க்கலாம்? புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இவ்வழியில் நடக்கவில்லை. எனவே மனிதர்களுக்கு அதே வல்லமை இன்று இல்லை என்பது தெளிவு.
6. இன்று அந்நிய மொழியில் பேசுவதாகக் கூறுவோர், பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பேசியதைப் போன்று வேற்றுமொழிகளில் பேசமுடியாது. இலங்கைக்கு இவர்களுடைய பெரிய போதகர்கள் வரும்போது, "அந்நிய மொழி வரம்" இருப்பதாக உரிமை கோராத

நம்மைப்போலவே மொழியாக்கம் செய்கிறவர்களை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, எந்த வழியிலேயும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட அந்நிய மொழியோடு இன்றைய நாளில் உரிமை கொண்டாடும் "அந்நிய மொழி"யை ஒப்பிட இயலாது.

முடிவாக, பல மக்கள் இன்று ஏமாற்றப் பட்டிருக்கின்றனர் என்பது தெளிவு. இந்தக் காரியத்தில் நீங்கள் உண்மையை அறிந்து கொள்ள உங்கள் வேதாகமத்தைப் படித்து, கற்றுக் கொள்ள உங்களை வேண்டுகிறோம். ஆனால் உங்களிடம் ஏதோ சக்தி உள்ளதென்றோ அல்லது பிறரிடம் அப்படிப்பட்ட சக்தி இருப்பதாகவோ எண்ணி ஏமாந்துபோக வேண்டாம். ஏனெனில், உண்மையில் அப்படிப்பட்ட எந்த வல்லமையும் இன்று மனிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

# 31. மதப்பெயர்களும், பட்டங்களும்

மனிதன் தற்பெருமையுள்ளவன். புகழ்ச்சி, கௌரவம், மகிமை ஆகியவற்றை அவன் விரும்புகிறான். பட்டங்களை நேசிக்கிறான். பதவிப் பசியில் அலைகிறான். வெறும் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க அல்லது கற்பிக்கிறவனாக இருக்க அல்லது தேவன் விரும்புவது போல இருப்பது மட்டுமே அவனுக்குப் போதுமானது இல்லை. அவனுடைய தேவை இன்னும் அதிகம். இந்த அடங்காத ஆவலைப் பூர்த்திசெய்ய பெயர்களையும், பழக்கங்களையும் அவன் விருப்பத்திற்கேற்ற பதவிகளையும் மனிதன் உண்டாக்கியிருக்கிறான். எனவே தான், தேவனிடமிருந்து வராத பெயர்களையும், பட்டங்களையும், பதவிகளையும் மனிதன் தரித்துக் கொள்ளுவதை நீங்கள் கவனிக்கலாம். மாறாக, அவர் இவற்றைக் கண்டித்துப் பேசினார்.

## இவைகளில் சிலவற்றை நாம் பார்ப்போம் :

### 1. "ரெவரெண்ட்" (வணக்கத்திற்குரிய அல்லது அருள்திரு) :

பல மதத்தலைவர்களால் இப்பட்டம் அணிந்து கொள்ளப்படுகிறது. ஆனாலும் இதற்குப் போதிய அழுத்தம் கொடுக்க அவர்களால் இயலவில்லை எனத் தெரிகிறது எனவேதான், "ரைட் ரெவரெண்ட்" (சரியான வணக்கத்திற்குரிய), "மோஸ்ட் ரெவரெண்ட்" (மிகவும் வணக்கத்திற்குரிய) போன்ற பட்டங்களையும் அவர்கள் வைத்துக் கொள்ளுகின்றனர். இவர்களும் இவர்களை கனம் பண்ணுகிறவர்களும் இந்தப்பட்டங்களால் இவர்களை அழைக்கும் வேளையில், வேதாகமம் முழுவதிலுமாக "ரெவரெண்ட்" என்ற சொல் ஒரே ஒரு தடவை மட்டுமே காணப்படுகிறது என்பதையோ, அச்சொல் தேவனை மட்டுமே குறிக்கிறது என்பதையோ அவர்கள் அறிந்திருக்கவில்லை

தேவனைப் பற்றி பேசும் போது, தாவீது கூறினார். "... அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமும் ஆனது" (சங்கீதம் 111:9). இப்போது உங்களிடம் ஒரு கேள்வி : உங்கள் போதகரை "ரெவரெண்ட்" என்று நீங்கள் அழைக்கிறீர்களா? அப்படியானால் அவர் தேவனா? இந்த வார்த்தையை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் வெட்கப்பட வேண்டும். அது தேவனுக்கு மட்டுமே சொந்தமானது. அவரிடமிருந்து அதை எடுத்துப்போட நாம் முயற்சிக்க வேண்டாம்.

## 2. "பாதர்" (குரு அல்லது தந்தை) :

ஆயிரக்கணக்கான மதத்தலைவர்கள் "பாதர்" அல்லது "தந்தை" என அழைக்கப்படுகின்றனர். "தந்தை" என்று மட்டும் அல்ல, அவர்கள் "பரிசுத்த தந்தை" என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்த பட்டத்தை சுமந்து கொண்டு திரிபவர்களை வேறுவிதமாக அழைத்தால் தங்களை அவமானப்படுத்துவதாக உணருகின்றனர். இவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்து கூறியதை நினைவில் கொள்ள வேண்டும். "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள் ; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்" (மத்தேயு 23:9) அதேபோன்று "ரபி" (குரு) அல்லது "எஜமான்" என மனிதர்கள் பயன்படுத்தும் பட்டங்களையும் அவர் கண்டித்தார். தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்துவது, இக்காரியங்களில் கர்த்தரை பகிரங்கமாகப் பழிப்பதாகும்.

## 3. "பாஸ்டர்" :

ஒரு குறிப்பிட்ட சபையில் பிரசங்கம் செய்வதைக் குறிக்கும் வகையில், அநேக நாமகரண சபை போதகர்கள் "பாஸ்டர்" என்ற பட்டத்தை பயன்படுத்துகின்றனர். ஆனால் சுவிசேஷத்தில் எந்த இடத்திலும் இந்த அர்த்தத்தில் "பாஸ்டர்" என்ற பட்டம் குறிக்கப்படவில்லை. நாம் "பாஸ்டர்கள்" என

பண்மையில் தான் படிக்கிறோம். ஆனால் "பாஸ்டர்" என்று ஒருமையில் அல்ல மேலும், முதலாவது நூற்றாண்டில் பாஸ்டர்களாக இருந்தவர்கள், 1 தீமோத்தேயு 3ம் அதிகாரத்திலும் தீத்து 1ம் அதிகாரத்திலும் பவுல் குறிப்பிட்டிருக்கும் பல தகுதிகளையும் பெற்றிருந்தபடியால், அப்படிப்பட்ட பட்டத்தைப் பெற்றனர் அவர்கள் பிஷப்கள், மூப்பர்கள், ஆயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எப்போதுமே பாஸ்டர்கள் அல்லது பிஷப்கள் என பண்மையில் இருந்தனர். இன்றைய மத உலகில் பயன்படுத்துவது போன்றது சுவிசேஷத்திற்கு மாறானதும் அர்த்தமற்றதுமாகும்.

### *4. "டாக்டர்" :*

கல்வியின் நிமித்தமாக ஒருவர் டாக்டர் பட்டம் பெற்றிருப்பதற்காக, மதப்பட்டத்தைப் போல அவர் அதை உபயோகிக்க வேண்டுமென்று பொருளல்ல. அவ்வாறு உபயோகிப்பது அப்பட்டத்தை தவறாக உபயோகிப்பதாக சுட்டிக்காட்டப்படும், பதவிகளுக்காக அலைவதையும் இயேசு கண்டித்தார் (மத்தேயு 20:25-28).

### *5. "போப்" :*

சுவிசேஷத்தில் காணப்படாத ஒரு பட்டம் இது. ஒரு சாதாரண மனிதன் சபையின் உலகத்தலைவராக தன்னைப் பாவித்துக்கொண்டு, "போப்" என்ற பட்டத்தையும் தரித்துக் கொள்ளுவதை தேவனோ, கிறிஸ்துவோ, சுவிசேஷங்களோ எங்கேயும் கூறவோ, கற்றுக்கொடுக்கவோ இல்லை. இது தேவனிடமிருந்து வந்த காரியமல்ல. கிறிஸ்துவே சபையில் தலைவராக இருக்கிறார் என்று சுவிசேஷங்கள் கூறுகின்றன (கொலோசெயர் 1:18; எபேசியர் 1:22, 23) உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனை சபையில் தலைவராக ஏற்றுக் கொள்ளுவது கிறிஸ்து உயிரோடு இல்லை. அவர் மரித்துவிட்டார் என்று முடிவு செய்வதாகும்.

மேலே கண்ட பட்டங்கள் மட்டுமல்ல, இன்றும் இதே பட்டியலில் காணப்படும் நூற்றுக்கணக்கான காரியங்களும் சுவிசேஷங்களில் விலக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தேவமாதா, பாதிரியார், பிஷப், ஆர்ச் பிஷப், தலைவர், பாஸ்டர், இத்தியாதி. இவை தேவனுடைய அதிகாரத்திற்குப் புறம்பாக மதத்திலுள்ள தனிப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பெயர்களும், பட்டங்களும் ஆகும். மனிதனால் உண்டாக்கப்பட்ட இவைபோன்ற பெயர்களும், பட்டங்களும் தேவனுடைய வசனத்தால் கண்டிக்கப்படுகின்றன. மக்கள் அதை ஏன் கவனிக்க முடியவில்லை? கர்த்தரின் கட்டளைகளை பகிரங்கமாக எதிர்க்க ஒருவர் ஏன் விரும்ப வேண்டும்? அவர்களுடைய அடங்காப் பிடாரித்தனம், கீழ்ப்படியாமை, தற்பெருமை போன்ற பரம்பரை ஆசை இவற்றின் விளைவுதான் என்ற முடிவுக்குத்தான் நாம் வர இயலும்.

மத உலகம் பிரிந்திருப்பது ஏன்? சரி, இதுவும் ஒரு காரணம், ஆனால் ஒற்றுமைக்கு வழி வகுப்பதாக இருப்பின், சராசரி மதத்தலைவர் இந்தப் பட்டங்களை உதறிவிட விரும்புவர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பெரும்பாலானோர் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பெருமை அதிகம். தங்களைத்தாமே அதிகமாக அவர்கள் நேசிக்கின்றனர். இதைப் படிக்கக்கூடிய மதத்தலைவர்கள், சுவிசேஷத்திற்கு எதிரான தங்களுடைய பட்டங்களை மனப்பூர்வமாக உடனே விட்டுவிடுவார்கள் என்னும் கருத்தில் இது எழுதப்படவில்லை. ஏனெனில், ஏறக்குறை ஒருவருக்கும் அந்த எண்ணம் வராது.

மாறாக, தாங்கள் செய்து கொண்டிருக்கும் தவறைப் பற்றி அறியாதவர்கள் தாங்கள் எதைச் செய்கிறார்கள் என்பதை அக்கரையுடன் சிந்திக்க வேண்டும் என்பதற்காக இது எழுதப்படுகிறது. ஒருவேளை இந்தக் காரியங்களைப் பற்றி எதுவும் எண்ணாமல் நீங்கள் குருட்டுத்தனமாக குருடரைப் பின்பற்றி இப்படியாக தொடக்க முதல் இறுதிவரை சுவிசேஷத்திற்கு விரோமான பட்டங்களை அணிந்து வாழ்ந்து

கொண்டிருக்கலாம். இப்படியாக, உங்களை "ஞானமற்ற சாதாரண மனிதனாக" (Laity) ஏற்றுக்கொண்டு (மீண்டும் சுவிசேஷத்திற்கு மாறான ஒரு பெயர்) "மதத்தலைவர்" (Clergy) என்னும் மற்றுமொரு வேதத்துக்கு விரோதமான பெயரைத் தரித்துள்ள மனிதனுக்கு, சுவிசேஷத்திற்கு மாறான பல பெயர்களையும், பட்டங்களையும் சூட்டி கனம் செய்கிறீர்கள். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதிலிருந்து விழித்து எழும்படி உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக என்னுடைய வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம். ஆனால் வேதாகமத்திற்குச் செல்லுங்கள் அங்கே "ரெவரெண்ட் பேதுரு, டாக்டர் பவுல், பாஸ்டர் யோவான் அறிவர் அந்தோனி" இப்படியாக நீங்கள் காணமுடிகிறதா? எனப்பாருங்கள். நற்செய்தியைப் போதிக்கும் ஒருவர் எப்போதாவது "தந்தை" "போப்" என்று அழைக்கப்பட்டதாக நீங்கள் படிக்க முடிகிறதா? அங்கத்தினர்கள் "ஞானமற்ற சாதாரண மக்கள்" (Laity) என்றும் பிரசங்கிமார்கள் "மதத்தலைவர்கள்" (Clergy) என்றும் எப்போதாவது அழைக்கப்பட்டனரா? என்று சுவிசேஷத்திற்குச் சென்று பாருங்கள். அப்படி நீங்கள் பார்த்தால் உண்மையைக் கண்டுபிடிப்பீர்கள்.

அப்படியானால், மதத்தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பிரசங்கிமார், கற்பிக்கிறவர்கள், போதகர்கள், மூப்பர்கள், கிறிஸ்தவர்கள், சகோதரர்கள் என அழைக்கப்பட்டனர். கர்த்தருடைய சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருந்தது சுவிசேஷத்தின்படியாக நாம் இருக்க முடியும் போது, அதற்கு மாறாக நாம் இருக்க வேண்டாம். சத்தியத்தை நாம் பின்பற்ற முடியும்போது தவறைப் பின்பற்ற வேண்டாம். கர்த்தர் நமக்குத் தந்த பெயர்களையும், பட்டங்களையும் மட்டுமே நாம் பயன்படுத்துவோம். அப்படிச் செய்யும்போது மாத்திரமே நாம் சரியாக இருக்க முடியும்.

# 32. சுதந்திர போதகர்களும், சபைகளும்

இன்று அநேக சபைகள் உள்ளன, அநேக போதகர்களும் உள்ளனர். இவற்றில் அதிகமானவை நாமகரண சபைகளே. மற்ற அநேகர் தங்களை சுதந்திரமானவர்கள் என பிரகடனம் செய்து கொள்ளுகின்றனர். இதற்கு என்ன பொருள் கூறுகின்றனர்? எந்த ஒரு குறிப்பிட்ட நாமகரண சபையிலும் தங்களுக்குத் தொடர்பில்லை என அவர்கள் இதற்குப் பொருள் கூறுகின்றனர். ஒருவேளை ஒரு காலத்தில் தொடர்புள்ளவர்களாய் இருந்திருப்பர். ஆனால் ஏதோ ஒரு காரணத்தால், பின்னர் விடுவித்துக் கொண்டு தங்களின் மாற்று வழியில் செல்லுகின்றனர்.

ஒரு நாமகரண சபையில் அடிக்கடி ஒரு கொள்கை பிரச்சனை அல்லது தனிப்பட்ட மோதல் ஏற்படுவதுண்டு. இதன் விளைவாக அங்கிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனி மனிதர்கள் பிரிந்து ஒரு புது சபையை ஆரம்பிக்கின்றனர். சில வேளைகளில், சுதந்திரமாக செயல்பட முயற்சிப்பவர்கள், நாமகரண சபையின் போதனைகளிலிருந்தும், பழக்கங்களிலிருந்தும் விடுபடும் விருப்பத்தில் அவ்வாறு செய்கின்றனர். பின்னர் பிற குழுக்களுடன் பணியாற்ற விரும்பாதவர்கள் எப்போதுமே இருக்கின்றனர். ஏனெனில் அங்கே அவர்கள் செய்யும் வேலைக்கும், குறிப்பாக அவர்கள் வசூல் செய்யும் எல்லா பணங்களுக்கும் கணக்கு கொடுக்க வேண்டியதிருக்கும். எனவே அவர்கள் சுதந்திரப் பறவைகளாக வெளியேறிச் சென்று அதை நடத்தவும், அதிகாரம் செய்யவும், அங்கிருந்து வரும் உலக லாபங்களைப் பெறவும் சுதந்திரமான பணித்தளங்களை கட்டுகின்றனர்.

இங்கே, குறிப்பாக இந்தியாவில் இவ்வாறான சுதந்திரப் போதகர்களும், வேலைகளும் நிறைய உள்ளன. ஒவ்வொரு மனிதனும் ஒரு முழு நேரப் போதகனாக இருக்க விரும்புவதாகத் தெரிகிறது. ஒவ்வொரு முழு நேர போதகனும் தனது சொந்தக் குழுவை அமைத்துக் கொள்ள விரும்புகிறான். பிற போதகர்களுடன் சேர்ந்து பணியாற்று வரை மிகக் கடினமாக அவர்கள் காண்கின்றனர். பல வேளைகளில் அவர்கள் வெறும் கூலிக்கு மாரடிப்பவர்களாகவே இருக்கின்றனர். “கிறிஸ்தவத்திற்குள் மட்டுமல்ல, பிற மதங்களிலும் இத்தகைய நிலை நிலவுகிறது. தங்களைத் தாங்களே “குருக்கள்” என்று அழைத்துக் கொள்ளும் பலரை எண்ணிப் பாருங்கள். உங்களைச் சுற்றி நடமாடிக் கொண்டிருக்கும் “சாமியார்கள்” எத்தனைபேர் என்பதைப் பாருங்கள். எப்போதுமே தன்னைப் பின்பற்றுகிறவர்களைத் தேடி, அவர்களை வெளியேற்றிக் கொண்டு போய் வழி நடத்துகிறவர்களைக் காண முடியும். மனிதன் மிக எளிதில் ஏமாந்து விடுகிறான்; தான் ஏமாற்றப்படவும் விரும்புகிறான் என்றும் தெரிகிறது.

சொல்லப்போகும் காரியம் உங்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருக்கலாம். ஆனால் சுதந்திர போதகர்களையும் சபைகளையும் பற்றி வேதாகமத்தில் நாம் படிக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்களா? பிரிவினை ஏற்படுத்தியவர்களைப் பற்றி நாம் படிக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் குறிக்கப்பட்டு ஒடுக்கப்பட வேண்டும் என்பதாக சுவிசேஷம் கூறுகிறது. ஏனெனில் அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யவில்லை (ரோமர் 16:17, 18). கள்ளப்போதகர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகள், பொருளாசையுடையவர்கள் பற்றியும் நாம் படிக்கிறோம். சந்தேகமின்றி, அவர்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றனர் (2 பேதுரு 2:1 யோவான் 4:1 யோவான் 10:12, 13).

பவுல், பேதுரு மற்றுமுள்ள எல்லா போதர்களும், ஆசிரியர்களும் சுதந்திரவாளிகள் என சொல்லப்பட்டவோ அல்லது வர்ணிக்கப்பட்டவோ இல்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் சிண்டு பிடித்துக் கொள்ளவில்லை அல்லது எதிர்த்து வேலை செய்யவில்லை அல்லது போட்டி போடவில்லை. மாறாக அவர்கள் சேர்ந்து பணியாற்றினர். மகிழ்ச்சியாக இணைந்திருந்தனர். துன்பங்களை சேர்ந்து அனுபவித்தனர் இத்தியாதி, இத்தியாதி ... (அப் 2; அப் 8; 1 கொரி 12;26)

பேதுரு தனக்கு ஒரு சபையும், பவுல் மற்றொரு சபையும் அல்லது யோவான் தனக்கென்று ஒரு சபையும், பின் யாக்கோபு ஒரு சபையும் வைத்துக் கொண்டிருந்ததாக தேவனுடைய வார்த்தையில் நாம் படிக்கிறதில்லை. அல்லது வேறு எந்த அப்போஸ்தலர்களாவது அங்கத்தினர்களாவது சபையைத் தங்களுடையது என்க்குறிப்பிட்டு பேசுவதாக நாம் படிப்பதில்லை. கர்த்தருடைய சபை ஒன்று மட்டுமே நாம் படிக்கிறோம். அவ்வளவு தான் (மத்தேயு 16:18; எபேசியர் 5:23)

சுவிசேஷம் முழுவதையும் நீங்கள் படிக்கும் போது, ஒரே ஒரு சபையைப் பற்றி மட்டுமே அங்கு குறிக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள் (எபேசியர் 4:4; கொலோசெயர் 1:18) அது கிறிஸ்துவின் சபை. இது பல பிராந்திய சபைகளாக ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒவ்வொரு பிராந்திய சபையும் பல அங்கத்தினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் சுதந்திரமாக செயல்பட்ட போதிலும், ஆளுமை சம்பந்தப்பட்ட அளவில், ஒன்றுக்கொன்று எதிர்த்து பணியாற்றவோ அல்லது சண்டையிலோ சுதந்திரம் உடையதல்ல. மாறாக, ஒன்றுக்கொன்று ஐக்கியமாகவும், கர்த்தரின் காரியத்தில் முன்னேறும் அக்கறையில் ஒற்றுமையோடு பணியாற்றவும் செய்கின்றனர்.

ஒரு தனி மனிதனாகவோ அல்லது ஒரு சபையாக சுதந்திரமாக இருப்பதென்றால், கர்த்தரையும் அவருடைய சபையையும் விட்டு, மாறான ஒரு சுதந்திர அமைப்பில் நீங்கள் இருப்பதாகத்தான் அர்த்தம். எனவே கர்த்தருக்கும் அவருடைய காரியங்களுக்கும் ஒரு போட்டியாளனாக நீங்கள் ஆகிறீர்கள். அதாவது, அவரோடு இருப்பதற்குப் பதிலாக அவருக்கு மாறாக இருக்கிறீர்கள்; அவருக்கு இருப்பதற்குப் பதில் அவருக்கு எதிரியாக இருக்கிறீர்கள் (மத்தேயு 12:30). அதைத்தான் நீங்கள் விரும்புகிறீர்களா? வாழ்வில் இதுதான் உங்கள் ஊழியமா? நீங்கள் செய்து கொண்டிருப்பதைப்பற்றி மிகவும் அக்கறையோடு எண்ணிப் பார்க்கவும், அவற்றில் சில திருத்தங்களைச் செய்வது மிகவும் தேவை.

நீங்கள் சுதந்திரவாளியாக இருப்பதில் கர்த்தருக்கு எவ்வித விருப்பமும் இல்லை. ஆனால் நீங்கள் அவருக்கு கீழ்ப்படிந்து ஒரு கிறிஸ்தவனாக இருப்பதையே அவர் விரும்புகிறார். சுதந்திரவாளிகள் எவ்வாறு கிறிஸ்தவர்கள் இல்லையோ, அதே போல கிறிஸ்தவர்களும் சுதந்திரவாளிகள் அல்ல. மனிதர்களுடைய நாமகரண சபைகளுக்கு நீங்கள் விரோதமாக இருப்பின் நீங்களும் வேறொன்றைத் தொடங்கி நாமகரணக் கூட்டத்தில் இணைந்து போக வேண்டாம். மாறாக, கர்த்தரின் சபையில் ஒரு அங்கத்தினராக இருங்கள். நீங்கள் போதிக்க விரும்பினால் போதியுங்கள்; ஆனால் சத்தியத்தைப் போதியுங்கள் (2 தீமோத்தேயு 4:2)

நீங்களாகவே ஒரு மத அமைப்பை உருவாக்கி, மக்களை அதில் அங்கத்தினர்களாக்கும் வேலையில் ஈடுபட ஒருவரும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. அது சுதந்திரமாக இருக்கலாம். ஆனால் அது மட்டுமேதான். அதன் விளைவாக நீங்களும் உங்களைப் பின்பற்றுகிறவர்களும் வீழ்ந்து போவீர்கள்.

நீங்கள் வேதாகமத்திற்குத் திரும்பி வரவும், தூய புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளவும் உங்களை வலியுறுத்துகிறோம். தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள், உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுங்கள், கிறிஸ்துவை அறிக்கை செய்யுங்கள், பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறுங்கள் (மாற்கு 16:15, 16; அப். 2:38) அவ்வாறு செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக் கொள்ளுவார். (அப். 2:47; அப். 20:28). இது உங்களை நாமகரண சபையில் சேர்க்காது. ஆனால் உங்களை கிறிஸ்தவர்களாக்கும் (1 பேதுரு 4:16). பின்னர், ஒரு கிறிஸ்தவனாக இருந்து, நீங்கள் போதிக்கலாம். தேவனுடைய வசனத்தைக் கற்பிக்கலாம். நீங்கள் செய்திருப்பது போலவே ஒவ்வொருவரையும் செய்யச் சொல்லி உற்சாகப்படுத்தலாம். அப்படிச் செய்தால் மட்டுமே நீங்கள் சரியான காரியத்தைச் செய்வீர்கள். அதன் பின்னரே நீங்கள் விடுதலை பெறுவீர்கள் (யோவான் 8:32)

# 33. கிறிஸ்துவின் இரண்டாவது வருகை

கிறிஸ்து ஒரு முறை வந்தார்; ஆனால் அவர் மீண்டும் வருகிறார். அவருடைய முதல் வருகை கடந்த காலத்தில் நிகழ்ந்தது; ஆனால் அவருடைய இரண்டாவது வருகை எதிர்காலத்தில் இருக்கும். கடந்த காலத்தில் அவர் மாம்சத்தில் வந்தார். ஆனால் வருங்காலத்தில் மகிமை பொருந்திய ஒரு கர்த்தராக அவர் வரப்போகிறார். முன்பு மனிதனுடைய இரட்சகராக வந்தார். அவருடைய வருங்கால தோற்றத்தில் மனிதனை நியாந்தீர்ப்பவராக வருவார். அவர் திரும்பிச் சென்றது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக அவர் மீண்டும் வருவார்.

தமது சீடர்களை விட்டு கர்த்தர் பிரியும் போது, அவர்களிடம் கீழ்க்கண்டவாறு வாக்களித்தார் : "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 14:3). கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில், பதிவேடு கூறுகிறது. "இவைகளை அவர் சொன்னபின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதே வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப் 1:9-11)

கிறிஸ்து இந்த பூமியில் மீண்டும் ஒரு முறை வருவார் என்றும், அவருடைய சீடர்களுடன் எருசலேமில் ஆயிரம் வருடங்கள் ஆட்சி செய்வார் என்றும் சிலர் கற்பித்து

வருகின்றனர் என்ற போதிலும் வேதாகமம் இவ்விதமாக எதையும் கற்பிக்கவில்லை. அப்போஸ்தலருடைய நடபடி தம் அதிகாரத்தில் சற்றுமுன் நாம் கண்டபடி, எவ்வாறு கர்த்தர் எடுத்துக் கொள்ளப்பட்டாரோ, அவ்வாறே ஒரு நாள் மீண்டும் வருவார். ஆனால் கிறிஸ்து இப்பூமியில் மீண்டும் காலைப் பதிப்பார் என்று சுவிசேஷத்தில் ஒரு இடத்திலும் காணப்படவில்லை. மாறாக கிறிஸ்து மேகங்களின் ஊடே வருவார் என்றும், கர்த்தரை சந்திக்க நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்றும் சுவிசேஷம் கற்பிக்கிறது. அதை உறுதிப்படுத்தும் வண்ணம், நாம் அந்த வசனங்களைப் பார்ப்போம். "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலச் .................. அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமோ; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார். கர்த்தருடைய வாழ்க்கையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளிலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெசலோ 4:13-18)

கிறிஸ்து மீண்டும் எப்போது வருவார்? கர்த்தரின் இரண்டாவது வருகையை முன்னறிவிக்கும் பலர் இருந்து வருகின்றனர். கர்த்தரின் இரண்டாவது வருகையின் நாளை வேதாகமம் குறிப்பாக உணர்த்துவதாக எண்ணி வருகின்றனர்.

மேலும் இந்த இரகசியத்தின் திறவுகோலை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாகவும், எனவே அவற்றை இவ்வுலகத்திற்கு தெரிவிக்கக் கூடும் என்றும் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மக்கள் அனைவரும் தங்களைத் தாமே முட்டாள்களாக்கிக் கொள்ளுகின்றனர். இவை அனைத்துக்கும் மேலாக, இந்த நாளில் அவர் வருவார் என்று திட்டமாகக் குறிப்பிட்டுக் கூறும் சிலரும் கூட இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களும் போலிகள் எனத் தோலுரித்துக் காட்டப்படுவர். இந்த இடைவேளையில், இவர்களை நம்பி மோசம் போகும் மக்களும் இருக்கின்றனர். இது மிகவும் வேதனை அளிக்கும் காரியம். ஆனால் கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நேரத்தை அறிந்துள்ள ஒரு மனிதன் கூட இந்த பூமியில் கிடையாது. இப்படிப்பட்ட அறிவிப்பை ஏன் கூறுகிறேன்? ஏனெனில் கிறிஸ்து தாமே கூறுகிறார் : "அந்த நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத் 24:36) இப்போது, தூதர்களும் அறியமாட்டார். தேவன் மட்டுமே கர்த்தரின் வருகையை அறிவார் என்றார், நானோ அல்லது வேறு எந்த ஒரு மனித ஜீவனோ எப்படி அறிய முடியும்? நம்மால் முடியாது.

மீண்டுமாக பதிவேடு கூறுவது போல கிறிஸ்து ஒரு திருடனைப் போல வருவார். அவர் திருடன் அல்ல, ஆனால் அவர் ஒரு திருடனைப் போல வருகிறார். அதாவது முன்னறிவிப்பு எதுவுமின்றி அவர் வருவார் என்று பொருள். கேளுங்கள் : "இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறது போல, அழிவு சமேதியாய் அவர்கள் மேல் வரும், அவர்கள் தப்பிப் போவதில்லை. சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல் உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே". (1தெச. 5:2-4)

கர்த்தரின் இரண்டாவது வருகையைப் பற்றி வேறு சில காரியங்களை நாம் அறிவோம். உதாரணமாக நாம் அனைவரும்

அவரைக் காண்போம் : "இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்..." (வெளி. 1:7). மேலுமாக, வானமும் பூமியும் அதிலுள்ள சகலப் பொருட்களும் அழிக்கப்பட்டு, எரிந்து போகும் : "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும் ; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம், (2 பேதுரு 3:10) அதே போல, கர்த்தர் பழிவாங்க வருகிறார். "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராகவும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும் விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது .. (2 தெச 1:7-9)

கர்த்தர் மீண்டும் வரும் போது, நன்மை செய்தவர்களும், தீமை செய்தவர்களும் ஆக அனைவரும் உயிர்த்தெழும் சம்பவம் நிறைவேறும் (யோவான் 5:28, 29). தமது மணவாட்டி அல்லது சபையை வரவேற்க அவர் வருவார். அது தேவனுடைய ராஜ்ஜியம் என்றும் அழைக்கப்படுகிறது. கர்த்தருடைய தூதர்கள் அங்குள்ள கெட்டவர்களை அக்கினியிலே போடுவார்கள் (எபே. 5:27; மத் 13:41, 43). இறுதியாக, உலகத்தை நியாந்தீர்க்க கிறிஸ்து வருகிறார் (மத் 25; அப் 17:31; 2 கொரி. 5:10).

ஆம், கர்த்தர் நிச்சயமாக மீண்டும் வருகிறார். எப்போது என்று நமக்குத் தெரியாது, ஆனால் அவர் வருகிறார். கேள்வி என்னவென்றால், நாம் தயாராக இருப்போமா? ஆயத்தமாக இருக்க இன்றே சரியான நேரம். நாளை கால்தாமதமாகி விடலாம். மத்தேயு 24:36-39; லூக்கா 12:14-48 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.